
தேவியின்
கண்மணி
ஆர்.மகேஸ்வரி
ரூ.15
வண்ணம் கொண்ட
வெண்ணிலவு

# சமையல்

## பேரீச்சம் பழ அப்பம்

**தேவையான பொருட்கள்:**
பேரீச்சம் பழம்- 10, பால்- 1 கப், மைதாமாவு- ½ கப், அரிசிமாவு- ½ கப், தேங்காய்த்துருவல்- 3 டேபிள்ஸ்பூன், வெல்லத்தூள்- 150 கிராம், ஏலக்காய்- 3, சோடா உப்பு- ¼ ஸ்பூன், எண்ணெய்- தேவையான அளவு.

**செய்முறை:**
பாலைக் காய்ச்சி ஆறவிட்டு தேங்காய், பேரீச்சை சேர்த்து அரைக்கவும். அரைத்த கலவையுடன் மைதாமாவு, வெல்லம், ஏலத்தூள் சேர்த்து தோசைமாவு பதத்திற்கு கரைத்துக் கொள்ளவும்.
வாணலியில்எண்ணெயை காய வைத்து சிறுகரண்டியால் மாவை அப்பமாக ஊற்றி வெந்த பின் எடுத்து சாப்பிட சுவை சூப்பராக இருக்கும்.

**-தீ.அம்மணி, நெல்லை.**

## சோயா ஸ்வீட் பால்ஸ்

**தேவையான பொருட்கள்:**
சோயாமாவு- 1 கப், பச்சரிசி மாவு- 1 கப், வெள்ளை ரவை- ½ கப், வெல்லத்தூள்- 1 கப், தேங்காய் (பல்பல்லாக நறுக்கியது)- 2 ஸ்பூன், தேங்காய்த்துருவல்- 1 ஸ்பூன், ஏலத்தூள்- ¼ ஸ்பூன், வெண்ணெய்- 50 கிராம், வெள்ளை எள்ளு- 1 ஸ்பூன், எண்ணெய்- தேவைக்கேற்ப.

**செய்முறை:**
வெறும் வாணலியில் மாவுகளை வாசனை வரும் வரை நன்கு வறுக்கவும். ரவையையும் தனியாக வறுத்து மாவுடன் கலக்கவும். வறுத்தவற்றுடன் வெண்ணெயைச் சேர்த்துப் பிசறவும். தேங்காய்த் துருவல், தேங்காய் துண்டு கள், எள்ளு அனைத்தையும் சேர்த்துகலக்கவும். வெல்லத்தை கரைய விட்டு வடிகட்டி மாவில் ஊற்றி கெட்டியாக கலக்கவும். பிறகு ஒரு பிளாஸ்டிக் ஷீட்டில் பெரிய நெல்லிக்காயளவு மாவை உருட்டிப் போடவும்.
வாணலியில் எண்ணெயை காய விட்டு ஐந்தாறு உருண்டைகளாகப் போட்டு பொரித்து எடுக்கவும். தீயை நிதானமாக எரியவிட வேண்டும்.

**-தாரா, கோவை.**




# வாழைப்பழ வடை

**தேவையான பொருட்கள்:**

வாழைப்பழம்- 2, உளுத்தம் பருப்பு- 200 கிராம், வெல்லம்- 200 கிராம், முந்திரிப்பருப்பு- 10, கிஸ்மிஸ் பழம்- 25 கிராம், பேரீச்சம் பழம்- 6, ரவை- 50 கிராம், தேங்காய்ப்பூ- 1 கப்.

**செய்முறை:**

உளுத்தம் பருப்பை ஊற வைத்து களைந்து வைத்துக் கொள்ளவும். வெல்லத்தைப் பொடி செய்து கொள்ளவும். வாழைப்பழத்தை தோலுரித்து கட்டியில்லாமல் நன்றாக பிசைந்து கொள்ளவும். பேரீச்சம் பழம், முந்திரிப்பருப்பு இவற்றை சீவலில் சீவிக் கொள்ளவும். ரவையை லேசாக வறுத்து அத்துடன் தேங்காய்த்துருவலை ஒரு தட்டில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

கிரைண்டரில் ஊறவைத்த உளுத்தம் பருப்பைப் போட்டு சிறிது சிறிதாக வெல்லப் பொடியைத் தூவி அரைத்து எடுத்துக் கொள்ளவும் (தண்ணீர் விட வேண்டாம். வெல்லம் சேர்ப்பதால் தானே தண்ணீர் விட்டுக் கொள்ளும்). மாவில் ஏலப்பொடி, வாழைப்பழம், கிஸ்மிஸ், பேரீச்சை முந்திரி சீவல் இவைகளை நன்றாக கலந்து கொள்ளவும். பின்பு மாவை கையில் எண்ணெய் தடவி சிறிய அளவு எடுத்து உருட்டி தட்டில் உள்ள ரவை, தேங்காய்ப்பூ கலவையில் புரட்டி எடுத்து வடை தட்டுவது போல் தட்டி நடுவில் ஓட்டை போட்டு காய்ந்த எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

இந்த வடை மிகவும் ருசியாக இருக்கும். வடையின் நடுவில் முந்திரிப்பருப்போ அல்லது செர்ரிப் பழமோ அலங்கரித்து வைக்கலாம். மாவு கொஞ்சம் நீர்த்து விட்டால் சிறிது ரவையைப் போட்டு கலந்து கொள்ளவும். எளிய சத்துள்ள, சுவையான சிற்றுண்டி. அனைவருக்கும் பிடிக்கும்.

**-ரமா ரெங்கன், ஆனையூர்.**



# கிரீன் டீ ‘முகம்’

அதிகப்படியான வைட்டமின்கள் மற்றும் கனிமச்சத்துக்கள் உள்ள கிரீன் டீ உடலுக்கு மட்டுமின்றி, சருமத்திற்கும் பொலிவை தருகிறது. கிரீன் டீயை கொண்டு சருமத்தை பராமரித்து வந்தால், பொலிவான, ஆரோக்கியமான சருமத்தை பெறலாம்.

தினமும் முகத்திற்கு கிரீன் டீ கொண்டு பேஸ் பேக் போட்டால், முகம் புத்துணர்ச்சியுடனும் இளமையுடனும் பிரகாசமாகவும் இருக்கும்.

எனவே கிரீன் டீயை வைத்து எப்படி பேஸ் பேக் போடுவது என்று தெரிந்து கொண்டு பயன் பெறலாமே.

**உடனடியாக முகம் பிரகாசிக்க...**

மூன்று டேபிள் ஸ்பூன் கிரீன் டீயில், கொக்கோ பவுடர் சேர்த்து, அத்துடன் 1 டேபிள் ஸ்பூன் பாதாம் எண்ணெய் ஊற்றி கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகத்தில் உடனே பொலிவைக் காணலாம்.

**புத்துணர்ச்சியான சருமத்திற்கு...**

பப்பாளியை அரைத்து, அதில் சிறிது கிரீன் டீ சேர்த்து கலந்து கொள்ள வேண்டும்.

பின்னர் முகத்தை நீரில் கழுவி, லேசாக துடைத்து, பின் அந்த கலவையை முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால், சருமம் நன்கு புத்துணர்ச்சியுடன் அழகாக காணப்படும்.

**பொலிவான சருமத்திற்கு....**

கிரீன் டீயில் 1 டேபிள் ஸ்பூன் அரிசி மாவு மற்றும் 1 ஸ்பூன்











மசாஜ் செய்து, 20-30 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகம் சுருக்கமின்றி இளமையுடன் காணப்படும்.

**பளிச்சென்ற சருமத்திற்கு...**

கொதிக்கும் நீரில் 3 கிரீன் டீ பேக்கு களை போட்டு, சிறிது இஞ்சி சேர்த்து கொதிக்க விட்டு, வடிகட்டி, சருமத்தில் தடவினால் முகப்பருக்கள் நீங்கவிடும். வேண்டுமெனில் இத்துடன் முட்டையின் வெள்ளை கருவை சேர்த்தும் சருமத்திற்கு போடலாம். இதனால் சருமத்தில் உள்ள பழுப்பு நிறம் மற்றும் தழும்புகள் மறையும்.

**பிரகாசமான சருமத்திற்கு...**

1 டீஸ்பூன் தேனில் 1 டீஸ்பூன் ஆலிவ் ஆயில் சேர்த்து, அத்து டன் 1 டீஸ்பூன் கிரீன் டீ பவுடரை சேர்த்து கலந்து லேசாக சூடேற்றி, முகத்திற்கு தடவி மசாஜ் செய்து, 20-30 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகம் பிரகாசமாக இருக்கும்.

எலுமிச்சை சாறு சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகள் நீங்கி, முகமானது பொலி வோடும், ஆரோக் கியமான தாகவும் காணப்படும்.

**சுருக்கத்தை போக்க...**

சருமத்தில் முதுமை தோற்றத்தை தரும் சுருக்கத்தைப் போக்குவதற்கு, 3 ஸ்ட்ராபெர்ரியை அரைத்து, அதில் 1 டேபிள் ஸ்பூன் கிரீன் டீ மற்றும் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி, சிறிது நேரம்

# "வண்ணம் கொண்ட வெண்ணிலவு"

பச்சைப் பட்டுடுத்தி பனியின் குளுமையான தீண்டலுடனும், தென்றலின் இதமான தழுவலுடனும் மிகக் கம்பீரமாய் காட்சி அளித்தது, சேர்வராயன் மலை!

ஏற்காடு செல்லும் பாதையின் அடிவாரத்தில் சுற்றிலும் பெரிய மதிற்சுவர் எழுப்பி, உள்ளே நடுநாயகமாய் 'ப' வடிவில் மூன்றடுக்கு கட்டிடம் கட்டப்பட்டிருந்தது.

முன்புறம் விரிந்து பரந்த தோட்டத்தில் ஒருபுறம் ஏராளமான வண்ணங்களில் ரோஜா செடிகளை நட்டிருந்தனர். மறுபுறம் இருந்த நிலப்பரப்பில் குண்டு மல்லிகையும், அடுக்கு மல்லிகையும் குற்றுச் செடிகளாகவும், முல்லையையும், ஜாதி மல்லிகை கொடியையும் சிறு சிறு பந்தல் போட்டு அதன் மேல் அழகாய் ஏற்றிவிட்டிருந்தனர்.

கலர் கலரான ரோஜாக்களும், மல்லிகையும், முல்லையும், ஜாதி மல்லிகையும் மலர்ந்து அவ்விடத்திற்கு பெரும் அழகுக்கு அழகு சேர்த்தது இல்லாமல் காற்றோடு அந்த மலர்களின் நறுமணம் கலந்து, அந்தப் பகுதியையே 'வாசனையுலகமாக' மாற்றிக் கொண்டிருந்தது.

கேட்டிலிருந்து உள்ளே வர மிகப்பெரிய நீண்ட சிமெண்ட் சாலை! சாலையின் இருபுறத்தில் ஒருபுறம் மஞ்சள் மலர்கள் பூக்கும் சரகொன்றை மரங்களும், மறுபுறம் சிவப்பு மலர்கள் மலரும் குல்மொஹர் மரங்களும் இடைவெளி விட்டு நட்டு வைத்திருந்தனர்.

ஆர்.மகேஸ்வரி

மரத்தில் அடர்த்தியாய் மலர்ந்திருந்த மலர்கள் காற்றில் உதிர்ந்து சாலையை மலர் மெத்தையாக மாற்றியிருந்தது, இன்னும் பேரழகு.

அது 'ஈஸ்வரியம்மாள் ஆதரவற்றோர் இல்லம்' இருபது ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் என்று அங்கே முன்னூற்றுக்கும் மேற்பட்டோர் உள்ளனர்.

சென்னை பெருங்களத்தூரில் இயங்கி வந்த இந்த இல்லம் இடப் பற்றாக்குறை காரணமாக சேலத்திற்கு இடம் பெயர்ந்திருக்கிறது. இல்லம் இங்கு வந்து ஆறு மாதங்களாகிறது. இல்லத்தை இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நிறுவியவர், ஈஸ்வரியம்மாள். ஈஸ்வரியம்மாளுக்கு இப்போது அறுபது வயதாகிறது.

தன் தாயார் மரணத்தை நெருங்கியபோது அவர் மூளைச்சாவு அடைந்த நிலையில் அவர் உடலில் அத்தனை உறுப்புகளையும் எடுத்து பல பேரின் உயிரைக் காப்பாற்றியவர் ஈஸ்வரி அம்மாள்.

அப்போது சிறுநீரகம் ஒன்று சேலம் தொழிலதிபர் கார்த்திகேயனின் மனைவி பத்மாவதிக்கு தானமாக கிடைத்தது. அதனால் பத்மாவதி உயிர் பிழைத்து இன்று வரை ஆரோக்கியமாக வாழ்கிறார். தேவையான ரத்தமும் இல்லத்து பெண்களிடமிருந்து கிடைத்தது. அந்த நன்றிக்கடன் காரணமாய் இல்லத்திற்கு பெரும் பண உதவி செய்த கார்த்திகேயன், அவர் சென்னை வரும் போதெல்லாம் இல்லத்திற்கு வந்து ஈஸ்வரியைப் பார்த்து, விசாரித்து உதவிகளை வழங்கிச் செல்வார்.

இல்லத்தின் இடப்பற்றாக்குறை கார்த்திகேயனின் கண்ணிலும், கருத்திலும் பட்டது. அதன் விளைவாக ஏற்காடு மலையடிவாரத்தில்

***''என்ன, இவ்வளவு லேட்டா வரீங்க?''***
***''வீட்டுல மனைவிக்கும் எனக்கும் சண்டை சார்''***
***''சட்டையைக் கழட்டிட்டு முதுகைக் காட்டுங்க பார்ப்போம்...?''***

**-சீர்காழி வி.ரேவதி.**



''கூட்டணிக்கு தாமதமாக வந்தாலும் தாமாக வந்த தலைவர்களை வாழ்த்தி வரவேற்கிறேன்...!''

-சீர்காழி வி.ரேவதி.



தன் நிலங்களை அளித்தார். ஆறு மாதத்திற்கு முன் இந்த இல்லம் கட்டி முடிக்கப்பட்டு அங்கே இருந்தவர்கள் இடம் பெயர்ந்தனர்.

ஆனால், நம் கதையின் நாயகி 'ஷைனிகா' இல்லத்திற்கு வந்து ஒரு மாதம் தான் ஆகிறது. கல்லூரியில் பி.எஸ்சி. ஹாஸ்டலில் தங்கி முடித்து விட்டு வந்திருக்கிறாள்.

இல்லத்தில் உள்ள அனைவருக்கும் தாயாகிப் போன ஈஸ்வரிக்கு எல்லோரையும் பிடிக்கும். ஆனால் அதற்கு ஒருபடி மேலே போய் தன் உயிரில் சுமந்து பெற்ற மகளாய் பாவித்து ஷைனிகாவை ஈஸ்வரி நேசித்தார். அவளை அவருக்கு ரொம்ப பிடிக்கும். ஷைனிகா என்றால் உயிர்.

இத்தனைக்கும் ஷைனிகா அவரிடம் வந்து நின்றபோது பத்து வயது நிரம்பிய பெண். நல்ல நிறத்துடன், அழகான குண்டு வதனத்துடன் பெரிய பெரிய நீண்ட கரிய விழிகளுடன் 'கொழுக்மொழுக்' என்று பாவாடை, சட்டையில் இரட்டை ஜடையுடன் சோகமே உருவாய் வந்து நின்ற ஷைனிகாவை ரொம்பவே பிடித்துப் போனது.

ஷைனிகாவின் தாய் இறந்து விட, அக்கம் பக்கத்து மக்களின் கரு ணையால் அவர்கள் அவளைக் கொண்டு வந்து ஈஸ்வரியம்மாளிடம் ஒப்படைத்தனர். தாயின் இறப்பிலிருந்து மீள முடியாமல் தத்தளித்த வளை மி தமிஞ்சிய அன்பைக் காட்டி தாங்கிக் கொண்ட ஈஸ்வரியை 'அம்மா, அம்மா' என்று வளைய வந்தவளை நிஜத்தாயாகவே மாறி சீராட்டினார். இன்று இல்லத்துப் பணிகளில் ஈஸ்வரி அம்மாவுக்கு உத வியாக இருக்கிறாள்.

ஷைனிகா விழித்தெழுந்தாள். ராமநாமத்தை சொல்லி விட்டு குளி யலறைக்கு சென்று தலையோடு குளித்து விட்டு வந்து இளம் ரோஸ் நிறத்தில் வெள்ளைப் பூக்கள் போட்ட காட்டன் சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டாள்.

முகத்திற்கு லேசாய் பவுடர் பூசி நெற்றியில் உடைக்கு ஏற்ற நிறத் தில் ஒட்டுப்பொட்டை ஒட்டினாள். காதில் சின்ன வளையம். கழுத் தில் மெல்லிய தங்கச்சங்கிலி.

சென்னையில் படிப்போடு மாலை இரண்டு வீடுகளுக்கு சென்று டியூசன் சொல்லிக் கொடுத்ததில் வந்த வருமானத்தில் வாங்கிய பொன் அணிகலன்கள்!

நீண்ட முடியை தளர பின்னலிட்டு, காதோரம் இளம் ரோஸ் நிற ரோஜாவை செருகிக் கொண்டு கண்ணாடியில் பார்க்க அப்படியே அவளின் அழகில் அவள் மனமே மயங்கியது. ரஞ்சனி வந்து கதவைத் தட்டுவதற்குள் கிளம்பி விட வேண்டும் என்று அவசர அவசரமாய் கிளம்பினாள்.

ஷைனிகா ஒரு சுயம்வரத்திற்கு செல்கிறாள். ஊனமுற்ற இளைஞர்-இளைஞிகளின் வாழ்வு மலர நடக்கப் போகும் சுயம்வரம், அது.

அதை நடத்துபவர், கார்த்திகேயன் ஐயா தான். அவர்களின் பத்மா வதி திருமண மண்டபத்தில் நடக்கப் போகிறது. ஆறு மாதத்திற்கு முன்பு இப்படி ஒரு சுயம்வரத்தை நடத்தினார். அப்போது கிடைத்த பாராட்டு மன நிறைவினால் மீண்டும் அந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்.

இல்லத்திலிருந்து ஐந்து பெண்களும், ஒரு ஆணும் என 6 பேர் கலந்து கொள்ளப் போகிறார்கள். அவர்களை அழைத்து போக இருந்த வள், ரஞ்சனி. திடீரென அவளின் ஒன்றாம் வகுப்பு படிக்கும் குழந்தை இனியாவின் பள்ளியில் இன்று பேரண்ட்ஸ் மீட்டிங்கிற்கு அழைப்பு வந்து விட அந்தப் பெரிய பொறுப்பை ஷைனிகா எடுத்துக் கொண் டாள். அந்த சுயம்வர நிகழ்ச்சிக்கு ஷைனிகா செல்லாமல் இருந்திருந் தால் பின்னாடி வரப்போகும் அப்படி ஒரு இன்பத்திற்கும், தொல்லை களுக்கும் ஆளாகி இருக்க மாட்டாள்.

விதி யாரை விட்டது? அவளை மட்டும் விட்டு வைக்க!

2

**ஷை**னிகாவின் அறைக்கதவு தட்டப்பட திறந்தாள். ஈஸ்வரியின் அசிஸ்டெண்ட் ரஞ்சனி நின்றிருந்தாள்.

ஆறு வருடங்களுக்கு முன்பு ஏழைப்பெண்ணான ரஞ்சனியின் அழகைக் கண்டு மும்பையை சேர்ந்த பணக்காரன் ஒருவன் பெண் கேட்டு வந்தான். ரஞ்சனிக்கும் பிடித்து விட திருமணம் நடந்தது. மும்பைக்கு அழைத்து சென்று அவள் அழகை அனுபவித்து அங்குள்ள சிவப்பு விளக்கு ஏஜெண்டிடம் கட்டிய மனைவியை விற்று விட்டுப் போய் விட்டான். அங்கிருந்து தப்பித்து ஈஸ்வரியம்மாளின் இல்லத்தில் ரஞ்சனி அடைக்கலமானாள்.

அவள் இங்கு வந்து சேர்ந்த பின் தான் அவள் வயிற்றில் பணக்காரனின் தொடர்பால் ஏற்பட்ட கரு உருண்டு திரண்டு குழந்தையாய் உயிர் பெற்று இருந்தது தெரிய வந்தது.

ரஞ்சனி அதைக் கலைக்கவில்லை.

தன் வாழ்க்கையின் பிடிப்பாய் கருதி, அக்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அழகான பெண் குழந்தை. இனியா, இப்போது ஒன்றாம் வகுப்பு படிக்கிறாள்.

''காலை வணக்கம், அக்கா''. ஷைனிகா முல்லைப்பல் தெரிய அழகான புன்னகையுடன் சொல்ல பதிலுக்கு வணங்கினாள், ரஞ்சனி.

''காலை வணக்கம், ஷைனி. கிளம்பி விட்டாயா?''

''இதோ என் வேலை முடிந்ததுக்கா. கிளம்பி விட்டேன்''.

''சீக்கிரம், ஷைனி. அவர்களை எல்லாம் நீ கிளப்ப வேண்டாமா? கொஞ்சமாக வேணும். மேக்கப் போட்டு, நல்ல ஆடை அணிவித்து அழைத்துப் போகணுமில்லையா?''

''ஆமாம், அக்கா''.

''எனக்கு மேக்கப் பத்தி அவ்வளவா தெரியாது. தெரியாதுன்னு சொல்வதை விட நான் அதையெல்லாம் மறந்து விட்டேன்னு சொல்வது தான் சரி. நீதானே அதையெல்லாம் செய்ய வேண்டும். நீயே இப்

படி தாமதம் செய்யலாமா, ஷைனி?''

ரஞ்சனி லேசாய் ஷைனிகாவை கடிந்துக் கொண்டாள்.

''ஸாரிக்கா''. மன்னிப்பு கோரினாள்.

''சுயம்வரம் எத்தனை மணிக்கு ஆரம்பம் என்று தெரியுமா?''

''ம்! பத்துமணிக்கு''.

''இப்போ மணி எட்டாகுது. அந்த ஐவருக்கும் அலங்காரம் செய்து அழைத்துப் போக நேரம் போதுமா?''

''நீங்க கவலைப்படாதீங்கக்கா. நான் சீக்கிரமே தயார் செய்து, சரியான நேரத்துக்கு அழைத்துப் போகிறேன்''.

''உன்னை அங்கே அனுப்ப வேண்டியதை நினைத்து கஷ்டமா இருக்கு, ஷைனி'' என்று வருத்தத்துடன் ரஞ்சனி சொன்னாள்.

''இனியா ஸ்கூலில் பேரண்ட்ஸ் மீட்டிங். நீங்க அங்கே போக வேண்டும். அதனால் தான் நீங்க என்னை அனுப்புறீங்க. என்னால் புரிஞ்சிக்க முடியுதுக்கா''.

''சின்ன பெண்ணுக்கு இவ்வளவு பெரிய வேலையை கொடுத் திருக்கிறேனே என்று நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது ஷைனிகா''.

''நான் சின்ன பெண்ணா?'' லேசாய் இதழ் சுழித்து அழகாய் ஷைனிகா கேட்டாள்.

''பின்னே?''

''ம்கூம்! பி.எஸ்ஸி. முடிச்சிருக்கிறேன். மேலே எம்.எஸ்ஸியை கரஸ்ல படிக்கப் போகிறேன். வயசு இருபத்தொன்று ஆகிறது. இது நாள் வரை படிப்பு படிப்பு என்றிருந்தேன். இனி, இதுபோல வெளி

**''எனக்கு எப்படி மாப்பிள்ளைங்க அமைஞ்சிருக்காங்க பாருங்க...? மூத்த மாப்பிள்ளை பேரு திருப்பதி, அடுத்தவரு பேரு பழனி''.**

**''நீங்க எதுக்கும் உங்க தலையை ஜாக்கிரதையா பார்த்துக்கோங்க!''**

**-சீர்காழி வி.ரேவதி.**



வேலைகளையும், உலகத்தையும் நான் தெரிஞ்சிக் கொள்ள வேண் டாமா?''

''நீ சொல்வது கூட சரி தான்''.

''அடுத்ததா வேலைக்கு போகலாம் என்று இருக்கிறேன்''.

''அட, அப்படியா? இந்தாம்மா வேலை என்று தூக்கி கொடுக்க யாரம்மா ரெடியா இருக்காங்க?'' என்று சொல்லி ரஞ்சனி கிண்டலாய் சிரித்தாள்.

''கிண்டல் செய்யாதீங்க, அக்கா. என் திறமைக்கு நல்ல வேலை யாவே நல்ல கம்பெனியில் கிடைக்கும்''.

''அப்படி வேலை கிடைத்து சம்பாதித்தால், உன் சம்பாத்தியத்தில் உனக்கென்று கொஞ்சம் சேமித்து வை ஷைனிகா''.

''சேமிப்பா? எனக்கா? எதுக்குக்கா? முழுவதையும் இல்லத்துக்கு செலவழிக்க சொல்லி ஈஸ்வரியம்மாவிடம் தான் கொடுப்பேன். அநாதையான எனக்கு நல்ல படிப்பையும், பெரும் பாதுகாப்பையும் கொடுத்த இந்த இல்லத்துக்காக என் உடல், உயிர், உழைப்பு, சம்பளம், என் எண்ணம் என்று அனைத்தையும் அர்ப்பணித்து ஈஸ்வரியம்மாள், கீர்த்திவாசன் தாத்தா, ரஞ்சனி அக்கா என்று கடைசி வரை நான் இங் கேயே என் காலத்தை கழிக்கப் போகிறேன்''.

ஷைனிகா நீண்டதாய் பேசி உணர்ச்சி வசப்பட்டாள். ''கல்யாணம், குடும்பம் கணவன், பிள்ளைகள் என்று செய்து கொள்ள போறதில் லையாடி?''

''கல்யாணமா?

நோ, நெவர்! கடைசி வரை இப்படியே தனியே வாழ்ந்து என்னால் ஆன உதவியை இல்லத்திற்கும், சமுதாயத்திற்கும் செய்து விட்டு செத்துப் போவேன்''.

''அது சரியா, ஷைனிம்மா? உன் அழகுக்கு ராஜகுமாரன் போல மாப்பிள்ளை வருவான்''.

எனக்கு எந்த ராஜகுமாரன் போல மாப்பிள்ளையும் வேண்டாம் என்றவளின் முகம் கோபத்தில் சிவந்தது.

''ராஜபுத்திர வீரன் போல ஆண்மையும், கம்பீரமும், திறமையும், அறிவும், வீரமும் செறிந்த ஒருவன், உன் கண் முன்பு தோன்றி உன்

**''நீ காதலித்த பெண் உன் தம்பிய கல்யாணம் பண்ணிக்கிட்டாளா எப்படி?''**
**''எனக்கு வேலையில்லை. என் தம்பி அரசு ஊழியன் கைநிறைய சம்பளம் வாங்குகிறான் சொல்லிட்டிட்டேனே!''**
**-குஞ்சன்விளை ரவி.**



இதயத்தை கவரப் போகிறான்''.

''ஒரு ஆண் மகனை நம்பி என் அழகான, அற்புதமான வாழ்க்கையை ஒப்படைக்க நான் ஒண்ணும் முட்டாளில்லை'' என்று ஷைனிகா வெறுப்புடன் சொன்னாள்.

''எல்லா ஆண்களும் கெட்டவர்கள் இல்லைடி ஷைனி!''

''அட போங்கக்கா! ஆண்களைக் கண்டாலே பிடிக்கலை! வயிரெல்லாம் பற்றி எரியுது! ஈஸ்வரியம்மாவை ஏமாற்றியவனும் ஒரு ஆண் தான்! என் தாய்க்கு நம்பிக்கை துரோகம் செய்து, தவிக்க விட்டுவிட்டு, இன்னொரு பெண்ணை மணந்தவனும் ஒரு ஆண் தான். உங்களை ஏமாற்றி, மணந்து கொண்டுபோய், ''ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்'' என்று சிவப்பு விளக்கு பகுதியில் விற்று பணம் பார்த்தவனும் ஒரு ஆண் தான்!'' ஷைனிகா கோபமாய் சொன்னாள்.

''எங்களுக்கு விதி, ஷைனி! நல்லவன் கிடைக்கவில்லை. ஆனால், உனக்கு ஒரு நல்லவன் வருவான். ராஜகுமாரன் போல வந்து உன்னைக் கட்டி தூக்கிப் போகப் போகிறான் பாரேன்!''

''என்ன குதிரையிலா...?'' என்று கிண்டலாய் கேட்டவள், பின், ''அப்படியே அழகிலும், அறிவிலும், குணத்திலும், அந்தஸ்திலும் சிறந்த மன்மதனுக்கு ஒப்பானவனே வந்தாலும், நான் அவனை கட்டிக்க போறதில்லை. ரஞ்சனிக்கா. அந்த ராஜகுமாரன் வந்து என்னைப் பார்த்து ஏமாந்து தான் திரும்பப் போகிறான் பாவம்.''

ஷைனிகா 'கலகல' வென சிரித்தாள். அவளுக்கெங்கே தெரியப் போகிறது? ரஞ்சனி சொன்னதுபோல ஒரு ராஜகுமாரன் அவள் முன்பு வந்து குதிக்கப் போகிறான் என்று!

மலர், மல்லிகா, மேரி, லட்சுமி, ஜெயா ஆகிய ஐவருக்கும் தலையைப் பின்னினாள். கிரீம்பூசி லேசாய் மேக்கப் போட்டு, அழகான டிசைன் பொட்டை ஒட்டினாள்.

அழகான எளிய பட்டுப்புடவைகளை கட்டினாள். தலையில் சரம் சரமாய் மல்லிகை மலர்களைத் தொங்க விட்டாள்.

அந்த ஐவரும் ஷைனிகாவின் அலங்காரத்தில் மின்னினார்கள். கை, கால்களில் மட்டும் ஊனமில்லை என்றால் அவர்கள் ஐவரும் தேவதை கள் தான். அப்படி ஒரு நிறத்தையும், அழகையும் கொடுத்த கடவுள் கையிலும், காலிலும் ஊனத்தைக் கொடுத்து விட்டான். ஷைனிகா அவர்களோடு ஈஸ்வரியம்மாள் முன்பு நின்றாள். அனைவரையும் கட் டியணைத்து கண்கள் கலங்கினார்.

பின், ஷைனிகாவின் பேரழகை இமைக்காது பார்த்து ரசித்தார், ஈஸ்வரி.

நாளெல்லாம் உட்கார வைத்து அவளைப் பார்த்துக் கொண்டிருந் தால் வயிற்றில் பசி எடுக்காது. கண்களுக்கு சலிப்பு வராது.

ஈஸ்வரியம்மாள் சொன்னார்.

''ஆறு மாதத்திற்கு முன்பு நடந்த சுயம்வரத்தில் நான்கு பேர் கலந்து கொள்ள மூவருக்கு துணை கிடைத்து கணவனோடு சந்தோசமாய் வாழ்கிறார்கள். அதுபோல் இப்போது உங்கள் ஐவருக்கும் நல்ல மாப் பிள்ளைகளும், அருணுக்கு நல்ல பெண்ணும் அமைய வேண்டும். அதற்கு இறைவன் துணை புரிவான்! பெண்களா உங்களுக்கு மாப்பிள் ளையைப் பிடிச்சிருந்தால் மட்டுமே ஓ.கே. சொல்லுங்கள் என்ன?''

''சரிங்கம்மா!'' தலையாட்டினர்.



**வெந்தயக் கீரையை சமைக்கும் போது சிறிது சர்க்கரையை சேர்த்தால் அதிலுள்ள கசப்புச் சுவை நீங்கிவிடும்.**

**-கே. பிரபாவதி,**
**மேலகிருஷ்ணன் புதூர்**

‘‘இந்த டாக்டர்தான் எனக்கு
உயிர்ப் பிச்சை போட்டவரு’’
‘‘ஓ...! இவர்தான் ஆபரேசன்
பண்ணினதா?’’
‘‘ஊகூம், ஆபரேஷன் பண்ண
வேண்டாம்னு விட்டவரு!’’
-சீர்காழி வி.ரேவதி.



‘‘இவர்களுக்கு மாப்பிள்ளையைப் பிடித்துப் போனால் இன்றே திருமணம் நடக்குமா, அம்மா? நீங்க இல்லாமல் இவர்களுக்கு திருமணமா?’’ என்று அவசர அவசரமாய் கலக்கத்துடன் ஷைனிகா கேட்டாள்.

‘‘ஷைனிகா ஆண்களும், பெண்களும் தங்களுக்குப் பிடித்த துணையை இன்று தேர்வு செய்வார்கள்.’’

‘‘அப்புறம்?’’

‘‘அதன்பிறகு மூன்று நாள் கழித்துதான் திருமணம். திருமணத்திற்கு நான், ரஞ்சனி, இல்லத்து சில பெரியவர்கள் என போவோம்மா.’’

‘‘எனக்கு இதெல்லாம் தெரியாதும்மா. நீங்க இல்லாமல் இன்றே இவர்களுக்கு திருமணம் நடக்குமோ என்று பயந்துவிட்டேன்மா!’’

‘‘இந்த இரண்டு நாள் இடைவெளி எதற்கு தெரியுமா?’’

‘‘ம்கூம்’’

‘‘தேர்வாகும் ஜோடிகளுக்கு தாலி, பட்டு, வேட்டி, சேலை, இவர்கள் வாழ்வதற்கு பாத்திரங்கள் என வாங்குவதற்குதான்.’’

‘‘இவ்வளவும் கார்த்திகேயன் சார் தான் கொடுப்பாராம் மா?’’

‘‘ஆமாம், ஷைனிம்மா. இதெல்லாம் பணம்பத்தாயிரம்! வேலையில்லாதவர்களுக்கு அவரவர் தகுதி, படிப்புக்கு தகுந்தாற்போல் அவர்களின் கம்பெனியில் வேலையென்று சகலமும் செய்கிறார்கள்.’’

‘‘ஓ. ரியலி? கார்த்திகேயன் சார் கிரேட்தான், அம்மா!’’ ஷைனிகா கண்கள் பளபளக்க பேசினாள்.

ஷைனிகா அவரிடம் அவ்வளவாக பேசியதில்லை. அவரை நேருக்கு நேராய் பார்க்கும் சமயம் வணங்குவாள்.

''ஷைனி குட்டி! உன்னை நான் என்றுடா மணக்கோலத்தில் காண்பேன்.''

''இரண்டு மணி நேரத்திற்கு முன்புதான் என் திருமணத்தைப் பற்றி பேசி அறுத்தார்கள் ரஞ்சனியக்கா. இப்போ நீங்களா?''

''அந்த நாள் சீக்கிரம் வராதா என்று ஏக்கமாக இருக்குடா, ஷைனி!''

''நான் திருமணம் செய்துக்கொள்ளபக போவதில்லை.''

''ஏன்?''

''கடைசிவரை உங்கள் மகளாகவே வாழ்ந்து சாவேன். அதுதான் என் விருப்பம்! ஆசை!''

''அப்படியெல்லாம் பேசக்கூடாது, ஷைனி. காலா காலத்தில் நடக்க வேண்டியது நடக்கணும்மா. செடியும், கொடியும், மரமும் வளர்ந்தபின் அது பூக்க வேண்டும். காய்க்க வேண்டும். அதுதான் அதுங்களுக்கு அழகு. அதுபோல பெண் என்றால் காலா காலத்தில் ஒரு ஆண்மகனை மணக்க வேண்டும். தாய்மை அடைய வேண்டும். குழந்தையைப் பெற்று, அதை வளர்த்து நல்ல நிலைமைக்கு கொண்டு வர வேண்டும். பூக்காத, காய்க்காத மரத்தையும், தாய்மையடையாத பெண்ணையும் யாரும் ரசிக்கமாட்டாங்கடா!'' ஈஸ்வரி சொல்லவும்,

''நீங்களும், என் தாயும், ரஞ்சனி அக்காவும் பெற்ற துன்பத்தை நானும் அடைய வேண்டும். அதுதானே உங்கள் ஆசை?''

''நீ எங்கள் வாழ்க்கையை எடுத்துக்காட்டா எடுத்துக்க கூடாதும்மா. எங்களுடைய விதி, அரக்கர்களாய் கணவன்மார்கள் அமைந்தார்கள். உனக்கு, உன்னை கண்ணுக்குள்ளே வச்சி தாங்கற ஒரு கண்ணாளன் கிடைப்பான், ஷைனிம்மா!''

ஷைனிகா விரக்தியாய் சிரித்தாள்.

''ஏய், ஏன் சிரிக்கறே? என் மனசுக்கு தோணுது. சீக்கிரமே நடக்கும் பார்.''

''நான் ஒரு அநாதை. இந்தக் காலத்தில் அநாதைக்குப் போய் நல்ல மாப்பிள்ளை எப்படி கிடைப்பான்?'' என்று கூற,

''ஏய் ஷைனி! என்னடி என் மருமகனை 'அவன் இவன்'னு சொல்றே? மரியாதை! மரியாதை! இல்லை தொலைத்து விடுவேன்!''

''இவ்வளவு வயசாகியும் என் மாமியாருக்கு சாவே வரமாட்டேங்குது டீ''
''ஏண்டி அப்படிச் சொல்றே?''
''சாந்தியை காந்தின்னும் சாரதாவை 'காரதா'ன்னும் சொல்றாங்கடீ...!''
-சீர்காழி வி.ரேவதி.



என்று சுட்டுவிரல் நீட்டி எச்சரித்தார், கிண்டலான சிரிப்புடன், பின்...

''கார்த்திகேயன் சாரிடம் உனக்கு நல்ல மாப்பிள்ளை இருந்தால் சொல்லச் சொல்லியிருக்கிறேன்.''

''எனக்கு தெரியாமல் இன்னும் என்னென்ன செய்கிறீர்கள்?'' என்று புருவம் உயர்த்திக் கேட்டாள்.

இந்த முறை கார்த்திகேயன் வந்தபோது, தூரத்தில் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்த ஷைனிகாவை அவர் ஆர்வத்தோடு பார்த்தார்.

அந்த சமயத்தில் தான், ஷைனிகா படிப்பை முடித்து விட்டதாகவும், சீர், தட்சணை என்று கேட்காமல் அநாதையான இவளுக்கு யாராவது பரந்த மனப்பான்மையுள்ள நல்ல மாப்பிள்ளை இருந்தால் சொல்லுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார், ஈஸ்வரி.

அவரும் கட்டாயம் ஷைனிகாவிற்கு மாப்பிள்ளை பார்க்கிறேன் என்று கூறிச் சென்றார்.

ஆனால், மாப்பிள்ளையாய் வந்தவன்...?

# 3

அந்த பிரம்மாண்டமான வெள்ளைப் பளிங்கு மாளிகையின் உள்ளே, ஹாலில் கார்த்திகேயன் அமர்ந்திருந்தார்.

உணவு உண்டு முடிந்த பின் காபி வேண்டும். பத்மாவதி கொண்டு வந்து கொடுத்தார்.

''இன்னுமா உன் மகன் திருப்பள்ளி கொண்டு எழவில்லை? என் னடி பிள்ளை வளர்க்கிறே? மணி ஒன்பதாகுது. போ... போய் உன் பிள்ளையை எழுப்பி இழுத்து வா!'' என்று கார்த்திகேயன் அதட்டி னார்.

''பேச மாட்டீங்க நீங்க? ஆனாலும் உங்களுக்கு அதிக கொழுப்பு தாங்க! ஏதோ முக்கியமான ஆபீஸ் பைல்களைக் கொண்டு வந்து அதை சரிபார்த்து விட்டு, இரவு பனிரெண்டு மணிவாக்கில் தான் படுத்தான். என் பிள்ளை காலில் சக்கரம் கட்டாத குறையாய் அலைந்து திரிந்து தொழில்களைக் கவனித்துக் கொள்கிறான். நீங்கள் நன்கு ஓய்வு எடுத் துக் கொண்டு, அவன் சம்பாதித்து வரும் பணத்தைக் தானம், தருமம், சமூக சேவை என்று சுத்திகிட்டு இருக்கீங்க. அப்படிப்பட்ட அவ னைப் பற்றி குறை சொல்றீங்களா?'' என்று பத்மாவதி நொடித்துக் கொண்டாள்.

''சுயம்வரத்துக்கு நாம் போக முடியாது. அதனால், அதனை ஆரம் பித்து வைக்க நம்ம துரைதான் போக வேண்டும். அதுக்குதான் அவனை எழுப்ப சொல்கிறேன். போ.. போய் எழுப்பி கூட்டி வா.''

பத்மாவதி மாடியேறிப் போய், வெறுமனே சாத்தியிருந்த கதவைத் தள்ளி உள்ளே சென்றாள்.

அகிலேஷ் கார்த்திக் பேரழகும், பேராண்மையும், பெரும் கம் பீரமும் நிரம்பிய இருபத்தொன்பது வயது நிரம்பிய இளைஞன்.

கார்த்திகேயனின் பெற்றோர் நிறுவிய இரண்டு காட்டன் மில்கள், நூற்றைம்பது ஏக்கரில் விரவி பரவியிருந்த விவசாய பண்ணை, ஏற் காட்டில் இருக்கும் மிளகு, தேயிலை, காபி எஸ்டேட்டுகளை கார்த்தி கேயன் கவனித்து வந்தார்.

அகிலேஷ் கார்த்திக் எம்.பி.ஏ.வை வெளிநாட்டில் முடித்துவிட்டு வந்து, தன் இருபத்து மூன்றாவது வயதில் தந்தையோடு இணைந்து பிசினஸ் பார்க்கப் போனான்.

இன்று ஏழு காட்டன் மில்ஸ். அங்கு தயாராகும் வெள்ளை வேட்டி, சட்டை, பனியன், உள்ளாடைகள், பெண்களுக்கான காட்

டன் சேலைகள், உள்ளாடைகளையெல்லாம் மற்றவர்களுக்கு விற்பனை செய்தவன். சேலத்தில் 'அகிலேஷ் கார்த்திக் காட்டன்' என்ற பெரிய ஷோரூமை ஏற்படுத்தி விற்பனை செய்ய, விற்பனை அமோகமாய் இருக்க, பெரும் லாபங்களை குவிக்க, இப்போது தமிழகத்தின் முன்னணி நகரங்களில் எல்லாம் 'அகிலேஷ் கார்த்திக் காட்டன் ஷோரூம்' திறக்கப்பட்டு அவற்றை திறமையுடன் நிர்வகிக்கிறான்.

சேலத்தில், சென்னையில் எக்கச்சக்க மால்கள், பைவ் ஸ்டார் ஓட்டல், ஏற்காட்டில் ரிசார்ட்ஸ் என்று அவனது தொழில்கள் முன்னேறியுள்ளது. இப்போது சேலம், தர்மபுரி, விழுப்புரம், ஆத்தூர், கள்ளக்குறிச்சி என்ற இந்த நகரங்களிலும் சினிமா தியேட்டர் உள்ளது. இரண்டாண்டுகளுக்கு முன்பு கார்த்திகேயனுக்கு ஓய்வும் கொடுத்துவிட்டான் அகிலேஷ். கோடி கோடியாய் சம்பாதித்து குவிக்க, கார்த்திகேயன் வள்ளல் கணக்காய் வாரி வாரி வழங்கி சமூக சேவை செய்கிறார்.

அகிலேஷ் கார்த்திக் பூவை விட மென்மையான படுக்கையில் தலையணையைக் கட்டிக்கொண்டு படுத்திருந்தான்.

ஆண்மையும் அழகும் நிர்வாகப் புலியுமான அகிலேஷ் பதவி, பணம் புகழ்ச்சியினால் அணுவளவும் மாறாதவன். அவன் சென்ற இடமெல்லாம் வெற்றி! தொட்டதெல்லாம் தழைத்தது!

அவனை ஈயாய் மொய்க்கும் பெண்களோ அவனை தன் வசப்படுத்த முடியாமல் தவித்தனர். இதுநாள் வரை எந்தப் பெண்ணையும் பார்த்து மயங்கியதில்லை. எந்தப் பெண்ணையும் கண்டு சலனப்பட்டதுமில்லை. அவன் எண்ணமெல்லாம் தன் தொழில், வீடு என்றே இருக்கும்.

**''பணத்தை தண்ணியா செலவழிக்கிறாளே, அவ புருசன் எங்கே வேலை பார்க்கிறார்?''**
**''டாஸ்மாக் கடையிலே!''**

**-கு.அருணாசலம்,**
**தென்காசி.**



அக்கறையான பொறுப்பான இளைஞன். தொழிலில் ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்க நாள் ஒன்றுக்கு நான்கைந்து சிகரெட்டுகள். பார்ட்டிகளில் நல்ல நாட்களில் நண்பர்களின் வற்புறுத்தலுக்காக கொஞ்சமாய் மது அருந்துவான். இதுதான் அவனிடம் இருக்கும் கெட்ட பழக்கங்கள்.

அகிலேஷ் என்ன கனவு கண்டானோ தெரியவில்லை. அவன் இதழ்களில் அழகான புன்னகை மிளிர்ந்து கொண்டிருந்தது.

''அகிலேஷ் மணி ஒன்பதாகுது. எழுந்திரிப்பா!'' என்று பத்மாவதி குரல் கொடுக்க,

''அம்மா டிஸ்டர்ப் பண்ணாதேம்மா. மதியம் எழுந்து போர்டு மீட்டிங்கு போனால் போதும். இன்னும் கொஞ்ச நேரம் தூங்க வேண்டும். பிளீஸ்ம்மா.'' என்று மெல்ல சொன்ன அகிலேஷ் வேறுபுறம் திரும்பி தலையணையை மேலும் இறுக்கித் தழுவிக் கொண்டான். அதைப் பார்த்த பத்மாவதி நெற்றியில் அடித்துக் கொண்டார்.

''ஐய்யோ பொண்டாட்டியைக் கட்டிக்கொண்டு தூங்க வேண்டிய வயதில், இப்படி தலையணையைக் கட்டிக் கொண்டு தூங்கறியே, அகிலேஷ். இது நல்லாவா இருக்கு?''

அந்தச் சொற்கள் காதில் விழுந்ததும் சோம்பல் முறித்தபடி எழுந்தவன், தாயை இழுத்து முகம் பற்றி கன்னத்தில் முத்தமிட்டு, சின்ன சிரிப்புடன் சொன்னான்.

''என்னம்மா காலையிலேயே உன் புலம்பல் புராணம் ஆரம்பமா?''

''என் ஆசையெல்லாம் புலம்பல் புராணமாக தெரியுதா? உனக்கு திருமணம் செய்து, மனைவி, குழந்தையோடு பார்க்க பெற்றவங்களுக்கு ஆசையிருக்காதா, அகிலேஷ்? இந்த இளம் வயதில், பகலில் தொழிலைக் கொண்டு அலைகிறாய்! இரவில் தலையணையை கட்டிக்கொண்டு தூங்குகிறாய்! என்ன பொழைப்பு இது, அகிலேஷ்?''

''என் திருமணத்திற்கு என்னம்மா அவசரம்?'' என்று சொன்னவனை மவுனமாகப் பார்த்தார், பத்மாவதி.

''என் பேரப்பிள்ளையை தான் பார்க்க வேண்டும்.''

''நான் இன்னும் தொழிலில் சாதிக்க வேண்டும். தமிழ்நாட்டின்

நம்பர் ஒன் பிசினஸ் மேனாய் உயர வேண்டும்.''

''நீ இப்போ உயர்ந்ததே இமயமலை அளவு உயரம். அளவுக்கதிக மான சொத்தும், பணமும் எதுக்கு? போதும் அகிலேஷ்! கல்யாணம் கட்டி, மனைவி, குழந்தை என்று மகிழ்ச்சியாக வாழும் வழியைப் பார்!''

''அம்மா புலம்பாதீங்க! இந்த வருட கடைசிக்குள் திருமணம் செய் துக் கொள்ள முயற்சிக்கிறேன்.'' என்று அகிலேஷ் கூறவும், பத்மாவ தியை இன்னும் காணவில்லையே என்று அங்கு வந்த கார்த்திகேயன்.

''ஏய் அகிலேஷ் இந்த சொல்லை என் தங்கையும், தங்கை மகளும் கேட்டால் எவ்வளவு பூரித்துப் போவார்கள் தெரியுமா?'' என்று சொல்ல, ''என் தம்பியும், தம்பி மகளும்தான் இந்தச் சொல்லைக் கேட் டால் பெரும் சந்தோசப்படுவார்கள்.'' என்று பத்மாவதி பதிலுக்கு சொல்ல அகிலேஷ்க்கு என் தங்கை மகள் பிரியாவைத் தான் கட்டணும்!''

''என் அகி குட்டிக்கு என் தம்பி மகள் மாயாவைத்தான் கட் டணும்!''

கார்த்திகேயன், பத்மாவதியின் சண்டையை கன்னத்தில் கை வைத்து ரசித்துக் கொண்டிருந்தான், அகிலேஷ் கார்த்திக்!

''நீங்க பேசாதீங்க! கட்டிக்கப் போறவன் சொல்லட்டும்! அகிலேஷ்.. நீயே சொல்லுப்பா? நீ உன் அத்தை மகளைக் கட்டிக்கொள்ளப் போகி றாயா? இல்ல, மாமன் மகளைக் கட்டிக் கொள்ளப் போகிறாயா?'' பத்மாவதி அழாத குறையாய் கேட்க.

''நான் என் அத்தை மகளை கட்டிக்கப்போறதில்லை. மாமன்

**''உனக்கு கல்யாணம் தடங்கலாகி போயிட்டு இருக்குமேஉன் ஜாதகத்தில் செவ்வாய் தோஷமிருக்கு!''**
**''ஜோதிடரே நீங்கள் சொல்வது தவறு. இன்று புதன்; புதன் தோஷமிருக்கு என்று சொல்லுங்க!''**

**-ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.**



*''இந்த தெருவுல எழுத்தாளர்கள் நிறைய பேர் இருக்காங்க''*

*''அதான் பழைய பேப்பர் காரன் இந்த தெருவையே சுத்திச்சுத்தி வரானா...?''*

**-சீர்காழி வி.ரேவதி.**



மகளையுமம் கட்டிக்க போறதில்லை. அந்த அரக்கிகளில் யாரைக் கட்டி கொண்டாலும் நான் உருபட்ட மாதிரிதான்!''

''பின்ன யாரைக் கட்டிக்க போகிறாய்?''

''என் மனசுக்குப் பிடிச்ச பெண்ணைக் கட்டிக்கப் போறேன்!'' அகிலேஷ் ரசிப்புடன் சொல்ல..

''ஏய் அகிலேஷ் எவளையாவது காதலிக்கிறியா?''

''இனிதான் காதலிக்கணும்மா!'' பட்டென்று பதில் சொன்னான்!

''அப்போ...?''

''என் மனசுக்கு பிடிச்சவள் இன்னும் என் கண்ணில் படலை சிக்கினால் பிடித்து தரதரவென்று பிடித்து இழுத்து வந்துவிடுவேன்!''

''அப்போ இவன் ஜாதி, மதம், இனம், மொழி பார்க்காமல் எவளையாவது காதல்ங்கிற பேர்ல இழுத்து கொண்டு வந்தால் சம்மதிப்பீங்களா?''

''என்ன தப்பு? ஜாதியும், மதமும் மெல்ல மெல்ல மனிதர்களில் மனதில் மறைந்துக் கொண்டு வரும்போது.. நாம் இன்னும் ஜாதியையும் மதத்தையும் பிடித்துக் கொண்டு தொங்கலாமா?

கார்த்திகேயனைப் பார்த்து பத்மாவதி சீறினாள்!

''என் மகள் ஆர்த்தியை கெடுத்தாப் போல.. என் மகனையும் கெடுத்து விடுவீங்க போலிருக்கே! அகிலேஷ் உன் அப்பா சொல்வது பேச்சுக்கு நன்றாக இருக்கும்! ஆனால் செயலுக்கு ஒத்து வராது!''

''ஏய் பிள்ளை இந்த மட்டுமாவது கல்யாணம் செய்துக்கிறேன்னு இறங்கி வந்தானே என்று சந்தோஷப்படாமல்... அதை கெடுத்து குட்டிச்சுவராக்கி அவனை இப்படியே பிரமச்சாரியா வாழ விடணும்னு

நினைக்கறியா...? வாயை மூடுடி! ஏய் அகிலேஷ் உன் மனசுக்கு பிடிச்ச பெண்ணைப் பார்த்தால் எங்களிடம் தயங்காமல் கையை காட்டு! கட்டி வைக்கிறோம்!''

அகிலேஷ் கார்த்திக் மனசுக்கு பிடிச்ச பெண்ணைக் காண்பானா...? அது கடவுளுக்கே வெளிச்சம்?

# 4

அகிலேஷின் அருகில் கட்டிலில் அமர்ந்திருந்த கார்த்திகேயனும், பத்மாவதியும் சண்டையை நிறுத்திவிட்டு குரோதத்தோடு முறைத்துக் கொண்டிருந்தனர்.

பெற்றோரின் முறைப்பை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அகிலேஷ் சின்ன சிரிப்புடன் கேட்டான்!

''என்ன விஷயம்ப்பா?''

''கோயம்புத்தூர்ல என் பிரண்ட் சபரிநாதன் இருக்கானில்லையா? அவனோட பொண்ணுக்கு மதியம் நிச்சயதார்த்தமாம்! மாப்பிள்ளை வீட்டார் காலையில் தான் தகவல் சொன்னார்களாம்! அங்கு நானும், அம்மாவும் போகணும், அகிலேஷ்!''

''போயிட்டு வாங்கப்பா!''

''உனக்கு மாலைதானே போர்டு மீட்டிங்?''

''ஆமாம்!''

''மூன்று மணிக்கு தானே?

அதனால் நீ போய் 'சுயம்வரம்' நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துவிடேன், அகிலேஷ்!''

கார்த்திகேயன் மெல்ல கெஞ்சலுடன் சொல்ல... அகிலேஷ் சட்டென்று சீறினான்!

''ஆளை விடுங்கப்பா! இதுபோல வேலையெல்லாம் எனக்கு வைக்க வேண்டாம்! சம்பாதிப்பது மட்டும்தான் என் வேலை! இந்த

சேவை, தொண்டு, உதவுவது இதையெல்லாவற்றையும் நீங்க பார்த்துக்கங்கன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்?''

''டேய் அகிலேஷ் இன்று ஒருநாள் மட்டும் உதவுடா! தொடங்கி விட்டு உடனே புறப்பட்டு வந்துவிடு!'' பிளீஸ் கார்த்திகேயன் கெஞ்சினார்.

''சரி... சரி போய்த் தொலைக்கிறேன்! எத்தனை மணிக்கு போக வேண்டும்?''

''பத்துக்கு இருக்க வேண்டும்!''

''மணி இப்போதே ஒன்பதே முக்கால் ஆகுது! நான் குளித்து, உண்டு முடித்து போய் சேர எப்படியும் பத்தரையாவது ஆகிவிடும்!''

''பரவாயில்லை! போகலாம்!''

''எல்லோரும் அங்கே காத்திருப்பாங்க! அவர்களை காக்க வைப்பது முறையா? என்னை நேரத்திலே எழுப்பி இருக்கலாம்!''

''நீ ரொம்ப அசந்து தூங்கிக் கொண்டு இருந்தாய்! பிள்ளை தூங்கட்டும் என்று விட்டுவிட்டேன்! இப்போ நான் வந்து எழுப்பிய நேரத்துக்கு நீ குளிச்சி தயாராகி இருந்தால் இந்நேரம் நீ அங்கே இருந்திருக்கலாம்!''

''அதான் நீங்க இரண்டு பேரும் ரொம்ப நேரமா கத்தியில்லாமல் ரத்தம் சிந்தாமல் பெரிதாய் சண்டைப்போட்டு என் டைமை வேஸ்ட் செய்து விட்டீங்களே!'' என்று அகிலேஷ் குறைப்பட்டுக் கொண்டான்!

''நம்ம பொண்ணு ஆர்த்தி மட்டும் ஒரு பெண்ணைப் பெத்திருந்தால்.. என் பேத்தியையே இவனுக்கு கட்டி வைத்திருக்கலாம்!'' நமக்

***''பிக்பாக்கெட் பக்கிரிகிட்ட கொஞ்சம் நெருக்கமா பழகினது தப்பா போச்சு சார்''***

***''ஏன் சார்? என்னாச்சு?''***

***''வேற யாரும் மாட்டாதப்ப என்னோட பாக்கெட்லயே கையை வச்சிட்டான் சார்!''***

***-சீர்காழி வி.ரேவதி.***



குள்ள இப்படி சண்டையே வந்திருக்காது! என்று பத்மாவதி கண்கள் கலங்கினார்.

''அதுக்கெல்லாம் ஒரு கொடுப்பனை வேண்டுமே, பத்மாவதி'', கார்த்திகேயனும் சொல்லிவிட்டு சோகமானார்.

''கல்யாணமாகி இருபத்தொரு வருஷத்துக்கும் மேலாகுது! ஆனால், அவள் வயிற்றில் ஒரு புழு பூச்சி தங்கலையே!''

''என்னம்மா... என் கல்யாணக் கவலையில் ஆரம்பித்து கடைசியில் அக்காவுக்கு குழந்தையில்லைங்கிறதுல வந்து நின்றுவிட்டீர்களா?''

அகிலேஷ் கேட்டான்.

''அகிலேஷ் மருமகன் கை, கால் விளங்காமல் படுக்கையில் விழுந்து வருஷம் ஐந்தாகிவிட்டது! அவர் இப்போதான் மெல்ல வாக்கிங் ஸ்டிக் வச்சி நடக்கறார்! இதுல ஹார்ட்ல வால்வு பழுதாகி.. ஆபரேஷன் வேற செய்யணும்! அந்த மனுசனுக்கு ஏன்தான் நோய்மேல நோயா மாத்தி மாத்தி வருதோ! ஆர்த்தி அந்த மனுஷனுக்கு சேவை செய்து ஓய்ந்து போய்விடடாள்! ஏற்காட்டை விட்டு இங்கே வந்து விடுங்கன்னாலும் கேட்பதில்லை! நான் பெத்த ரெண்டுமே என் பேச்சை கேட்கறதில்லை! எல்லாம் விதி! என் தலையெழுத்து!''

அகிலேஷ் கார்த்திக் சொன்னான்.

''அம்மா... ரொம்ப சலித்துக் கொள்ளாதே! மாமாவையும், அக்காவையும் விரைவில் சேலத்துக்கு வரவழைக்கிறேன்!''

''எப்படி?''

''என் திருமணத்துக்கு பிறகு என் மனைவியை உங்க மகளா பார்த்துக் கொண்டு இங்கேயே இருந்துவிடுங்கன்னு சட்டமா சொல்லிவிடறேன்!''

''நீயும் கல்யாணம் செய்துக் கொள்! அக்காவையும் இங்கே வரவழைத்துவிடு! நாம் எல்லோரும் கூட்டுக் குடும்பா முன்பு போலவே சந்தோஷமா இருக்கலாம்! என் ஆசையை நிறைவேற்று, அகிலேஷ் தங்கம்! இதை மட்டும் நிறைவேற்றிவிட்டாயானால்... என் சந்தோஷக்கு அளவே இருக்காது, அகிலேஷ்!''

''உன் ஆசை நிறைவேறும்மா!''

ஆனால், இதை நிறைவேற்ற அகிலேஷ் எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கும் என்று அவனுக்கே தெரியாது!

# 5

"அகிலேஷ் நீ குளித்துவிட்டு கிளம்புப்பா! எங்களுக்கும் நேரமாகுது! கிளம்புகிறோம்!"

கார்த்திகேயன் சொல்ல... அகிலேஷ் கேட்டான்.

"நைட் வந்துவிடுவீங்க இல்லையாப்பா?"

"அவனை சந்தித்து நாலுமாசமாகுது! எங்களுக்குள்ள பேச நிறைய விஷயமிருக்கும்! அடுத்ததா, இந்த வயசான காலத்தில் அவ்வளவு தூரம் பயணம் செய்து திரும்பறதும் கஷ்டம்! நாளைக்கு நிச்சயம் வந்துவிடுகிறோம்!"

"அகிலேஷ் வேளா வேளைக்கு சரியா சாப்பிடணும்!"

"சரிம்மா!"

"பிரண்ட்சுங்களோட ஊர் சுத்திவிட்டு வீட்டுக்கு லேட்டா வரக்கூடாது!"

"சரிம்மா!"

"லேப் டாப்பை வைத்துக் கொண்டு நீண்ட நேரம் விழிச்சி இருக்கக் கூடாது! உடம்பு கெட்டுவிடும்!"

"செய்யறேம்மா! நான் என்ன சின்ன பிள்ளையா? கவலைப்படாமல் போயிட்டு வாங்கம்மா!"

***"என்னது... உங்க தாத்தா சுதந்திரப் போராட்ட வீரரா!?"***
***"ஆமாடா... பாட்டிகிட்டேயிருந்து சுதந்திரம் வேணும்னு போராடிப் பார்த்துட்டு, முடியாமல் போனதால அவுங்களைக் கொன்னுட்டு சிறைக்குப் போனவராம்...!"***

**-சீர்காழி வி.ரேவதி.**





பெரியவர்கள் கிளம்பி விட்டார்கள்!

கார்த்திகேயன்- பத்மாவதி தம்பதியினருக்கு அகிலேஷ் கார்த்திக், ஆர்த்தி என்று இரு குழந்தைகள்!

ஆர்த்தி திருமணம் ஆன ஒரு வருடத்திலேயே பிறந்து விட்டாள்! அதன் பிறகு கருத்தரிக்காமலேயே ஒரு பிள்ளையோடு நின்றுவிட் டாள், பத்மாவதி!

பின்னர், காலம் கடந்து, பதினைந்து ஆண்டுகள் கழிந்து, ஆர்த்தி பத்தாம் வகுப்பு படிக்கும்போது பத்மாவதி மீண்டும் கருவுற்றாள்!

வயதுக்கு வந்த பெண்ணை வைத்துக் கொண்டு பிள்ளைப் பெற் றுக் கொள்ள அவமானப்பட்ட பத்மாவதி... மாமியாரின் காலில் விழுந்தும்.. கணவனிடம் கெஞ்சிக் கூத்தாடியும் அதைக் கலைக்க அனுமதி வாங்கி டாக்டரிடம் சென்றாள்!

நன்கு குழந்தை வளர்ந்து விட்டதால் கலைக்க முடியாது என டாக் டர் கை விரித்துவிட்டார். குழந்தை நன்கு வளர்ந்து உள்ளது! உங்கள் உயிருக்கு ஆபத்து! வேண்டாம்! விட்டு விடுங்கள்! பையனாய் கூட பிறக்கலாம்! என்று டாக்டர் ஆசைக்காட்ட.. பத்மாவதியினுள்ளும் பேராசை!

பத்து மாதமும் பங்களாவிற்குள்ளே இருந்து அழகான அகிலேஷ் கார்த்திக்கை பெற்றெடுத்தாள்! வேண்டாம் என்று கலைக்கச் சென்ற அகிலேஷ் கார்த்திக் தான் இன்று திறமையுள்ளவனாய் ஊர்மெச்சும் அளவு உயர்ந்திருக்கிறான்!

ஆர்த்தி தன் பருவ வயதில் தன் வீட்டு எஸ்டேட்டிற்கு வேலைக்கு வந்த சேகரைக் காதலிக்க.. பெரிய போராட்டத்திற்கு பின் ஒன்று சேர்ந்தனர்!

ஆர்த்திக்கு தான் வயிற்றில் ஒரு பிள்ளை உண்டாகாமல் போனது!

ஏற்காட்டில்தான் எல்லோரும் ஒன்றாக வசித்தனர்! அகிலேஷின் வர்த்தகம் சேலத்தில் பெருக. அங்கே சென்று திரும்ப முடியாததால் சேலத்திற்கு இடம் பெயர்ந்தனர்! ஆனால், ஆர்த்தி வர முடியாது என்று அங்கேயே தங்கிவிட்டாள்! அங்குதான் நோய் வாய்ப்பட்ட கணவனோட வசிக்கிறாள்!

பத்மாவதிக்கு ஆர்த்தியின் கவலைதான் மிகப் பெரியது!

அகிலேஷ் கார்த்திக் மொட மொடப்பான காட்டன் வேட்டி, சட்டையில் கீழிறங்கி வந்தான். வெளிநாடு, வெளி மாநிலம் செல்லும் போதும்.. நண்பர்களோடு சுற்றும் போதுதான் பேண்ட், சட்டை, கோட், சூட் என்று அணிவான்! இதுபோல பொதுநிகழ்ச்சி, அலுவல்களுக்கு செல்லும்போது அவனுடைய உடை வேட்டி, சட்டைதான்!

ஊராரையெல்லாம் வேட்டி சட்டை அணியச் செய்யும் அவன் பேண்ட், சர்ட்டில் இருந்தால் நன்றாக இருக்காது என்று தனது இருபத்தைந்தாவது வயதிலேயே வேட்டி, சட்டைக்கு மாறிவிட்டான்!

அவனது நெடுநெடு உயரத்திற்கும், கம்பீரமான உருவத்திற்கும், சிவந்த நிறத்திற்கும் வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை மிகமிக அழகாக இருக்கும்! மேல்நோக்கி படிய வாரிய தலையும்.. அடர்ந்த மீசையும் அவனுக்கு இன்னும் பேரம்சத்தை சேர்க்கும்!

மணி பத்து.. பத்தரை... பதினொன்று என நேரம் ஆக ஆக ஷைனிகாவிற்கு பொறுமை இழந்து போனது! மண்டபத்தில் ஆண்களும் பெண்களும் என நானூறு பேருக்கும் மேல் இருந்தனர்.

முதல் வரிசையிலேயே இடம் பிடித்து அமர்ந்து விட்டாள், ஷைனிகா.

'இந்த கார்த்திகேயன் சார் ஏன் இன்னும் வராமல் இருக்கிறார்?' என்று சலித்துக் கொண்டாள்.

'நேரத்திற்கு வந்து துவங்கி வைத்துவிட்டு, பிறகு அவர் வேலையைப் பார்க்கப் போகலாமே' என்ற எண்ணம் உள்ளுக்குள் பூத்து அவர்மேல் கோபத்தை ஏற்படுத்தியது.

காத்திருந்து,

கண்கள் பூத்து,

***"என் கணவர் கீழே விழுந்து அடி பட்டுக்கிட்டார் டாக்டர்?"***

***"கீழே விழுந்ததால அடி பட்டுக்கிட்டாரா? அடி பட்டதால கீழே விழுந்தாரா?"***

**-சீர்காழி வி.ரேவதி.**



கடைசியில் கார்த்திகேயனுக்கு பதிலாய், அங்கே கம்பீரமாய் வந்து நின்றவனை வெறுப்பைக் கக்கும் கண்களோடு ஏறிட்டாள்.

தனது நண்பன் ரமேசை அவன் கம்பெனிக்கு சென்று அழைத்துவர அகிலேஷ் கார்த்திக்கு தாமதமாகி விட்டது.

அவனைக் கண்டதும் பெரும் பரபரப்பு!

எல்லோரும் எழுந்து நின்று வணங்கினர். அவனும் பதில் வணக்கம் சொல்லி கூட்டத்தை நோக்க, விறைத்துக் கொண்டு, கண்களில் சீற்றத் தோடு, வணங்காமல், திமிரோடு நின்ற ஷைனிகா கண்ணில் பட் டாள்.

இதுநாள் வரை எதிர்படும் மக்கள் அளவுக்கதிகமான மரியாதை யுடன் வணங்குவர். ஆனால், ஒரு பெண் அவன் முன்பு நெஞ்சை நிமிர்த்தி, தைரியமாய், அதுவும் அலட்சியத்தோடு நிற்பதைக் கண் டதும் சுவாரசியமானவன்.

அவளையே உற்று நோக்க...இதயத்தில் இனம்புரியாத புதிய உணர்வு!

மேடையில் அகிலேஷ், ரமேஷ் அமர்ந்தனர்! சேலம் மாவட்டத்தின் ஊனமுற்றோர் நலச்சங்கத்தின் தலைவர் இந்த சுயம்வரத்தை நடத்தித் தர வந்திருந்தார்!

'யார் இவள்? சுயம்வரத்தில் கலந்து கொள்ள வந்திருக்கிறாளா..?'

தேவதைப்போன்று இருக்கிறாள்! இவளுக்கு என்ன குறை இருக்கும்? பார்த்தால் குறையுள்ளவள் போல தெரியவில்லையே! பின்னே எதற்காக வந்திருக்கிறாள்?

பல கேள்விகள் அகிலேஷினுள் தோன்றி வண்டாய் குடைந்தன.

ஷைனிகாவினுள்ளோ...

'யார் இவன்..? என்ன பார்வை இது...? ஏன் இப்படி தன் தகுதியை மறந்து என்னையே வைத்தவிழி எடுக்காமல் பார்க்கிறான்..?'

'கார்த்திகேயன் சார் ஏன் வரவில்லை...? அவர் வராமல் எவனோ ஒரு பொறுக்கி வந்து,முன்பின் பெண்ணை பார்த்திராதவன் போல இப்படி என்னை வெறித்துப் பார்க்கிறானே...? இரையைக் கண்ட புலி போல!'

'பார்த்தால் படித்தவன் போல இருக்கிறான்!'

''புது பொண்டாட்டியானாலும் இத்தனை செல்லம் கூடாது மவனே...!''
''அப்படி என்னம்மா செல்லம் கொடுக்கிறேன்''
''வெங்காயம் நறுக்கி, அரைச்சி கொடுப்பததான் கண்கலங்காமல் வைச்சிருக்கிறாதா?''
-ரவீந்திரன், கன்னியாகுமரி.



'இந்த இளம் வயதில் வேட்டி, சட்டை அணிந்து கம்பீரமாய். நம் பாரம்பரிய உடையில் வந்திருக்கிறான்!'

'வாட்டசாட்டமாய் பேரழகனாய் இருக்கிறான்!'

'ஆனால், பார்வை ஏன் இப்படி பட்டிக்காட்டான் மிட்டாய்க்க டையைப் பார்த்ததுபோல இருக்கிறது!'

'கார்த்திகேயன் சார் உறவினனா..?'

'இவனை அனுப்பி விட்டு அவர் எங்கு சென்றார்? இவனுக்கு, நேரத்தைக் கடைபிடிக்கும் நல்ல பழக்கமே இல்லையா..?'

'இங்கிருப்போர் அனைவரும் குறையுள்ள மனிதர்களாயிற்றே! இவர்களைக் காக்க வைக்க இவனுக்கு எப்படி மனது வந்தது!'

'பணமிருந்தால் மனிதர்களிடம் உள்ள இயல்பான குணம் மறந்து போகுமா..?'

ஷைனிகா இவ்வாறு நினைத்து நெஞ்சம் குமுறிக்கொண்டிருந் தாள்.

''கார்த்திகேயன் சார் மகனும், மிகப்பெரிய தொழிலதிபரும், பெரும் இரக்க குணமும், வாரி வாரி வழங்கும் வள்ளல் தன்மையும் உள்ள சமூக சேவகருமான அகிலேஷ் கார்த்திக் சாரை வருக வருக என வர வேற்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்! அவர் ஓரிரு நிமிடங்கள் பேசி..சுயம்வரத்தை துவக்கி வைப்பார்!'' என்று ஊனமுற்றோர் நலச் சங்க தலைவர் பேசி அமர்ந்தார்.

ஷைனிகாவிற்கு கார்த்திகேயன் சாருக்கு ஒரு மகன் இருக்கிறார்! அவர் பையன் அகிலேஷ் கார்த்திக்! மிகப்பெரிய தொழிலதிபர் என் றெல்லாம் தெரியும்! ஆனால் இதுவரைப் பார்த்ததில்லை! முதன்மு

தலாய் பார்க்கிறாள்! ஈஸ்வரியம்மாள் அகிலேஷ் கார்த்திக்கைப்பற்றி ரொம்ப பெருமையாய் சொல்லி இருக்கிறார்!

ஈஸ்வரி கூறியதற்கும். அகிலேஷ் நடந்து கொள்வதற்கும் சிறிதும் சம்பந்தமில்லையே! என்று ஷைனிகா நினைக்க,

அகிலேஷ் கார்த்திக் எழுந்து மைக் பிடித்து..

''எல்லோருக்கும் எனது இனிய வணக்கம்! எனது தந்தை வருவதாய் இருந்தது! திடீரென அவர் வேறொரு நிகழ்ச்சிக்கு செல்லும்படியான தால் நான் வரவேண்டியதாகிவிட்டது! அதனால்தான் இந்த தாமதம்! முதலில் நான் தாமதமாக வந்ததற்கு நீங்கள் அனைவரும் என்னை மன்னிக்க வேண்டுகிறேன்!'' என்று மன்னிப்பு கேட்டான்.

அவன் அவ்வாறு மன்னிப்பு கேட்கவும், அவன் மேல் இருந்த சினம் மறைந்து போனது, ஷைனிகாவிற்கு!

''தங்களுக்கான சரியான துணையைத் தேர்ந்தெடுங்கள்! அவர்களை மணந்து மகிழ்ச்சியோடு வாழுங்கள்! உங்களுக்கு வேண்டிய உதவியை செய்ய காத்திருக்கேன்!'' என்று சுருக்கமாய் கூறிவிட்டு அமர்ந்தான்.

அவன் பார்வை எங்கே சுற்றினாலும்...கடைசியில் அவள் மேலே வந்து நிலைத்தது. மற்றவர்கள் அவனைப்பற்றியும், அவளைப்பற்றியும் என்ன நினைப்பார்கள் என்ற அறிவுகூட இவனுக்கு இல்லையே என்று ஷைனிகா நினைக்க...மீண்டும் அவள் முகத்தில் பெரும் சினம் குடிகொண்டது.

முதலில் ஆண்களின் அறிமுகத்திலிருந்து சுயம்வரம் தொடங்கியது!.

''அகிலேஷ்...நாம் கிளம்பலாமா..?''

''என்ன அவசரம் ரமேஷ்?'' என்றவனின் பார்வை ஷைனிகாவின் மேலேயே ஏக்கத்தோடு படிந்திருந்தது.

''நீதானே துவங்கியதும் கிளம்பலாம் வாடான்னு என்னை இழுத்துக்கொண்டு வந்தாய்! வேலையிருக்கு அகிலேஷ்! பிளீஸ்...'' என்று நண்பன் கெஞ்சவும்...அனைவரிடமும் விடை பெற்று மனசே இல்லாமல் கிளம்பினான்!

''என்ன மச்சி. முன் வரிசையில் இருந்த ஒரு அழகிய மயிலையே

**''புத்தகத்திற்கும், கடிதத்துக்கும் என்ன வித்தியாசம்?''**

**''நீதான் சொல்லேன்''**

**''புத்தகத்தைப்படித்துக் கிழித்திடுறோம், கடிதத்தை கிழிச்சுப் படிக்கிறோம்''**

**-சிவ.இராமலிங்கம், தூத்துக்குடி.**



பார்த்துக் கொண்டு இருந்தே..? என்ன விஷயம்...? அவளைப் பிடிச்சிருக்கா...? அவளிடம் மயங்கி விட்டாயா....? நீ இப்படியெல்லாம் எந்தப் பெண்ணையும் வைத்தவிழி எடுக்காமல் பார்த்தது இல்லையே, மச்சி!'' ரமேஷ் சின்ன சிரிப்புடன் கேட்டான்.

''ச்சே...ச்சே...நான் யாரையும் பார்க்கலை! நீயே ஏதாவது உளறாதே, ரமேஷ்!'' என்று சமாளித்தான், அகிலேஷ் கார்த்திக்.

''அவள் ரொம்ப அழகுடா! தேவதைப்போல இருக்கிறாள்! அவளிடம் நீ மயங்கியிருந்தாலும் தப்பில்லை!''

''ரமேஷ் சும்மா இருடா! கலாய்க்காதேடா! எந்த குறையும் இல்லாமல் இருக்கிறாளே! அவள் எதுக்கு இந்த சுயம்வரத்திற்கு வந்திருக்கிறாள் என்ற கேள்வியால் தான் நான் அவளை அடிக்கடி நோக்கினேன்!''

அகிலேஷ் கூற....ரமேஷ், பின்னர்தான் அவனை கிண்டல் செய்வதை விட்டான்!.

'என்ன பெயர்? யார் அவள்? எங்கிருந்து வந்தாள்?' என்று அறியாமல் வந்து விட்டோமே என்று அகிலேஷின் மனம் தவித்தது.

ஒரே பார்வையில் சட்டென்று அவளைப் பிடித்துவிட்டது!

இதயம் இடம் மாறியக் கணக்காய் உணர்வு!

ஆனால், அவள் ஏதாவது துணையைத் தேர்ந்தெடுத்திருப்பாளோ என்ற எண்ணம் தோன்றி மனதில் இருளாய் பயம் கவ்விக் கொண்டது!

உறக்கம் கெட்டு, தவிப்போடு அறையில் குறுக்கும் நெடுக்குமாக விடிய விடிய நடந்தான்!

## 6

இரண்டு நாட்கள் கழித்து. மூன்றாம் நாள் காலைப் பொழுதில் பட்டு வேட்டி, சட்டையில் படியிறங்கி வந்த மகனைப்பார்த்து கார்த்திகேயனும், பத்மாவதியும் ஆச்சரியமாகினர்!

''யாருக்கு அகிலேஷ் திருமணம்? எங்கு கிளம்பி விட்டாய்...?'' பத்மாவதி கேட்டார்.

''உன் நண்பர்களில் யாருக்கும் இன்று திருமணம் இல்லையே!'' கார்த்திகேயன் கேட்டார்.

''சுயம்வரத்தில் அன்று தேர்வான ஜோடிகளுக்கு இன்று தானேப்பா திருமணம்?''

''ஆமாம், அகிலேஷ்!''

''நீங்கள் அங்குதானே கிளம்புகிறீர்கள்?''

''ம்!''

''நானும் அங்கு தான் வருகிறேன்!''

''நிஜம் தானா, அகிலேஷ்? நீ பொய் சொல்லவில்லையே! அன்று நான் உன்னை அவ்வளவு வற்புறுத்தி அனுப்பினேன்! இன்று நீயே கிளம்பி வந்தால் என்ன அர்த்தம்? சேவை, தொண்டு இதெல்லாம் உனக்கு பிடிக்காதே''

''அப்பா....யாருக்காவது சேவை செய்வதற்கும், தொண்டு செய்வதற்கும் பிடிக்காமல் போகுமா? எனக்கு நேரம் போதாமல்தான் நான் இதில் கலந்து கொள்வதில்லை அடுத்ததா...இதைப்பார்த்து கொள்ள நீங்கள் இருக்கும் போது. நான் எதற்கு மூக்கை நுழைக்க வேண்டும் என்று ஒதுங்கியிருந்தேன்...!

அன்று நீங்கள் சுயம்வரத்துக்கு அனுப்பினபோது சுவாரஸ்யமே இல்லாமல் தான் போனேன்! ரமேஷ் வற்புறுத்தலால் உடனே திரும்பிவிட்டேன்! அங்கே எத்தனை பேர் தங்கள் துணையை தேர்ந்தெடுத்தார்கள்? யார் யார் என்று தெரிந்து கொள்ளவும் அவர்கள் திருமணத்தை பார்க்க வேணும் போலவும் ஆசையா இருக்குப்பா! அதான்

கிளம்பினேன்!''

''ரொம்ப மகிழ்ச்சிப்பா! வா போகலாம்!''

பெற்றோர் இருவரும் ஆளுக்கொரு கையைப் பற்றிக்கொண்டு நடக்க...அகிலேஷ் கொஞ்சம் பயத்தோடு நடந்தான்!

அங்கு மாலை மாற்றி திருமணம் செய்துக் கொள்ளப் போகிற வர்களின் முகத்தில் பூக்கும் மகிழ்ச்சியைக் காண ஐம்பது சதவீத ஆசையும்...

அடுத்ததாய், அன்று பார்த்த தேவதைப் போன்ற பேரழகி இன்று அங்கே வந்திருக்கலாம் என்று சிறு நப்பாசையுடனும்தான் அகிலேஷ் சுயம்வரத்திற்கு வருவது!

அவள் வருவாளா...?

அவள் யாரையேனும் தேர்ந்து எடுத்து இருந்தாலும் அவனோட னான அவளின் திருமணத்தை நிறுத்திவிட நினைத்துதான் அகிலேஷ் முக்கியமாய் வருவது!

மனசெல்லாம் பயமும், தவிப்பும், கலக்கமும் போட்டியிட அங்கு சென்று இறங்கினான், அகிலேஷ் கார்த்திக்!

மூவருக்கும் நல்ல வரவேற்பு! நாற்காலியில் அமர்ந்தனர்! கார்த்திகே யனின் செயலாளர் அங்கு ஏற்கனவே வந்து. தன் குழுக்களோடு..தேர் வான ஜோடிகளுக்கான பட்டுப்புடவை, வேட்டி, சட்டை, தாலி, மாலை என எல்லாவற்றையும் பெரிய பெரிய தாம்பூலத் தட்டுகளில் அடுக்கி வைத்திருந்தார்!

அகிலேஷின் பார்வை சுற்றிச் சுழன்று ஒவ்வொருவராய் ஆராய்ந் தது!

**''நீ என்னப்பா**
**பகல்ல 1 தடவை**
**ராத்திரியில 1 தடவை**
**பிச்சைக்கு வர்றே?''**
**''எனக்கு 2- குடும்பம் தாயி...!''**
**-குஞ்சன்விளை. ரவி.**



தேடிச்சென்ற பார்வைக்கு ஷைனிகா கிடைக்காமல் போனதும், அவள் யாரையும் தேர்ந்தெடுக்கவில்லை என்ற எண்ணம் மனதிற்கு மகிழ்ச்சியைத் தந்தது!

அவளைக் காண ஏங்கிய கண்களுக்கு தரிசனம் கிடைக்காமல் போனதால் அதே மனம் வருந்தியது!

அவள் உள்ளூரா...? வெளியூரா...?

அவளை நான் மீண்டும் காண்பேனா...? மாட்டேனா...? என்ற தவிப்புடன் மேடையில் நடுநாயகமாய் அமர்ந்திருந்தவனின் கண்க ளுக்கு பெரும் ஆச்சரியமாய் அப்போது தான் அவள் மண்டபத்திற்குள் நுழைந்தாள்!

அவளைக் கண்டதும் மனசெல்லாம் மத்தாப்பூ பூத்தது! ஜில்லென்ற இதமான தென்றல் தீண்டிய கணக்காய் அவன் உள்ளம் குளிர்ந்தது! ஈஸ்வரியம்மாள் மேடையேறி வந்து கார்த்திகேயன், பத்மாவதி, அகி லேஷ் கார்த்திக்கின் நலம் விசாரித்தாள்!

''இல்லத்திலிருந்து வந்தவர்கள் எத்தனை பேர் தங்களுக்கான ஜோடியைத் தேர்வு செய்தார்கள்....'' கார்த்திகேயன் கேட்க...

''நான்கு பேர் ஐயா!''

''ரொம்ப சந்தோஷம்மா...!''

ஈஸ்வரியம்மாள் விடைப்பெற்று கீழிறங்கி....மலர், மல்லிகா, மேரி, ரஞ்சனா, ஷைனிகா நின்ற இடத்திற்கு வர...ஷைனிகா ஈஸ்வரியம்மா ளிடம் சிரித்து சிரித்து பேச....அதைக்கண்ட அகிலேஷ் கார்த்திக்கு இந்த உற்சாகம் பீறிட்டது!.

''அந்தப் பெண்....?'' என்று தந்தையிடம் கேட்க,

''அவள் ஈஸ்வரியம்மாள் இல்லத்தில் வளர்பவள்!''

''நான் இரண்டொரு முறை சென்றபோது அவளைப் பார்த்ததில் லையேப்பா!''

''அவள் சென்னையில் படிப்பை முடித்து இல்லத்திற்கு வந்து ஒரு மாதம் தான் ஆகிறது, அகிலேஷ்!''

''நீ எதுக்குப்பா அந்தப் பெண்ணைப் பற்றிக் கேட்கிற?'' பத்மாவதி கண்களில் சந்தேகத்துடன் கேட்க... முழித்தான்....பின், சட்டென்று அப்படிச் சொன்னான்.

''டாக்டருக்கு சரியா எழுத தெரியாது போலிருக்கு''
''எப்படி சொல்ற!''
''மாத்திரை சீட்டுல்ல அவர் எழுதுறது புரியமாட்டுதே!''
–கச்சனம் எஸ். இராதாகிருஷ்ணன், மதுக்கூர்.



''புதிதாய் இருக்கிறாளே! ஈஸ்வரியம்மா விடம் சிரித்து சிரித்து பேசுகிறாளே! அவள் இல்லத்தை சேர்ந்தவளா இருப்பாளோ என்ற எண்ணத்தால் கேட்டேன். இப்போது இல்லம் முழுக்க முழுக்க நம் உதவியுடன் தானே நடக்கிறது! நம் பாதுகாப்பில் இருப்பவர்களை தெரிஞ்சுக்கணும்னு நினைக்கறது தப்பாம்மா...'' அகிலேஷ் இப்படி பேச...

''அங்கே போகவே

கஷ்டப்படுவே, நீ! அப்படிப்பட்டவன் அங்கிருப்பவர்களை புதிதாய் தெரிஞ்சுக்க நினைக்கறது எனக்கு சந்தேகத்தை வரவழைக் குது!'' என்று பத்மாவதி அவனை ஆராய்வது போல பார்க்க தாயின் பார்வையை அலட்சியப்படுத்தி, அகிலேஷ் மீண்டும் ஷைனிகா வையே ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தான்!.

கொஞ்ச நேரத்தில் திருமணமாகப்போகும் மணமக்களுக்கு உடை களைக் கொடுக்க அத்தனை பேரும் அணிந்துக் கொண்டு வந்தனர்!

கார்த்திகேயன் ஒவ்வொரு ஜோடியினருக்கும் தாலி எடுத்துக் கொடுத்துக் கொண்டே சென்றவர்...பின் மனைவியை எடுத்துக் கொடுக்கச் சொன்னார்! பின்,

''அகிலேஷ்....மீதி பேருக்கு நீ எடுத்துக் கொடுப்பா!'' என்று தந்தை சொல்லவும், அகிலேஷ் ஆச்சரியமாகி...

''அப்பா...நானா...?''

''ஆமாம்!''

''அப்பா....எனக்கு அதற்கான வயசில்லையே?''

''இந்த சுயம்வரம் நிகழ்ச்சிக்காகவும், இவங்களுக்கான தாலி,

கூறைப்புடவை, சீர்வரிசை என்று செய்ய லட்ச லட்சமா கோடிகளில் செலவு செய்வது, நீ! அந்தப்பணத்தை கஷ்டப்பட்டு சம்பாதிப்பது, நீ! இதற்கெல்லாம் வயசு தேவையில்லை, அகிலேஷ்! மனசு இருந்தால் நீயும் பெரிய மனுஷன் தான்! கமான்! எடுத்துக் கொடுப்பா, ராஜா!''

என்றதும் அகிலேஷ் ஒவ்வொருவருக்கும் தாலியை எடுத்துக் கொடுத்தான்.

பின் மேடைக்கு மூவரும் போனார்கள்.

அங்கு அமர்ந்திருந்த ஐயர் மந்திரம் ஓதி,

''கெட்டிமேளம்...கெட்டிமேளம்...!'' என்று கூற... மேளம் முழங்க அங்கிருந்த நூற்று இருபது ஜோடிகளுக்கும் திருமணம் நடந்தது.

இல்லத்து பெண்கள் நான்கு பேரின் கழுத்திலும் தாலியேற ஷைனிகாவின் மனதில் இன்பம் பொங்க. அதன் விளைவாய் முகம் பொலிவு பெற. அந்தக் காட்சியை அகிலேஷ் மனதில் இறுத்திக் கொண்டான்!

பின் மணமக்களுக்கு பந்தி பரிமாறப்பட்டது!

ஷைனிகாவிற்கு அங்கிருந்த மண்டபத்தின் முன்புற தோட்டத்தை ரசிக்க ஆசை வந்து வெளியேறினாள்!

அங்கு அழகுக்காக நடப்பட்டிருந்த மலர்களையும், செடிகளையும், கொடிகளையும் ரசித்துக் கொண்டே அங்கிருந்த மகிழம்பூ மரத்தடியில் போடப்பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்தாள்.

அகிலேஷ் கொஞ்ச நேரத்தில் அவள் முன்பு வந்து நிற்க... தென்றலோடு கைகோர்த்து வந்த பூவின் இதமான வாசத்தை உள்ளிழுத்து கண்மூடி ரசித்துக் கொண்டிருந்தவள் காலடி சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தாள்.

எதிரில் விழிகளை விரித்து அவளையே ஆழ்ந்து ஸ்பரித்துக் கொண்டிருந்த அகிலேஷைக் கண்டதும் பதறி எழுந்தாள்.

''ஹலோ பெண்ணே உன் தனிமையை கெடுத்து விட்டேனா?'' என்று கேட்க,

ஷைனிகா, அகிலேஷை லேசான கோபத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

''உன் பெயர் என்ன பெண்ணே?'

''என் பெயரை தெரிந்து கொள்ள வேண்டும் என்று என்ன

அவசியம்?'' என்று சீறினாள்.

''உன் பெயர் என்ன பெரிய தங்கமலை ரகசியமா? ஈஸ்வரியம்மாளைக் கேட்டால் சொல்லி விட்டுப் போகிறார்'' - என்று சிரிப்புடன் சொல்ல,

''அதை முதலிலேயே செய்திருக்கலாம்! இல்லையா?'' என்று குற்றம் சாடுவதைப் போல கேட்க,

''உன் வாயால் சொல்லிக் கேட்க ஆசைப்பட்டேன்''.

''நீங்க ஏதோ என்னை வம்பிழுக்கவே வந்தது போல தெரியுது. நான் வரேன்'3' என்றவள் ஓட எத்தனிக்க,

அகிலேஷ் ஓரடி எடுத்து வைத்து அவள் முன்புறம் போய் நின்று இரு கைகளையும் நீட்டி மறித்தான்.

''சார் என்ன சார் இது? உங்கள் மேல் மரியாதை வைத்திருப்பவர்கள் பார்த்தால் உங்களை தப்பாக நினைக்கப் போகிறார்கள்.

என்னவென்று?''

''ஒரு பெண்ணை வழிமறித்து இப்படி அடாவடி செய்கிறாரே இந்த அகிலேஷ் என்று!''

''நான் பொறுக்கியோ, போக்கிரியோ இல்லையென்று அவர்களுக்கு தெரியும்!''

''உங்களுக்கு என்ன வேண்டும்? என் பேர் தானே தெரிய வேணும்? என் பெயர் ஷைனிகா!''

''ஷைனிகா ஆஹா ரொம்ப ஸ்வீட்டான பெயர்!'' என்று ரசித்து சொன்னவன்,

''ஷைனிகா உனக்கு நான் எப்போது தாலியைத் தருவது?'' என்று

**''ஜெயிலில் இருக்கும் போதுதான் படிக்காத தன் அருமையை உணர்ந்தேன்''**
**ஏன் தலைவரே... கம்பியைக் கூட எண்ண முடியலையா?''**
**-எம்.ஏ.நிவேதா,**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



தான் சொன்னான். அடுத்த நொடி ஷைனிகா எரிமலையானாள்.

''ஹலோ என்ன பேசறீங்க? அப்படி ஒரு நாள் கண்டிப்பா வராது''.

''உனக்கு இதுபோல தாலி எடுத்து கொடுக்கவெல்லாம் வரமாட்டேன் ஷைனிகா. அதற்கு பதிலாக உன் பக்கத்தில் உட்கார்ந்து தாலி கட்டத்தான் வருவேன். அதுவும் கூடிய சீக்கிரத்தில்''.

அவன் சொற்களால் பூகம்பம் தாக்கியது போல அதிர்ந்தாள்.

''ச்சே! என்ன பேசறீங்க? ஏன் இப்படி பொறுப்பில்லாம நடந்துக்கிறீங்க? கார்த்திகேயன் சார் பிள்ளை நீங்க. அடுத்ததா எங்கள் இல்லம் பல பேரா பெருகி, நாங்கள் எல்லோரும் பசி பட்டினியின்றி நல்ல முறையில் வாழ உதவுபவர் நீங்கள். உங்கள் மேல் நிறைய மதிப்பும், மரியாதையும் இருக்கு. அதை கெடுத்துக்காதீங்க. வழியை விடுங்க பிளீஸ்'' என்று கெஞ்ச நீட்டிய கையை மடக்கிக் கொண்டான். ஷைனிகா ஓடினாள்.

''தாலியே தேவையில்ல நீதான் என் பொண்டாட்டி... தாம்பூலம் தேவையில்ல நீதான் என் சரிபாதி!'' என்று அவன் ராகமாய் சொன்னது கேட்டு காதைப் பொத்திக் கொண்டு கண்களில் நீர் பூக்க ஓடினாள் ஷைனிகா.

## 7

இரண்டு நாள் கழித்து ஒரு மாலைப் பொழுது!

மதியம் ரெண்டு மணியிலிருந்து இல்லத்தில் உள்ளவர்களை வைத்துக் கொண்டு அங்கிருந்த தோட்டத்தில் அரும்பியிருந்த மல்லிகை, முல்லை, ஜாதிமுல்லை மொட்டுக்களையும், ரோஜா மொட்டுக்களையும் தன்னுடைய நேரடி பார்வையில் பறித்து முடித்தாள் ஷைனிகா.

ரஞ்சனியும் அவளோடு உதவியவள் தனது மகள் இனியா பள்ளியில் இருந்து வந்ததும் அதற்கு உடைமாற்றி மாலை சிற்றுண்டி கொடு

க்க போய்விட்டாள்.

குவியல் குவியலாய் கொட்டிக் கிடந்த மொட்டுக்களை பூ வியா பாரிகளுக்கு எடைபோட்டு கொடுத்து அதில் கிடைத்த தொகையை கொண்டு வந்து ஈஸ்வரியம்மாளிடம் கொடுத்தாள்.

பின் சின்ன குளியல் போட்டாள். அழகிய இளம் நீலநிற சுடிதாரை எடுத்து அணிந்து தலையை தளர தளர பின்னிப் போட்டுக் கொண் டாள். லேசாய் பவுடர் போட்டு பொட்டிட்டு கண்களுக்கு அழகாய் மையெழுதினாள்.

பள்ளிக்கு சென்று திரும்பிய குழந்தைகளுக்கு சுண்டல் கொடுத்து உண்ண வைத்து டீயை குடிக்க வைத்தாள்.

மாலை முழுவதும் விளையாட்டு என்று கூறிய பாரதியின் சொற் களுக்கு ஏற்ப ஐம்பதுக்கும் மேற்பட்ட பிள்ளைகளை அங்கிருந்த பெரிய போர்ட்டிகோவில் வயதிற்கு தகுந்தாற்போல குழுகுழுவாய் பிரித்து அவரவர்களுக்கு பிடித்த கேரம், செஸ், கபடி, கோ-கோ என விளையாட அனுப்பினாள்.

ரஞ்சனியின் குழந்தையை ஒத்த வயதில் இருந்த பத்து பிள்ளை களை அழைத்துக் கொண்டு என்ன விளையாட்டு விளையாடலாம்? என்று கேட்க,

''அக்கா, அக்கா கண்களை கட்டிக் கொண்டு கண்ணாமூச்சி ஆட லாம்'' என்று அவர்கள் சொல்ல,

''அதெல்லாம் வேண்டாம். உட்கார்ந்து விளையாடறாப்போல விளையாட்டு விளையாடலாம்''.

''அதெல்லாம் போர் அக்கா. பிளீஸ்க்கா கண்ணாமூச்சி விளை யாட்டு தான் ரொம்ப நல்லா இருக்கும்'' என்று

**''நம்ம தலைவருக்குடாக்டர் பட்டம் தொடுத்தது தப்புன்னு பேசிக்கிறாங்க''**

**''ஏன்?''**

**''கோட்டும், சூட்டும் கொடுக்காம விட்டுட்டாங்களாம்''.**

**-சிவ.இராமலிங்கம்,**
**தூத்துக்குடி.**



அத்தனை பேரும் கெஞ்சினர்.

''சரி விளையாடலாம் வாங்க. யார் கண்ணை கட்டுவது? இனியா உன் கண்ணை கட்டலாமா?''

''ம்கூம் உங்க கண்ணை கட்டலாம்''.

ஓ.கே. என்றவள் நீண்ட துணியால் கண்ணையும் கட்டிக் கொண்டாள் ஷைனிகா. அவளை இனியா சுற்றி விட்டு எல்லாரும் ஓடுங்கள் என்று குரல் கொடுக்க, குழந்தைகள் ஓடினர்.

ஷைனிகா குழந்தைகளை பிடிக்க மெல்ல மெல்ல நடந்தாள்.

''அக்கா நான் இங்கு இருக்கேன்'' என்று குரல் கொடுத்து அவளை ஒவ்வொருவரும் ஏமாற்றி விட்டு ஓடினர்.

வேலை முடிந்து நேரத்தோடே பங்களாவிற்கு திரும்பிக் கொண்டிருந்த அகிலேஷிற்கு ஷைனிகாவைப் பார்க்க பெரும் ஆசை எழ வண்டியை இல்லத்திற்கு விட்டான்.

கேட்டிற்குள் வண்டியை விட குழந்தைகள் விளையாடுவது கண்டு, காரை தூரத்திலேயே நிறுத்தினான். இறங்கி நடந்தான்.

ஷைனிகா குழந்தைகளோடு கண்ணைக் கட்டி கண்ணாமூச்சி ஆடுவது கண்டு அகிலேஷின் உள்ளம் துள்ளியது!

அவன் அருகில் போக அவன் பின்னே வந்து மறைந்து கொண்ட இனியா, ''நான் இங்கே இருக்கேன் வாங்கக்கா!'' என்று குரல் கொடுக்க குரல் வந்த திசையில் கையை வீசிச் சென்றவள்,

அகிலேஷ் கார்த்திக்கின் மீது பட்டென்று மோத கிழே விழப் போனாள்.

ஷைனிகாவை கீழே விழ விடாமல் சட்டென்று தாங்கிப் பிடித்தான். அவன் நெஞ்சோடு மோதி நின்றாள்.

வலிமையான கைகளுக்கிடையில் இருந்தவள் கண்ணில் இருந்த கட்டை அவிழ்த்துப் பார்த்து... அகிலேஷின் அணைப்பில் இருந்ததைக் கண்டு பதறிப்போய் ஐயோ என்று அலறி அவனிடமிருந்து விடுபட முயற்சித்தாள்.

''என்னை விடுங்க குழந்தைகள் பார்த்தால் தப்பா நினைப்பாங்க'' என்று கெஞ்சினாள்.

''தப்பா நினைக்க என்ன இருக்கு?'' உன்னை கீழே விழாமல் காப்

பாற்றத்தானே பிடித்தேன்? வெண்பற்கள் மின்ன சின்ன சிரிப்போடு சொன்னான்.

''காப்பாற்ற பிடித்தவர் சட்டென்று விட்டிருக்கணும். அதைவிட்டு விட்டு பார்க்கிறவங்க தப்பா நினைக்கிறது போலவா இப்படி விடாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பீங்க?'' ஷைனிகா சீறினாள்.

அகிலேஷை அளவுக்கு மிஞ்சிய கோபத்தோடு நோக்கி, ''உங்க மனசுல என்ன நினைச்சிகிட்டு இருக்கீங்க சார்?''

''உன்னைத் தான் நினைத்துக் கொண்டு இருக்கிறேன்!''

''ச்சே இப்படி பேச உங்களுக்கு வெட்கமாக இல்லை?''

''எதுக்கு வெட்கப்படணும்? உன்னை முதன் முதலா சுயம்வரத்துல பார்த்த நொடி, பார்த்த கணம் ரொம்ப பிடிச்சுப் போச்சு ஷைனிகா. உண்மையை சொல்கிறேன், அந்த நொடியே தலைசுற்றி பட்டென்று உன்னிடம் விழுந்து விட்டேன்''.

பத்தாம் வகுப்பிற்கு பிறகு என் படிப்பெல்லாம் இங்கிலாந்தில் தான். அங்கெல்லாம் எத்தனையோ அழகிகளை கண்டிருக்கிறேன். அடுத்ததாக இந்த வர்த்தக உலகத்தில் திறமைவாய்ந்த எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். தவிர குடும்ப உறவுப் பெண்களுக்கு சொல்லவே வேண்டாம்! நான் இவங்களுக்கெல்லாம் மசியாமல் என் தொழில் ஒன்றே குறிக்கோளாய் இதுநாள் வரை இருந்தேன். உன்னைப் பார்த்ததும் கல்யாணம், மனைவி, குழந்தைகள் என்று ஆசையும், கனவுகளும் வந்துவிட்டன. என்னை பெண்கள் பின்னால் அலைகிறேன் என்று நினைக்காதே!'' அகிலேஷ் கார்த்திக் தன்னை விளக்கி விட்டு அவளைப் பார்க்க,

''சும்மா கண்டபடி உளறாதீங்க சார். இளை

''பாரு... வழக்கமா நீதானேடி
என்பர்ஸ்ல பணத்தை அடிப்பே...?''
''இப்ப என்னங்க சொல்றீங்க?''
''பஸ்ல எவனோ உன் வேலையைப்
பண்ணிட்டான்டி''
''நோ பர்ஸ்... நோ பணம் பாரு!''
-அமுதா அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



ஞர் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டா இருக்கிற மனிதர் பேசற பேச்சா இது?'' என்று கூறியவள் உள்ளே ஓடப்போக,

''ஏய் ஷைனிகா உனக்கு என்னைப் புடிச்சிருக்கா?''

''போங்க சார், பைத்தியம் மாதிரி உளறுவதை விட்டு விட்டு வந்த வேலையைப் பாருங்கள்! உங்களை எனக்கு ஏன் பிடிக்கணும்?''

ஷைனிகா ஓடினாள்.

அகிலேஷ், ஈஸ்வரியம்மாளின் ஆபீஸ் அறைக்கு சென்றான்.

''வாங்க தம்பி! என்ன இது சர்ப்ரைஸ் விசிட்?'' என்றார் ஈஸ்வரி யம்மாள்.

''ஏற்காடு போய்விட்டு திரும்பினேன். சரி வழியில் இருக்கும் இல் லத்திற்குள் நுழைந்து உங்களையெல்லாம் பார்த்து விட்டுப் போக லாமே என்று நுழைந்து விட்டேன்''.

அகிலேஷ் கார்த்திக் பொய் சொன்னான்.

''என்ன சாப்பிடறீங்க அகிலேஷ் காபியா, டீயா, இல்ல குளிர்பானம் கொண்டு வரச் சொல்லவா?''

''இஞ்சியும், ஏலமும் போட்ட டீ இருந்தால் இந்த மாலை நேரத் துக்கு இதமாய் இருக்கும்''.

போனில் ஷைனிகாவிடம் விஷயத்தை சொல்ல, ஐந்தாவது நிமிடம் டீயோடு வந்தாள்.

அவளை விழிகளால் ஏறிட்டான். அந்த மைவிழிகளில் சற்று முன் அவன் பேசிய பேச்சுகளால் விளைந்த கோபக்கனல் நீங்கவில்லை. முறைப்போடு டீயை நீட்டினாள்.

தாங்க்ஸ்! என்று கூறி டீயைப் பெற்றவன் குடித்து விட்டு,

''சூப்பர் என்று ஷைனிகாவை கீழிருந்து மேலாகப் பார்த்து விரல் மடக்கி சொல்ல அவள் எரிமலையாய் மாறி முறைக்க,

''நான் டீயை சொன்னேன்மா'' என்று அகிலேஷ் சிரிக்க,

ஷைனிகாவினுள் பயப்பந்து உருண்டது!

ஈஸ்வரியம்மாளின் முன்பு இப்படி சீண்டி விளையாடுகிறானே அவர் என்னைப் பற்றி தவறாய் நினைத்துக் கொண்டால்..? என்ற எண்ணம் தோன்றி அவளை அலைக்கழித்தது.

''இடம் வசதி போதுமா ஆன்ட்டி?''

''உண்மையாகவே எதிரி நாட்டு மன்னன் படையெடுத்து வந்து விட்டாரே...!''

''அவன் அனுப்பிய புறாக்களை திருப்பி அனுப்பாமல், தாங்கள் சுட்டு சாப்பிட்டு விட்டதால் கோபமாம்!''

**-வாசுதேவன், நவி மும்பை.**



''எவ்வளவு பெரிய இடம்? ரொம்ப வசதியா இருக்குதுப்பா. எங்களுக்கான காய்கறியைப் பின்பக்க தோட்டத்தில் விளைவிச்சிக்கிறோம். பின்புற கொட்டகையில் பாலுக்காக பசுக்களையும் வளர்க்கிறோம்.

முன்புறத் தோட்டத்தில் மலர்களின் விளைச்சல் அமோகம். ஒவ்வொரு நாளும் அதன் மூலம் வரும் வருமானம், எங்க இல்லத்து மக்கள் செய்யும் கைவினைப் பொருள்கள் மூலம் கிடைக்கும் வருமானம், நீங்க கொடுக்கிற பெருந்தொகைன்னு இல்லம் ரொம்ப அருமையா நடக்குதுப்பா.

எங்க இல்லத்து மக்கள் சுத்தமான காற்றை சுவாசிக்கிறார்கள். கண்ணுக்கு குளிர்ச்சியான சேர்வராயன் மலைத்தொடர்ச்சியின் அழகு! இதமான தென்றல், மிதமான குளிர்ச்சி, இதமான இயற்கைச்சூழல்! சத்துள்ள உணவு... வசதியான கட்டிடங்கள், உடுத்திக் கொள்ள புதுசா உற்பத்தியான ஆடைகள்ன்னு நாங்க உங்க தயவால் ரொம்ப நல்லாவே வாழறோம் அகிலேஷ் தம்பி!''

கலங்கிய விழிகளுடன் ஈஸ்வரி சொன்னார்!

''என் தாயோட உயிரை காப்பாற்றிக் கொடுத்த உங்களுக்கு எவ்வளவு செய்தாலும் ஈடுஇணை ஆகாது, ஆன்ட்டி!'' என்றவன்...

''ஆன்ட்டி தப்பாக நினைக்கவில்லையென்றால் இன்னொரு டீ கிடைக்குமா?''

''இதுல தப்பா நினைக்க என்ன இருக்குப்பா, அகிலேஷ்! இருங்க கொண்டு வரச் சொல்கிறேன்!'' என்றவர் போனில் கட்டளையிட...

ஷைனிகா டீயோடு வந்தாள்!

அவன் தேவதையின் தரிசனம் மீண்டும் கிடைக்க... தனது கண்களில் நிரப்பிக் கொண்டான்!

சீறலோடு வந்தவள்... அவன் பார்வையின் ஸ்பரிசத்தால் விளைந்த வீரியத்தைத் தாங்க முடியாமல் தலைகுனிந்து கொண்டாள்!

அகிலேஷின் கடித்துத் தின்னும் பார்வையை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

அதுவும் பேரழகன், அகிலேஷ்!

நல்ல உள்ளத்துக்கு சொந்தக்காரன், அகிலேஷ்! செயல்களில் வெற்றியைக் காணும் வெற்றிவேந்தன், அகிலேஷ்!

படிப்பு... பணம்... பெருந்தொழில் என்று இருக்கும் அகிலேஷ் வந்து காதருமே 'உன்னைப் பிடித்திருக்கிறது' என்றால் அவள் உள்ள நெகிழாதா...?

அவளும் பெண்தானே!

அவள் உடம்பும், மனமும் இரும்பாலா செய்யப்பட்டிருக்கிறது? அவள் உடம்பும் எல்லோருக்கும் போல ரத்தத்தாலும், சதையாலும் தானே உருவாக்கப்பட்டு இருக்கிறது?

அவன் விடைபெற்றுப் போகும் பாதையிலேயே அவள் விழிகளும் தொடர்ந்து சென்றது!

இதனால் பெரும் விபரீதத்தைச் சந்திக்கப்போகிறோம் என்று அவளுக்கே தெரியாது!

# 8

மாலை 5.00 மணி!

சேர்வராயன் மலையின் குளிர்ச்சியான தென்றலின் தாலாட்டிலும்... மாலை நேர மயக்கத்திலும்... சேலம் மாநகரம் உற்சாகமாய் காணப்பட்டது!

ஷைனிகா அந்த பிரமாண்டமான ரெடிமேட் ஷோருமிற்குள் நுழைந்தாள்! தரைத்தளம் ஆண்களுக்கான உடைப்பிரிவு...முதல்

தளம் குழந்தைகளுக்கான உடைப்பிரிவு... இரண்டாவது தளம் பெண்களுக்கான உடைப்பிரிவு!

லிப்ட் மூலம் பயணித்து இரண்டாவது தளம் சென்றாள் ஷைனிகா! நாளை ஷைனிகாவிற்கு பிறந்த நாள் என்பதால் ஈஸ்வரியம்மாள் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து அவளுக்கான உடையை எடுத்துவரச் சொன்னார்!

விற்பனைப் பெண்கள் மாலை சிற்றுண்டி நேரம் என்பதால் மேல்தளத்திற்கு உண்பதற்காக சென்றிருந்தனர். ஹேங்கரில் தொங்கிய சுடிதாரைப் பார்த்துக் கொண்டு வந்தவளுக்கு இளம் மஞ்சளும், இளம் ரோஸ் நிறமும் கலந்த சுடிதார் பிடித்துப் போக அதை எடுத்துக் கொண்டு நடந்த போது...

''அந்த சுடிதாரைவிட இது உனக்கு பொருத்தமாக இருக்கும், ஷைனிகா!''

இளம்பச்சையும், அடர்ந்த ரோஸ் நிறக்கலரையும் இணைத்து... அழகாய் கற்களையும், மணிகளையும் பதித்த சுடிதாரை எடுத்து வந்து காட்டினான், அகிலேஷ் கார்த்திக்!

சட்டென்று அவள் முன்பு தோன்றிய அகிலேஷைக் கண்டதும் திகைத்துப் போனாள்! அவனைக் கண்டால் கரையும் மனதிற்கு கடிவாளம் போட அவள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவன் வந்து நின்றதும் எரிச்சலானாள்!

''ஹலோ... நீங்க யார் சார் எனக்கு உடையைத் தேர்வு செய்வதற்கு..? உங்க வேலையைப் பார்த்துக் கொண்டு போங்க!''

''என்னைப் பார்த்தவுடன்... ஏன் சண்டைக் கோழியாய்

***என் பையன் டாக்டராயிடுவான்'னு நினைக்கிறேன்''***
***''அவ்வளவு நல்லா படிக்கிறானா?''***
***''நல்லா கிறுக்குகிறான்!''***
**-எம்.ஏ.நிவேதா,**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



சிலுத்துக்கிறாய், ஷைனிகா...?''

''சும்மா அநாவசியமா என்கிட்ட வம்புக்கு வராதீங்க, சார்!''

''என்ன வம்பு செய்தேன்...? உன் கையைப்பிடித்து இழுத்தேனா...? இல்ல, உன் கன்னத்தை நிமிண்டி விளையாடினேனா...?''

''திஸ் ஈஸ் டூ மச்! இதையெல்லாம் என்கிட்ட வைத்துக் கொள்ளக்கூடாது!''

''அப்படியா...? பின் யாரிடம் வைத்துக் கொள்வது..?''

''உங்க முறைப் பெண்ணிடம்!''

''இது எனக்கு தெரியாமல் போச்சே!''

''இல்லேன்னா, உங்க அக்கா பெற்ற பெண்ணிடம் வைத்துக் கொள்ள வேண்டும்!''

''என் அக்காவிற்கு குழந்தையில்லாமல் போய்விட்டது!''

''அதற்கு நான் என்ன சார் செய்ய முடியும்?''

''என் அக்காவிற்கு பெண் இருந்திருந்தால் உன் வயது தான் இருக்கும்! அது இல்லாமல் போனதால்,உன்னை என் அக்கா பெண்ணாய் நினைத்துக் கொள்கிறேனே, ஷைனி! ப்ளீஸ் ஷைனி...'' என்று அவன் கொஞ்சலுடன் கெஞ்ச...

''அகிலேஷ் சார்... நீங்க பேசறதெல்லாம் பிடிக்கவில்லை!''

''சும்மா அகிலேஷ்னு கூப்பிடு, ஷைனி! சார் எல்லாம் வேண்டாமே!''

''இங்க பாருங்க.. ரொம்ப ஓவராப் போறீங்க? நான் கடை முதலாளியிடம் கம்ளைன்ட் பண்ண வேண்டி வரும்!''

''போ... போய் அதை செய்!''

கோபமான ஷைனிகா விறுவிறுவென அந்த தளத்தின் மேனேஜரிடம் சென்றாள்!

''சார்...நான் உங்க முதலாளியைப் பார்க்கணும்!''

''எதுக்குங்கம்மா...? உங்க பிரச்சனையை என்கிட்ட சொல்லுங்க? அதை நானே தீர்த்து வைக்கிறேன்!''

''அங்கொரு ஆள் என்னை வம்புக்கு இழுத்து தொல்லை செய்யறான்!''

''அட அப்படியா...? யார் அவன்...? அந்தப் பொறுக்கியால் எங்க

கடையோட நல்லபேரே கெட்டுவிடுமே! அவனை பின்னி எடுத்துட றேன்! காட்டுங்கம்மா!''

அந்த வயதான மேலாளர் ஆவேசமாய் பேசி.. அவள் பின்னே வர...

''அதோபாருங்க! அங்கே வெள்ளை வேட்டியும், சட்டையும் போட்டு கிட்டு... மாப்பிள்ளை போல தெனாவட்டாக நிற்பவர்தான்!''

''அவராம்மா...?'' என்றவர் அகிலேஷ் கார்த்திக் அருகில் போய் நின்று கையைக் கட்டி உடலை வளைத்து...

''வணக்கம் சார்! நீங்களா சார்...? எப்போ சார் வந்தீர்கள்...? இந்தப் பெண் உங்களை...'' என்றவர் அதற்கு மேல் சொல்லாமல் அவனைப் பார்க்க...

''கம்ளைன்ட் செய்தாளா...?''

''ஆமாம், சார்! ஸாரி, சார்...?'' என்று சொல்லிவிட்டு நகரப் பார்க்க...

''என்ன சார் அவரை விசாரிக்காமல் போறீங்க?''

''அடப் போங்கம்மா! உங்களால் என் வேலையே காலியாகிவிடும்! அவர்தான் இந்த ஆர்த்தி ரெடிமேட் ஷோரூமோட முதலாளி! எவ்வளவு தங்கமான மனுஷன்! அவரைப் போய் என் வாயால பொறுக்கின்னெல்லாம் சொல்லிட்டேனே! இது போல வேறு யாரிடமாவது அவரைப் பற்றி தவறாக சொல்லாதீங்கம்மா! அப்புறம் உன்னை பைத்தியம்ன்னு நினைத்துக் கொள்வாங்க!''

மேனேஜர் கடுப்பாகி கத்திவிட்டு செல்ல...

ஷைனிகாவை ஒரு மாதிரியான அவமானம் பிடுங்கி தின்ன... அதற்கு மேல் அங்கு நில்லாமல் விறுவிறுவென

**''பெரியவங்களே! உங்களுக்கு பென்சன் உண்டா...?''**
**''3 பெண்களும் 4 சன்-களும் உண்டு...!''**
**-சீர்காழி வி.ரேவதி.**



நடந்தாள், ஷைனிகா!

''ஏய் ஷைனி! எங்கே ஓடறே...? துணியை எடுத்து போ!'' அகிலேஷ் சொன்னதைக் காதில் வாங்காமல்.... தீயாய் உடல் முழுக்க பரவிய கோபத்துடன்...லிப்டை தவிர்த்து... படிகளில் இறங்கி கீழே வருவதற்குள்...

லிப்ட் மூலம் அகிலேஷ் கீழே வந்து விட்டான்!

அவள் முன்பு சுடிதார் அடங்கிய பார்சலை நீட்ட...ஷைனிகா அலட்சியப்படுத்திவிட்டு வெளியேறினாள்!

பக்கத்தில் இருந்த பஸ் ஸ்டாப்பில் வந்து நின்று பஸ்ஸுக்காக காத்திருந்தாள்!

அகிலேஷும் காரோடு வந்துவிட்டான்! கார் கதவைத் திறந்து விட்டு...

''ஷைனிகா... காரில் ஏறு! நான் இல்லத்தில் விட்டு விடுகிறேன்!''

''இங்க பாருங்க! எனக்கு இல்லத்துக்கு போகத் தெரியும்! நீங்க உங்க வேலையைப் பார்த்துக் கொண்டு போங்க! வெறுப்பேத்தாதீங்க! ப்ளீஸ்...''

''ஷைனிகா...நான்பிடிவாதக்காரன்!நீஎன்பேச்சுகேட்கலேன்னால்... அப்படியே அலாக்காக தூக்கி உன்னை காருக்குள்ளே போட்டுவிடுவேன்! தெரிஞ்சிக்கோ!''

அவன் சொற்களைக் காதில் வாங்காமல் கடந்து போன ஆட்டோவை கை தட்டி அழைக்க... அருகே வந்தவன் அகிலேஷைப் பார்க்க.. அவனோ, ''போ...'' என்று சுட்டுவிரலை அசைக்க... ஆட்டோகாரன் திரும்பிபார்க்காமல் போய்விட்டான்!

''என் விரல் அசையாமல் யாரும் உன்னை

''இன்று நானே சமைக்கிறேன்'னு சொன்னேன்டி...''
''உன் கணவர் என்னடி சொன்னாரு?''
''கட்டின புருஷனைக் கொன்ன பாவம் உனக்கு வேண்டாம்'னு சொல்லிட்டாருடி?''
-அமுதா அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.





ஏற்றமாட்டார்கள்!''

''பஸ்ஸில் கூடவா...?''

''அதையும் பார்க்கிறாயா...?''

''அவங்க யாரும் என்னை ஏற்ற வேண்டாம்! என் கால் இருக்கு! நடந்து போய் கொள்கிறேன்!''

ஷைனிகா நடக்க.. அகிலேஷ் சட்டென்று கைப்பற்ற...

''கையை விடுங்க, அகிலேஷ்!'' அளவுக்கு மிஞ்சிய கோபத்துடன் கையை உதற...

அவனோ, அவளை தரதரவென இழுத்துப்போய் காரினுள் தள்ளி, கதவை மூடிவிட்டு... டிரைவர் இருக்கையில் அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்தான்!

ஷைனிகா இதை எதிர்பார்க்கவில்லை!

தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டாள்!

கொஞ்ச நேரத்தில்...அவன், அவள் மேல் எடுத்துக் கொள்ளும் உரிமையையும், ஆளுமைத் தன்மையையும் நினைத்த போது.. அவளுள் காட்டாறு வெள்ளமாய் கோபம் பொங்கி பிரவாகம் எடுக்க கத்தினாள்!

''உங்க மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கீங்க, அகிலேஷ்?''

''உன்னை தான் மனம் முழுக்க நினைத்துக் கொண்டிருக்கிறேன்!'' சின்ன முறுவலுடன் பதில் சொல்ல...

அவன் பதிலைக் கேட்டவுடன்...பக்கத்தில் இருந்தவனின் தோளில் ஆத்திரம் தீரும் மட்டும் குத்தினாள்!

''ஆஹா... என்ன சுகம்! காதலியின் அடிகூட... எவ்வளவு சுகமாய்... மழைக்கால சாரலாய்... மயிலிறகு வருடலாய்... தென்றலின் குளுமையாய் என்னுள் இறங்குகிறதே!'' என்று ரசிப்புடன் சொல்ல...

''ஏன் இப்படி தொல்லை செய்யறீங்க, அகிலேஷ்? நான் என்ன பாவம் செய்தேன், அகிலேஷ்? ஏன் உங்க கண்ணில்பட்டு தொலைச்சேனோ! என்னால் தாங்க முடியலை, அகிலேஷ்! என்னை விட்டுவிடுங்க, அகிலேஷ்!...

நான் தாய், தகப்பனில்லாத அநாதை! உங்களுக்கு பொருத்தமானவள் இல்லை! என்னை விட்டுடுங்க அகிலேஷ்! உங்களைக் கெஞ்சி கேட்

''பணம் திருடு போயிடுச்சுனு போலீஸ்க்கு எஸ்.எம்.எஸ். பண்ணினேன்'' ''ரிசீவ்டு'னு ரிப்ளை வந்திடுச் சா...''

''பணம் கிடைச்சிடுச்சாமா?''

''எஸ்.எம்.எஸ்.கிடைச்சிடுச்சாம்!''

-எம்.அசோக் ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



டுக்கிறேன், அகிலேஷ்! ப்ளீஸ், அகிலேஷ்...'' என்று அவனைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டாள்!

அகிலேஷ் வண்டியை ஓரம்கட்டி நிறுத்தினான்!

''என்கிட்ட காலேஜ்ல வம்பு செய்த நாலைந்து பேரை செருப்பால் அடித்திருக்கிறேன்! உங்களை எனக்கு திட்ட கூட மனசு வரலை! உங்க மேல அவ்வளவு மரியாதை! எங்க இல்லத்து மக்கள் நிம்மதியா... தாராளமா... சுகாதாரமான வாழ்வு வாழ நீங்க தான் காரணம்! நாங்க இது நாள் வரை யாராவது கொடுக்கற பழைய துணியை தான் உடுத்திகிட்டு இருந்தோம்! நீங்க எங்க இல்லத்துக்கு வந்த பிறகு தான் புது துணியையே உடுத்திப் பார்க்கிறோம்!... உங்க பாதுகாப்பில்... உங்க அரவணைப்பில்... உங்க குடையின் கீழ் வாழற மக்கள், நாங்க! உங்களை நாங்க சாதாரண மனுஷனா பார்க்கலை! ஒரு பேரரசனாத் தான் பார்க்கிறோம்!...

எனக்கு பாதுகாப்பு தரவேண்டியவர், நீங்க! நீங்களே எனக்கு தொந்தரவு தரலாமா...? வேலியே பயிரை மேய்வது போல! வேண்டாம், அகிலேஷ்! என்னை விட்டுவிடுங்க, அகிலேஷ்!'' என்று அழுகையோடு பேசியவள்... பின் முகத்தை மூடிக் கொண்டு கதறினாள்!

''ஷைனி... ஷைனி... நீ உன் மனசுல இருப்பதை சொல்லிவிட்டாய்! அதுபோல என் மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சிக்கோ! உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு! உன்னைப் பார்த்த நாள் முதல் நானாயில்லை! நான் முதன் முதலா ஆசைப்பட்டது, உன் மேல் தான்!...



மோர்க் குழம்பு செய்யும்போது மிளகாய் வற்றலை வறுத்து அரைத்து சேர்க்கவும். அவ்வாறு செய்தால் குழம்பு வெண்மையாக இருக்கும்.

-கே. பிரபாவதி,
மேலகிருஷ்ணன் புதூர்

உன்னைப் பார்த்த போது மனசெல்லாம் ஒரு கோடி பட்டாம் பூச்சிகள் படபடத்தன! உன்னைப் பார்த்த நொடி புதிதாய் பார்த்தது போல தோணலை! உன்னோடு ஜென்மா ஜென்மமாய் பழகி, வாழ்ந்தாற்போல உணர்வு! நான் சட்டென்று எதன் மீதும் ஆசைப்பட்டதில்லை! ஆசைப்பட்டால் அடையாமல் விடமாட்டேன்!...

உன்னை மணக்க என்கிட்ட என்ன தகுதியில்லைன்னு சொல்? எனக்கு படிப்பில்லையா...? அழகில்லையா...? அந்தஸ்து இல்லையா...? நல்ல குணமில்லையா...? என்ன இல்லை சொல்லு? சரியான காரணம் சொல்லு? நான் ஒதுங்கிடறேன்!''

அகிலேஷ் கார்த்திக் அப்படி கேட்க... அவளால் பதில் சொல்ல முடியாமல் போனது! மௌனமாய் தலைகுனிந்துக் கொண்டாள்!

''ஷைனிம்மா... ஐ லவ் யூடா! எனக்கு நீ வேணும்டா, என் காதலியாக! என் மனைவியாக! என்னைப்புரிந்து கொள், ஷைனிம்மா! உனக்கு டைம் தருகிறேன்! மெதுவாக யோசித்து பதில் சொல்லு!''

இவ்வாறு சொன்ன அகிலேஷ்.. சட்டென்று ஷைனிகாவின் கைப் பற்றி.. அவள் எதிர்பாராத போது புறங்கையில் குனிந்து இதழ் பதிக்க... அவன் கொடுத்த முதல் முத்திரையில் மின்சாரம் தாக்கியது போல அதிர்ந்தாள்!

இல்லத்திற்கு முன் வண்டி நிற்க... தன்னுணர்வே இல்லாமல் இறங்கி தன்னறையை நோக்கி நடந்தாள்! அகிலேஷைத் திரும்பிப் பார்க்க ஒருபுறம் அச்சமாகவும்... மறுபுறம் நாணமாகவும் இருந்தது!

ஈஸ்வரியம்மாளிடம் உடையைக் கொடுத்துவிட்டு

திரும்பிவிட்டான், அகிலேஷ்! பேருக்காய் உண்டு விட்டு... படுக்கையில் போய் விழுந்தான், அகிலேஷ்!

'ஷைனிகா... என்னுயிரே.. என் இதயத்தின் விருப்பத்தை புரிந்து கொள்ள ஏன் மறுக்கிறாய்...?''

நான் இதுவரை எதற்காகவும் இது போல கெஞ்சியதில்லையே!

முதன்முதலாய் என்னுள் மலர்ந்த காதலுக்காக உன்னிடம் யாசித்து நிற்கிறேன்!

இந்தச் செயல் எனக்கே வியப்பை அளிக்கிறது! நானா இப்படி மாறிப் போனேன்? ஒரு பெண்ணின் பின்பு என் கௌரவத்தை விட்டு... கடையில் சீண்டி விளையாடி... நடுரோட்டில் காரில் ஏறச் சொல்லி ரகளை செய்து... கைப் பிடித்து இழுத்து போய் காரில் தள்ளி... காதலைச் சொல்லி... கடவுளே.. இன்னும் நான் என்னென்ன செய்ய வேண்டி இருக்கிறதோ...''

மணி பனிரெண்டானபோது செல்லில் அவள் நம்பரை தட்டினான்! ஈஸ்வரியம்மாளிடம் அவள் நம்பரை பிறந்த நாள் வாழ்த்து சொல்ல வேண்டும் என்று கூறி வாங்கி வந்து விட்டான்! எதிர்முனையில் ஷைனிகா தூக்க கலக்கத்துடன்...

''ஹலோ...யாரு...? '' என்று ஷைனிகா முணகினாள்!

''விஷ் யூ ஹேப்பி பர்த்டே...!''என்ற குரல் காதில் அமிழ்தினும் இனிமையாய் இறங்க..ஆச்சரியமானவள்...

''தேங்க்யூ!தேங்க் யூ வெரிமச்!நீங்க யாரு...?''

''நான் அகிலேஷ் கார்த்திக்டா, ஷைனி!''என்று அவன் உருக.அவளுக்கு தூக்கம் போய் விறைப்பானாள்!

**''பூக்காரியின் மகள்ன்றது சரியாய்த்தான் இருக்கு''**
**''என்னடா சொல்றே?''**
**''அட ஆமாண்டா... தினமும் தண்ணி தெளிச்சு என்னை எழுப்புகிறாள்டா!''**

**-அமுதா அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



''உங்களுக்கு எப்படி?''

''ஈஸ்வரியம்மாள்தான் சொன்னாங்க!இவ்வளவு நேரமும் தூங்கா மல் விழித்திருந்தேன்டா,

உனக்கு வாழ்த்து சொல்வதற்காக!''என்று அகிலேஷ் கொஞ்ச... அவள் உள்ளம் நெகிழ...

''ஷைனி...ஐ லவ்யூடா!'' என்று கிசுகிசுப்பாய் அகிலேஷ் கூற.. அந்தச் சொற்கள் அவள் உயிர்வரை ஊடுருவிச்சென்று கஷ்டப்படுத் தியது!

ஷைனிகாவின் நெஞ்சுக்குள்ளும், கண்ணுக்குள்ளும் அகிலேஷின் உருவமே வந்த நின்று கண்ணாமூச்சி விளையாடியது!

அவன் பேச்சுக்கும்.

மயக்கும் சிரிப்புக்கும்..இந்தப்பாழாய்ப்போன இதயம் அடிமையா கிறதே!

'இதை இதன் போக்குக்கு விடாமல்.. பலமான கயிறு கொண்டு கட்ட வேண்டும்! அம்மாவை ஏமாற்றிய ஆண் இனத்தைச் சார்ந்தவன் தானே, இந்த அகிலேஷ்!

அவள் தந்தை சாதாரண ஏழ்மை குடும்பத்தில் பிறந்து...தனியார் கம்பெனியில் வேலை பார்த்தவராம்!

அப்படிப்பட்ட மனிதரே அவளுடைய தாய்க்கு துரோகம் செய்து விட்டு..இரண்டாவதாய் ஒருத்தியை மணந்து கொண்டார்!

அது நீண்ட நாள் கழித்து தெரிய வந்து.

இரண்டு வருட சிறுகுழந்தையான அவளைக் கையில் பிடித்துக் கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் பெங்களூரு ஓடிப்போய்..பத் தாம் வகுப்பிற்கு மேல் படிக்காதவள்.அங்கே கட்டிடம் கட்டும் கொத்தனார்களுக்கு மணல், ஜல்லி, சிமென்ட், செங்கல் அள்ளிக் கொ டுக்கும் வேலை செய்து ஷைனிகாவைக் காப்பாற்றினாள்! பின் அவ ளின் பத்தாம் வயதில் இறந்துபோக..அங்கு வேலைப்பார்த்த சில தமி ழர்கள் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து ஈஸ்வரியம்மாளின் கருணை இல்லத்தில் சேர்த்துவிட்டு சென்றனர்.

சாதாரணமானவனே, தன் தாயைத் தவிக்க விட்டும், கதறவிட்டும் வேறொரு பெண்ணிடம் தஞ்சமான போது...

இந்த அகிலேஷோ பெரும் பணக்காரன்!

பெரிய படிப்பு படித்தவன்!பெரிய பெரிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி வெற்றிகரமாய் நடத்தி வருபவன்!

இன்று இளமை மோகத்தில் என் அழகில் மயங்கி கட்டிக்கொள்ள ஆசைப்படுகிறான்! நாளையே ஆசை அறுபது நாள்..மோகம் முப்பது நாள் என்று என் அழகும்..என் மேல் கொண்ட மோகமும் அவனுக்கு சலிப்பைக் கொடுக்கலாம்!

இந்த அநாதையை மணந்ததற்கு பதிலாய் நல்ல பெரும் பணக்காரியை கட்டாமல் விட்டு விட்டோமே!பணக்காரி தன் மனைவியாய் அமைந்திருந்தால் பணத்தோடு பணம் சேர்ந்திருக்குமே என்று நினைக்கலாம்!

என்னைப் பெற்றவன் என் தாயை ஏமாற்றி விட்டது போல இந்த அகிலேஷும் என்னை கைவிடலாம்! எதற்கு வீண் வம்பு?

நெருப்பு சுடும் என்று தெரிந்தே எரியும் அந்த நெருப்பு கட்டையை எடுத்து தலையை

சொரிந்து கொள்ளலாமா? நாகம் கொத்தும் என்று தெரிந்தே.அதன் அருகில் போகலாமா?

புயல் நம்மை சுருட்டி ஆழ்கடலுக்குள் மூழ்கடித்துவிடும் என்று தெரிந்தே. புயல் வரும் திசைக்கு போகலாமா...? இன்று பூக்குழியாய் தெரிவது நாளை புதைகுழியாய்

மாறலாம்! விடிய விடிய இப்படியெல்லாம் சிந்தித்தவாறே படுத்திருந்தவளுக்கு. .அடுத்து வந்த நாட்களில் நடந்தது என்ன?

''நாட்டுக்காகப் பாடுபட்டு நாட்டுக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தர வேண்டும்''

''ஏன்- இந்தியா ன்ற பெயரே நல்லாத்தானே இருக்கு?''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



# 9

அடுத்தஇரண்டு நாள் கழித்து. ஒரு மாலை வேளையில் அகிலேஷ் இல்லத்திற்கு வந்தான்.

அவனை வரவேற்று அமர்த்திய ஈஸ்வரியம்மாள். அவனின் களைத்து போன தோற்றத்தைக்கண்டு...

''ஆபீஸிலிருந்து நேரா வரீயாப்பா...?

''ஆமாம், ஆன்ட்டி!ரொம்ப களைப்பா இருக்கு!அன்று போல ஷைனிகா கையால் போட்ட டீயும், கொஞ்சம் பிஸ்கெட்டும் கொடுத்தால் நல்லாயிருக்கும்!

அகிலேஷ் கார்த்திக் அப்படி சொல்ல...

உடனே ஷைனிகாவை போனில் அழைத்து கட்டளையிட்டாள்!

கொஞ்ச நேரத்தில் அவன் இதயம் கவர்ந்த தேவதை டீயும், பிஸ்கெட்டும் கொண்டு வந்தாள்!அகிலேஷ் டீயில் பிஸ்கெட்டை நனைத்து உண்டான்!

பின்னர்..

''இல்லத்தைப் பார்க்க ஆசைப்படறேன்!என்னோடு வருகிறாயா, ஷைனிகா!''

அவன் அவ்வாறு சொல்ல...

''போம்மா...போயி சுற்றிக்காட்டு!''என்று ஈஸ்வரி சொல்ல மறுக்க முடியாமல் எரிச்சலோடு நடந்தாள்!

கொஞ்ச நேரம் சென்றதும் நின்று அகிலேஷை பார்க்க. அவள் பார்வை கத்தியின் கூர்மையுடன்...அவன்மேல் பாய்ந்தது!

''இப்படி முறைச்சி முறைச்சி பார்த்துதான் இந்த கம்பீரமான ஆறடிக்கும் மேலான மனிதனை பொட்டென்று தரைத்தட்டி விழச்செய்தாய்? இன்னும் மேலே என்ன செய்ய அப்படி பார்க்கறே, ஷைனி?'' என்று அகிலேஷ் கார்த்திக் கொஞ்சவும்...

''உங்களுடைய கொஞ்சலும், குலாவலும் என்னுள் தீயை மூட்டுது! கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு வரீங்களா...?'' என்று கடித்த பற்களுடே எரிந்துவிழுந்தாள்!

எதிர்படும் மக்கள் அவனை வணங்கினர்!

இல்லத்தை சுற்றிப்பார்த்து விட்டு குழந்தைகள் விளையாட்டு மைதானத்தில் நின்ற போது கேட்டான்!

''இங்கிருப்பவர்களின் பொழுதுபோக்கு என்ன?''

''வேலை செய்வார்கள்!பின் டி.வி. பார்ப்பார்கள்! அவ்வளவு தான்!''

''இங்கிருக்கும் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் நாட்டு நடப்பை தெரிந்து கொள்ளவும்..பொது அறிவை பெருக்கிக் கொள்ளவும் பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கவும்.ஒரு நூலகம் இருந்தால் நன்றாக இருக்கும்!இல்லையா, ஷைனிகா...?

அவன் அப்படி கூற. சட்டென்று அவனை நெகிழ்ச்சியுடன் பார்த்தாள்!

இங்கு வந்த கொஞ்ச நாளில் அவளுக்கு கூட இந்த எண்ணம் உதித்ததுதான்!ஆனால், அதனைச் செயல்படுத்த நிறைய செலவாகும் என்பதால் தன்னுள்ளே போட்டு புதைத்துக்கொண்டாள்!

''பென்டாஸ்டிக் ஐடியா! ஆனால், நிறைய செலவாகுமே!''என்றவளின் முகம் அந்தி நேரத்தாமரையாய் வாடிப்போனது!

''உனக்கேன் கவலை!நூலகத்தை அமைத்துத்தர வேண்டியது என் ''பொறுப்பு!குழந்தைகளுக்கான புத்தகம்..உங்களைப்போல இளம் வயதுக்காரர்களுக்காக தமிழ், ஆங்கில கவிதை, நாவல் புத்தகங்கள்..பெரியவர்களுக்காக இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும்..கல்கி,சாண்டில்யன், விக்ரமன், பாலகுமாரன் போன்றோர் எழுதிய வரலாற்று நாவல்களையும் வாங்கி அடுக்கி விடலாம்! சரியா?''

***''டாக்டர்... வயிற்று வலி... என்னால் 'பொறுக்க' முடியலை டாக்டர்''***
***''வயிறு வலிக்கும் போது உன்னை யாருய்யா 'பொறுக்க'ச் சொன்னது.***
**-அமுதா அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



அகிலேஷ் புன்னகையுடன் கூறவும்

''ஈஸ்வரியம்மாளிடம் சொன்னால் மகிழ்ந்து போவார்கள்,அகிலேஷ் சார்!''

''உனக்கு சந்தோசமில்லையா,ஷைனி...?''

அவன் புருவம் உயர்த்தி...அவள்மேல் ஆழ்ந்த பார்வை ஒன்றை பதித்து கேட்க.. பார்வையின் வீரியத்தை தாங்க முடியாமல் தலைகுனிந்து பதில் சொன்னாள்!

''சந்தோசம்தான்!''பின் அவனை நிமிர்ந்து பார்த்து,

''எனக்கு பிடிச்ச ஆங்கில நாவல்கள் சிலதையும் நீங்க மறுக்காமல் வாங்கித்தரணும்!''

''உனக்காக என் இதயத்தை தர காத்திருக்கும் போது.ஆங்கில நாவல்களையா நான் வாங்கித்தர மாட்டேன்?...ம்?'' என்று அவன் காதலுடன் சொல்ல...

''பழைய படி வேதாளம் முருங்கை மரம் ஏறுது பார்த்தீங்களா...? இவ்வளவு நேரமும் எவ்வளவு நல்லவராய் பேசினீர்கள்!''

''என் உள்ளத்தை நீ எப்போது புரிந்துகொள்வாய், ஷைனிம்மா...? என்கிட்ட என்ன குறைன்னாவது சொல்லேன்,ஷைனி?''

''.......''

''முடியாதில்லையா...?''

''........''

''நீ உன் சம்மதத்தையும் சொன்னால்.. உடனே என் பெற்றோரிடம் கூறி...முறைப்படி பெண் கேட்டு வருவேன்!''

''எனக்கு உங்கமேல் எந்த ஈடுபாடும் வரவில்லை! உங்க அந்தஸ்து, அழகு, கம்பீரத்துக்கு ஏற்ற பெண்ணைப்பார்த்து மணந்துக்கங்க, அகிலேஷ்! பிடிக்கவில்லைன்னு சொல்பவளை திரும்ப, திரும்ப வற்புறுத்தாதீங்க!''

''என்னைப் பிடிக்கவில்லையா...?''

''உங்களைப் பிடிக்கவில்லையென்பவள் ஒண்ணு குருடாய் இருக்கணும்!இல்லேன்னா மனநிலைப்பாதிக்கப்பட்டவளாய் இருப்பாள்!

எனக்கு திருமணத்தை தான் பிடிக்கவில்லை என்கிறேன்!புரிஞ்சிக்கங்க, அகிலேஷ்!''

''மாமியார் மருமகள் சண்டையில் என் வீடே ரெண்டாயிடுச்சு''

''நல்லதாப் போச்சு... ரெண்டு வீட்டிலும் ரெண்டு பேரையும் தனித்தனியே குடி வெச்சிடு!''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



வேகமாய் பேசியவள்.சட்டென்று எழுந்த ஆற்றாமையின் காரணமாய் கண்ணீர் சிந்தினாள்!

''நீ அழ வேண்டாம்!உன் மனம் மாறும் வரை காத்திருக்கிறேன்!''

''இல்லை என் மனம் மாறாது!''

''மாறும்!''

''ம்கூம் என்றும் என்பதில் இதுதான்!''

அப்படி அவள் சொல்ல...அகிலேஷ் கார்த்திக்கின் முகம் களையிழந்து போனது!

அதைக்காண அவளுக்குமே கஷ்டமாய் போய்விட்டது!

அதன்பிறகு வந்த நாள் ஒன்றில் மனோகர் பில்டர்ஸிடமிருந்து அவளுக்கு இன்டர்வியூ கார்டு வர...அங்கே சென்றாள்!

மொத்தம் இருபதுபேர் நேர்முகத்தேர்விற்கு வந்திருந்தனர்.பத்தாவது ஆளாய் அழைக்கப்பட்டாள்!கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் சரியான பதிலை படபடவென சொல்ல..அவளை எம்.டிக்கு பிடித்து போனது!

''கொஞ்ச நேரம் இருங்க! மீதி பேரை பேருக்கு இன்டர்வியூ செய்து அனுப்பி விட்டு...உங்களுக்கு அப்பாய்ன்மென்ட் ஆர்டரை வழங்குகிறோம்!வெயிட் பண்ணுங்க''

அச்சொற்களைக் கேட்டு. தன்மேல் பூ மாரி பொழிந்தது போல மலர்ந்தாள்!

கொஞ்ச நேரத்தில் ஆர்டரை டைப் செய்துவிட்டு அழைக்க உள்ளே போனாள்! மனோகர் கையெழுத்திட போனபோது..

அகிலேஷ் கார்த்திக்கிடமிருந்து



பொங்கல் செய்யும் போது தண்ணீருடன் நெய் அல்லது டால்டா சேர்த்தால் பொங்கல் பாத்திரத்தில் ஒட்டாது.

-கே. பிரபாவதி,
மேலகிருஷ்ணன் புதூர்

போன்வர...

''ஓ.கே...ஓ.கே...''என்றவர், அவளைப்பார்த்து ''ஸாரிம்மா!'' என்ற ஒற்றைச் சொல்லோடு அனுப்பிவிட்டார்!

''ஏன்?எதற்கு?'' என்று கேட்காமலேயே ஷைனிகா வேதனை யோடு திரும்பி விட்டாள்!

அடுத்த இன்டர்வியூவிக்கு போய் வேலையும் கிடைத்து விட்டது! வெற்றிகரமாய் நான்கு நாட்கள் கடுமையாய் உழைத்து நல்ல பெயரும் வாங்கினாள்!

வேலை விஷயமாய் வெளிநாடு சென்றிருந்த அகிலேஷ் கார்த்திக் திரும்பியவுடன் விஷயம் தெரிய... அங்கு போன் செய்ய...அன்று மதியமே அவளுக்கு வேலை போனது!

இதே போல போகுமிடமெல்லாம் தோல்வியையே சந்தித்தான்! கடைசியில் ஏமாற்றத்தையே சந்தித்து கண்ணீருடன் திரும்பினாள்!

அன்று அந்த தனியார் பள்ளிக்கு சென்றாள்,கம்ப்யூட்டர் ஆசிரியை வேலைக்கு!

ஆர்டர் அடிக்கும் சமயம் எப்போதும் போல அகிலேஷின் போன் வர...மீண்டும் தோல்வி!

''எனக்கு ஒரு உண்மையை மட்டும் சொல்லுங்கள்! போனில் யார் சார்?பிளீஸ் சார்...இது பெரிய தொடர்கதையாகவே நடக்குது! தாங்க வில்லை,சார்!''என்று கண்ணீரோடு கேட்கவும்...

பள்ளியின் தாளாளர் சொல்லிவிட்டார்!

''அகிலேஷ் கார்த்திக் சார்தாம்மா! அவர் உங்களை மணக்கப் போறாராமே! உங்களுக்கு எதுக்கும்மா வேலை?நூறு பள்ளிகளை

அவர் நினைத்தால் நிறுவலாம்!உங்க தொழில் நிறுவனங்களில் பல லட்சம் பேர் பணிபுரியும்போது...நீங்க போய் பள்ளி வேலைக்கு வருவதா...? போங்கம்மா! இதெல்லாம் அகிலேஷ் சாருக்கு அவமானமில்லையா...?''

என்றதும் மிதமிஞ்சிய குரோதத்தோடு வெளியேறினாள், ஷைனிகா!

நேரே அகிலேஷ் மெயின் ஆபீஸிற்கு சென்று பியூனிடம் அனுமதி கேட்க... அவன் மறுக்க...

''போய்யா...போய் ஷைனிகா வந்திருக்காங்கன்னு சொல்லு! உடனே அவர் என்னை வரச்சொல்லுவார்!'' என்று கத்த.உள்ளே ஓடிய பியூன் சுவரில் அடித்த பந்தாய் திரும்பி...

''ஸாரிம்மா...'' என்று கூற...

ஷைனிகா கதவை தள்ளிய வேகத்திலேயே அவளின் கோபம் அகிலேஷ் கார்த்திக்குக்கு தெரிந்தது!

''வா,ஷைனி!உட்காரும்மா!'' என்று புன்னகையுடன் சொல்ல...

''நான் போகிற இடமெல்லாம் தோல்வியைத் தழுவ நீங்கதான் காரணமா...? உங்களுக்கு...உங்களுக்கு நான் போற இடம் எப்படி தெரியும்?யார் சொல்லுவது?சொல்லுங்க, அகிலேஷ்?''என்று கத்தினாள்!

''ஈஸ்வரியம்மாள்தான்!''

''அவங்களா...?நிஜமாகவா..?''

''ஒருநாள் அவங்ககிட்ட உன்மேலான என் விருப்பத்தைச் சொன்னேன்! ரொம்ப சந்தோசப்பட்டாங்க! சின்னப்பெண்! பெற்றோர் இல்லாமல் அநாதையாக வளர்ந்தவள்! ஷைனிகா ரொம்ப மென்மையான

**சூதாட்டக் கிளப்பில் ரம்மி ஆடினதுக்காகவா கைது பண்ணினீங்க?''**
**'ரம்மி'ன்ற பொண்ணு கவர்ச்சியா ஆடினதால் கைது பண்ணினேன் ரம்மி'யை!''**
**-எம்.அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



மனசுக்காரி! பார்த்து நடத்துங்க! அவளும் கூடிய சீக்கிரம் உங்களை விரும்புவாள்ன்னு எனக்கு அட்வைஸூம் செய்தாங்க!

நீ வேலைக்கு அலைவதுமிடத்தைச் சொல்ல...''

ஷைனிகா இடைப்புகுந்தாள்!

''நீங்க எனக்கு வேலை கிடைக்காமல் செய்து விடுவீங்க! அதுதானே நடக்குது...?''

அகிலேஷ் கார்த்திக் தலைகுனிந்தான்!

''உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்...? அந்தப்பள்ளி தாளாளரிடம் என்னை கட்டிக்கப் போறதா சொல்லி வெச்சிருக்கீங்களே! உங்களை நான் எவ்வளவு நல்லவர்னு நினைச்சேன்! இப்படி ஒரு கீழ்த்தரமான வேலையில் ஈடுபடுவீங்கன்னு நான் கனவுல கூட நினைச்சதில்லை...!

இங்க பாருங்க, அகிலேஷ்! இந்த திருமணம், குடும்பம், கணவன்ங்கிற பந்தமெல்லாம் எனக்கு பிடிக்கவில்லை!''

''என்ன காரணம்னு சொல்லலாம் இல்லையா...?''

''அடுத்ததா, உங்க அணுகுமுறை பிடிக்கவில்லை! என் விருப்பு, வெறுப்புக்கு மதிப்பு தராத உங்களை எனக்கு சுத்தமா பிடிக்கவில்லை! இனிமேல், நான் இருக்கும் திசைப்பக்கம் கூட திரும்பிடாதீங்க! நான் உங்களை மணந்துக்க மாட்டேன்! நீங்க மீண்டும் தொல்லைக் கொடுத்தால்.. சென்னையில் எதாவது வேலையைப்பார்த்துக் கொண்டு சென்றுவிடுவேன்! அநியாயத்துக்கு ஒரு அநாதைப் பெண்ணை விரட்டியடிச்ச பாவம் உங்களுக்கு வேண்டாம்! சரியா..?''

சொன்ன ஷைனிகா விறுவிறுவென்று அங்கிருந்து வந்துவிட்டாள்! அவளின் பேச்சால்,...

அகிலேஷ் கார்த்திக் சுயநினைவு அற்று மரமாய் நின்றான்!

மெல்லமெல்ல அவள் மனது கட்டுக்கடங்காமல்.. அவன் பக்கம் போனதை அவளால் அடக்க முடியாமல் தான் திண்டாடினாள்!

அவனைக் கண்டதும் நேசம் பொங்கும் மனதிற்கு கடிவாளமிட முடியாது ஷைனிகா திணறினாள் தான்!

அவன் நினைவுகளையே ஆசையோடு சுமக்கும் நெஞ்சத்தை ஒன்றும் செய்ய முடியாமல் ஷைனிகா தவித்தாள் தான்!

ஆனால், அவளின் இத்தனை அலைச்சலுக்கும், அவமானத்திற்கும் காரணம் அகிலேஷ் என்று தெரிந்த நொடி அவன் மேல் பயங்கர வெறுப்பு வந்தது!

அவனின் இந்த கீழ்த்தரமான செயலை சகித்துக் கொள்ள முடிய வில்லை!

அவன் மேல் மூண்ட... அந்த பயங்கர வெறுப்பைக் கொண்டே அவனுள் பூத்த தீராத, தீவிர காதலை அறுத்தெறிய கங்கணம் கட்டிக் கொண்டாள்!

அகிலேஷை நினைக்காமலும்.. நேசிக்காமலும் ஷைனிகாவால் இருக்க முடியுமா...?

# 10

அகிலேஷ் கார்த்திக் சோர்ந்து போனான்! அவனின் சுறுசுறுப்பான இயக்கம் நின்று போனது! ஆபீஸில் உட்கார்ந்து விட்டத்தை வெறித்தான்! வீட்டில் எவரிடமும் முகம் கொடுத்து பேசுவதில்லை!

அவனால் உண்ண முடியவில்லை!

உறங்க முடியவில்லை!

தனிமையை விரும்பினான்!

அவனின் வாடிய முகத்தில் தாய், தகப்பனின் பார்வை ஆழமாய் பதிய... அவர்கள் ஏதாவது கேள்வி கேட்டு புதிதாய் திறந்து உள்ள நிறு

"லஞ்சம் வாங்கினதுக்காக கைது பண்ணினாங்க"

"அப்புறம் எப்படி வெளியில் வந்தே?"

"அதில் பாதியைத் தந்துதான்!"

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



வனத்தில் மேற்பார்வை பணியை மேற்கொள்ள சென்றான்!

அங்கேயும் வேலையில் மனம் செல்லாமல் ஹோட்டலின் அறைக் குள் முடங்கி கிடந்தான்!

நாள் முழுக்க பாக்கெட் பாக்கெட்டாய் சிகரெட்டை ஊதித்தள்ளி னான்!

கண்ணுக்குள்ளும். நெஞ்சுக்குள்ளும் நின்று பேரிம்சையைத் தந்த ஷைனிகாவை மறக்க.. பார்ட்டி, விழாக்களில் மட்டுமே மதுவை அருந்திய அகிலேஷ்... இரவானால் மனக்கஷ்டத்தை மறந்து உறங்க மதுவை அருந்தினான்!

ஷைனிகாவும், அவனை அப்படி பேசியதிலிருந்து யாரிடமும் முகம் கொடுத்து பேசவில்லை! உண்ணவில்லை! குழந்தைகளோடான மாலை நேர விளையாட்டு எதுவும் இல்லாமல் உற்சாகத்தை தொ லைத்து.. களையிழந்த முகத்துடன் இருந்ததைக் கண்டார் ஈஸ்வரி.

இந்த நான்கைந்து நாட்களும் அகிலேஷ் இல்லத்திற்கு வராமல் போக... ஈஸ்வரியம்மா

''ஷைனிம்மா.. என்னடா டல்லா இருக்கே?'' என்று கேட்க,..

''அதெல்லாம் இல்லைம்மா! நான் நல்லாதான் இருக்கிறேன்!'' என்று மழுப்பவிட்டு முகம் சோர்ந்து சென்றாள் ஷைனிகா.

ஈஸ்வரி, அகிலேஷ் கார்த்திக்கு போன் செய்தார்!

''அகிலேஷ்... ஏம்ப்பா ஐந்து நாளா இல்லத்துப் பக்கமே வரலை?''

''பயங்கர வேலை ஆன்ட்டி!''

''எவ்வளவு வேலையிருந்தாலும் மாலை வருவீங்களே!''

''பெங்களூர்ல இருக்கேன், ஆன்ட்டி!''

''நிஜம்தானா...?''

''எதுக்கு ஆன்ட்டி பொய் சொல்லணும்?''

''உங்களுக்கும், ஷைனிக்கும் ஏதாவது சண்டையா, அகிலேஷ்!

இல்லையே, ஆன்ட்டி!''

''ஷைனிகாவின் முகமே சரியில்லை! அதனால் கேட்டேன்! சேலம் வந்ததும் இல்லத்துக்கு வாங்க!'' என்று அழைப்பு விடுத்துவிட்டு

போனை கட் செய்தார், ஈஸ்வரி.

ஊருக்கு போனால்... ஷைனிகாவின் இருப்பிடம் தேடி அவன் கால்கள் போகும்!

நெஞ்சம் அவளைப் பார்க்க கெஞ்சும்!

கண்கள் அவளின் வரமான தரிசனத்திற்கு ஏங்கும்!

ஆனால், அவனின் மனம் இனியும் என்னால் அந்த அரக்கியிடம் அவமானப்பட முடியாது என்று தடைபோடும்!

சேலத்திற்கு போகவில்லையென்றால் அவனுடைய வர்த்தகம் சரிந்து விழும்! அதன் பிறகு அவனின் போட்டியாளர்கள் அவனைக் கீழே தள்ளி மேலே வந்துவிடுவார்கள்!

அதை அவன் ஒருநாளும் விரும்பவில்லை!

சேலம் போன பிறகு கருணையில்லத்துக்கு சென்றாலும்... அவளை.. அந்த கல் நெஞ்சக்காரியை பார்க்கக்கூடாது!

ஒரு ஆணின் மனதைப் புரிந்து கொள்ளாமல் புதைக் குழிக்குள் தள்ளி வேடிக்கைப் பார்க்கும் அவளை எதற்கு பார்க்க வேண்டும்...?

எங்கும், எதிலும் வெற்றியையே கண்ட எனக்கு தோல்வியை தந்தவளை எதற்கு சந்திக்க வேண்டும்...?

என் மனதை விளக்கியும்.. அதில் பூத்த ஆழமான காதலைப் புரிந்து கொள்ளாமல்.. ராட்சசியாய் என் மனதைக் குத்தி கீறி ரணமாக்கியவளை பார்க்கக்கூடாது! பேசக்கூடாது!அகிலேஷ் வைராக்யம் கொண்டான்!

அடுத்த நாளே சேலத்திற்கு சென்றான்!

ஆபீஸ் வேலை முடித்து மாலையே இல்லத்

**"உங்க பையன் காதலிக்கிற பொண்ணை கல்யாணம் பண்ணிக்குவானா!"**

**"அவன் எத்தனை பேரை தான் பண்ணுவான்... பாவமில்லையா.."**

**-அ.இரவீந்திரன், குஞ்சன்விளை.**



திற்கு சென்றான்.

''வாப்பா! டீ கொண்டு வரச்சொல்லவா...?''

''அதெல்லாம் வேண்டாம், ஆன்ட்டி! டீ உடம்புக்கு கெடுதி என்று உணர்ந்து.. அதை நான் மறந்துவிட்டேன்!'' என்று மறைமுகமாய் சொல்ல.. ஈஸ்வரிக்கு அது புரியாமல் போனது!

''ஷைனிகாவை வரச் சொல்லவா!''

''அவள் வேலையைக் கெடுக்க வேண்டாம்! நான் உங்களைத் தான் பார்க்க வந்தேன்! நூலகம் பற்றி சொன்னேன் இல்லையா..?''

''ஆமாம்!''

கார்த்திக் புத்தக நிலையத்தில் ஏகப்பட்ட புது புத்தகங்கள் வந்திருக்கிறதாம்! நாளை ஞாயிறு இல்லையா..? நான் பிரீயா இருக்கேன்! நீங்களோ அல்லதுவேற யாரையாவது அனுப்ப முடியுமா..?

''ஷைனிகாவையும், ரஞ்சனியையும் அனுப்பறேன்!''

''ரஞ்சனி மட்டும் போதுமே, ஆன்ட்டி!''

''அகிலேஷ் உங்களுக்கும், ஷைனிக்கும் எதாவது பிரச்சனையா...?

அதெல்லாம் இல்லை ஆன்ட்டி! ஷைனியை விட ரஞ்சனி வயதிலும், அனுபவத்திலும் பெரியவள், நல்ல பயனுள்ள புத்தகங்களை தேர்ந்தெடுப்பதில் தடுமாற்றம் இருக்காது! அதனால் தான் சொன்னேன்!''

அகிலேஷ் இப்படி கூற... ஈஸ்வரி சமாதானமாக... ஷைனிகாவை வைராக்கியத்துடன் பார்க்காமலேயே பங்களாவிற்கு வந்தான்!

கொஞ்சமாய் உண்டுவிட்டு வந்து படுக்கையில் விழுந்தான்! பின்னாடியே பத்மாவதி வந்தாள்!

எதையோ பறி கொடுத்தாற் போல படுத்திருந்த மகனைக் காண நெஞ்சம் பதறியது! அவன் அருகில் அமர்ந்தார்!

''என்னப்பா..உடம்பு சரியில்லையா..?'' முகமெல்லாம் வாடி வதங்கி இருக்கே!

''அதெல்லாம் இல்லம்மா!''

''பிசினஸ் எதாவது டல்லடிக்குதா?''

''மன்னர் சரியான கிரிக்கெட் பைத்தியம்''

''அதற்காக எதிரி மன்னரிடம் போரை டிரா செய்து கொள்ளலாமா என்று கேட்பதா?''

-எம்.ஏ.நிவேதா,
அரவக்குறிச்சிப்பட்டி.



''ம்கூம்!''

''நீ இப்படி சோர்ந்து பார்த்ததில்லையே!''

''அம்மா... உன் மடியில் நான் கொஞ்ச நேரம் தலைவெச்சி படுத்துக்கட்டுமா..?''

''அகிலேஷ்... என்ன வார்த்தை கேட்டுட்டே? வாப்பா! வந்து படுத்துக்கோ!''

அகிலேஷ் தலையை தூக்கி பத்மாவதியின் மடியில் வைத்துக் கொண்டான்!

''அம்மா... முடியை கோதி... முகத்தை நீவி விட்டு.. முதுகுல இதமா தட்டி விடும்மா நான் நிம்மதியா தூங்கி நாளாச்சும்மா! என்னை தூங்க வையும்மா! பிளீஸ்!'' என்று அகிலேஷ் சொல்ல...

''அகில்! என் தங்கமே!'' என்று பத்மாவதி மகனை இழுத்து மார்போடு தழுவிக் கொண்டாள்!

''உன் நிம்மதி இழக்க என்ன காரணம், அகிலேஷ்?''

''பிளீஸ்ம்மா.. என்னை எதுவும் கேட்காதீங்கம்மா! ஆனால், நான் நிம்மதியாகவே இல்லை!''

அகிலேஷ் கெஞ்ச.. பத்மாவதி அதன் பிறகு எதுவும் பேசவில்லை!

ஆர்த்தி வந்து கேட்டால்தான் அகிலேஷ் காரணத்தை சொல்வான் என்று பத்மாவதிக்கு தெரியும்!

அகிலேஷின் முடியை கோதி.. முதுகில் இதமாய்தட்ட.. கொஞ்ச நேரத்தில் நிம்மதியாய் உறங்கினான்!

இந்த நிம்மதி அகிலேஷுக்கு நிலைக்குமா...?

நீடிக்குமா...?

# 11

அடுத்த நாள் காலை குளித்து வெள்ளையு டைஉடுத்தி வந்த மகனைக் கண்ட கார்த்திகே யன்....

''ஞாயிறும் அதுவுமா எங்கே கிளம்பவிட்டாய் அகிலேஷ்? இன்னும் கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுத்துக்க மாட் டாயா..? ஆபீஸா போகிறாய்..?''

''இல்லைப்பா! இல்லத்து லைப்ரரிக்காக புத்தகம் வாங்கப்போே றன்!''

''உன் பி.ஏ. ஆனந்தனிடம் இந்த வேலையை கொடுத்திருக்க கூடா தா?''

''அவன் பிள்ளைக் குட்டிகாரன்பா! அவன் குடும்பத்தோடு சந்தோ சமாக இருக்கட்டும்!''

அவன் உன்னோடு தான் படிச்சவன்! அவன் காலா காலத்தில் திருமணம் செய்து மனைவி, ஒரு வயசுல குழந்தைன்னு இருக்கான்! அதைப் பார்க்க கண்ணுக்கு குளிர்ச்சியா இருக்கு! ஆனால், நீ இப்படி தனியே இருப்பதைப் பார்க்க கஷ்டமா இருக்கு, அகிலேஷ்!''

ஷைனிகாவை நினைத்த மனசால் இன்னொருத்தியை நினைத்து பார்க்க முடியாது! அப்படி இருக்க, இனி அவன் தனி மரமாய் தான் வாழப்போகிறான் என்று தெரிந்தால் தாங்குவார்களா...?

நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது!

வயதான பெற்றோரை எப்படி சமாளிப்பது?

திருமணம் பற்றி வற்புறுத்தும் அக்காவின் மனதை எப்படி மாற்று வது?

கலங்கினான்! பெரும்பாறாங்கல் விழுந்த குளமாய்!

இல்லத்தில் ரஞ்சனிக்கு பதில் ஷைனிகா நின்றிருந்தாள்!

யாரைப் பார்க்க கூடாது என்று மனதை இரும்பாக்கிக்கொண்டு

இருந்தானோ... அவளையே விழி விரியப் பார்க்கும்படியானது அவ
னின் அதிர்ஷ்டமா..? அல்லது அவனின் துரதிர்ஷ்டமா..?

''ரஞ்சனிக்கு உடம்பு சரியில்லைப்பா, அகிலேஷ் ! அதனால், ஷைனிகா உன்னோடு வருவாள்'' என்று ஈஸ்வரி சொன்னார்.

இளம் ஆகாய நிறத்தில் அற்புதமான காட்டன் புடவையை நேர்த்தியாய் உடுத்திக்கொண்டு... அழகே உருவாய்.. வண்ணம் கொண்ட வான் நிலவாய் நின்று கொண்டிருந்த ஷைனிகாவையே விழியெடுக்காது நோக்கிக்கொண்டிருந்தான்!

ஏய் முட்டாள் கண்களே.. அவளைப் பார்க்காதே!

ஏய் மட மனமே அவளிடம் மயங்காதே!

ஏய் அறிவு கெட்ட இதயமே அவளிடம் நெகிழாதே!

எவ்வளவு திட்டியும், அறிவுறுத்தியும் அவன் கண்களும், இதயமும், மனமும் அவனுக்கு எதிராய் சதி செய்தன.

அவனுடைய மானத்தை வாங்கின!

''நான் கிளம்பறேன், ஆன்ட்டி!'' என்று அகிலேஷ் நடக்க... அவன் பின்னே வந்து காரில் ஏறினாள்!

கார் விரைந்தது!

அவன் பேசவில்லை!

அவளும் பேசவில்லை!

அவன் பேசுவான் என்று அவள் எதிர்பார்த்தாள்!

அவள் பேசுவாள் என்று அவன் எதிர்பார்த்தான்!

ம்கூம்! அங்கே மவுனமே பெரிய சுவரை எழுப்பி கம்பீரமாக வீற்றிருந்தது!

**''தலைவரே எதுக்கு
வெளிமாநிலத்துல தேர்தல்ல
நிக்கறீங்க?''
''நம்மாநிலத்துலதான் யாரும்
எனக்கு ஓட்டு போடமாட்டாங்களே''**

**-ஏ.மூர்த்தி,
திருவள்ளூர்.**



அவள் பார்க்காத சமயம்... அவன் பார்வை அவளை ஆழமாய் தீண்டியது!

அவன் பார்க்காத சமயம் அவளின் ஓர விழிப்பார்வை அவனை உரசியது! இதுவே தொடர ஒரு கட்டத்தில் இருவர் பார்வைகளும் ஒரே நேர் கோட்டில் சந்திக்கும் போது... பிரிவுத்துயரைத் தாங்காது, இருவர் விழிகளும் காதலோடு கட்டி, கொஞ்சி பின்னி பிணைந்து முத்தமிட்டுக்கொள்ள...

இதை நீண்ட நேரம் நீடிக்க விடாமல் அவர்கள் உள்ளிருந்த ஈகோ பொங்கி பெருகி அவர்களின் பார்வைக்கு தடை போட...

இருவரும் கடுப்பான முகத்துடன் சட்டென்று திரும்பிக்கொண்டனர்.

உனக்கு அவ்வளவு திமிராடி? நீ முதல்ல பேசேன்டி! அகிலேஷ் கண்களால் முறைத்தான்.

உனக்கு அவ்வளவு கொழுப்பாடா...? நீ தானே சும்மா இருந்த நெஞ்சை காதலைச்சொல்லி கலங்க வைத்தாய்! இத்தனை நாளாய் என்னை தவிக்க விட்டு விட்டு நீ பிரிந்த பின்தானே என் நெஞ்சுக்குள் வேரூன்றிப்போன காதலின் வீரியத்தை உணர்ந்தேன்! உன்னைப்பார்க்காமல் தவித்தேன்!

காதலின் வலியை உணர வைத்து... அதற்கு மருந்திட மறுக்கும் அரக்கனா நீ?

நான் பெண்! வெட்கத்தை விட்டு என்னால் காதலைச் சொல்ல முடியாது!

சொல்லாத காதல் பெரும் துன்பத்தில் முடியும்!

அது உனக்கு தெரியாதா?

நம் காதலுக்கு பெரும் உயிர்ப்பும்... துடிப்பும் இருந்தால் அதுவே மீண்டும் பூக்கும்! காய்க்கும்! கனியும்!

கார்த்திக் புத்தக நிலையத்தினுள் ஓடி ஓடி புத்தகத்தை தேர்ந்தெடுத்தாள்! அவளுடைய பேவரேட் ஆங்கில நாவல்களையும் தேர்ந்தெடுத்து குவித்தாள்!

மலைபோல குவிந்த புத்தகங்களுக்கு செக்கை எழுதி நீட்டியவன்... கருணை இல்லத்திற்கு அனுப்பி வைக்கச் சொல்லி விட்டான்!

மீண்டும் கார் பயணம்! மணி 2.

ஷைனிகாவிற்கு நல்ல பசி! காலையிலேயே சாப்பிடவில்லை! பசியில் கண்களைக்கூட இருட்டிக்கொண்டு வந்தது!

வயிற்றைப்பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தவளை ஓர் கூரிய பார்வையுடன் நோக்கியவன் அருகிலிருந்த ஹோட்டலின் முன்பு காரை நிறுத்தினான்!

அவனுக்கு உள்ளே பெரும் வரவேற்பு இருந்தது!

''அகிலேஷ் சார், இவங்க..?'' என்று கடை முதலாளி கேட்க...''தூரத்து சொந்தம்!'' என்றவனை விழிவிரித்து நோக்கினாள்!

''அக்கா பொண்ணு முறையாகணும்!'' என்று அகிலேஷ் மீண்டும் சொல்ல சட்டென்று ஷைனிகா நெக்குறுகிப்போனாள்!

அவள் கண்களில் புதுவித ஒளி மின்னியதை அவனும் கவனிக்காமல் இல்லை!

தங்கள் முன்பு பரப்பிய உணவினை இருவரும் உண்டனர்!

தக்க சமயத்தில் அவள் பசியைப்போக்கியவனை நேருக்கு நேராய்ப் பார்த்து நன்றி சொல்ல தோன்றியது!

தனது ஈகோவை விட்டு விட்டு அவனைப்பார்த்து..

''தேங்க்ஸ்!'' என்றாள்.

''எதுக்கு தேங்க்ஸ்'' என்று அவன் சினத்துடன் கேட்க...

''அவ்வளவு புத்தகங்களை இல்லத்திற்காக வாங்கிக்குவித்ததற்கும்.. அடுத்ததா, எனக்கு ரொம்ப பசி! பசியறிந்து அதைப்போக்கியதற்கும்!''

''நீ தேங்க்ஸ் சொல்லுவேன்னு எதிர்பார்த்து நான் இதைச் செய்யவில்லை! உன் தாங்க்ஸை கொண்டு போய்

**''பெண்புத்தி பின்புத்தி''**
**''என்னடா சொல்ற?''**
**''ஆமாண்டா! வேலைக்காரி வீட்டுக்கு வேலைக்கு வச்ச பிறகுதான் இப்ப என் மனைவி என்ன அடுப்படி பக்கம் விடுறது இல்ல!''**

**-கச்சனம் இராதாகிருஷ்ணன்,**
**மதுக்கூர்.**



குப்பைத்தொட்டியில் போடு! யாருக்கு வேணும், உன் தாங்க்ஸ்?ம்?'' என்று பல்லிடுக்கில் அலட்சியத்துடன் சொல்ல ஷைனிகா நொறுங்கிப்போனாள்!

அவனுடைய சினம் கொண்ட முகம் கூட அவளை வசீகரித்தது!

அவன் ஒட்டி ஒட்டி வந்த போது வெட்டி விட துடித்த மனது... அவன் விலகி விலகி போகும் போது.. ஓடிப்போய் அவனோடு ஒட்டி அவன் உயிரோடு கலந்து விடத்தோன்றியது!

அதன் பிறகு எதுவும் பேசாமல் காரில் ஏறிக்கொண்டாள்!

அவனருகில் இருப்பது பெரும் பாதுகாப்பாய் இருப்பது போல உணர்ந்தாள்!

மதிய உணவு.. அவனின் அண்மை பாதுகாப்பு உணர்வு.. இதமான வேகத்துடன் சென்ற காரினுள் நிலவிய ஏசியின் குளுமை என எல்லாமும் சேர்ந்து கண்களைச் சொக்கியது!

சீட்டில் வாகாய் சாய்ந்துக்கொள்ள உறங்கி விட்டாள்! கொஞ்ச நேரத்தில் தளர்ந்து சரிந்து அகிலேஷின் தோள் மீது தலைசாய்த்துக் கொண்டது அவளுக்கே தெரியாது!

அவளின் தீண்டல்... அவனின் தேகத்தில் மின்சாரத்தை பாய்ச்சியது!

அவளின் அழகும்.. இதமான பெண்வாசமும் அகிலேஷைப் போட்டி போட்டு மயக்கியது!

அவன் முகத்தருகே உரசிய தேன்பலா உதடுகள் அவனுக்குள் மோகத்தை மூட்டியது! காரை நிறுத்தி விட்டு அவளை அப்படியே இழுத்து இறுக்கி அவளுள் கலந்து விட ஆசை வந்தது!

கட்டுப்படுத்திக்கொண்டான்! அவளின் தூக்கம் கலையாத வண்ணம் மெல்ல காரை ஓட்டினான்! இல்லம் வந்ததும்...

''ஷைனிகா.. இல்லம் வந்து விட்டது! எழு!''

என்று அவள் காதருகே சொல்ல.. கிசுகிசுப்பான அகிலேஷின் குரல்கேட்டு சட்டென்று எழுந்தவள்... அவன் தோளில் சாய்ந்து அவனோடு ஒட்டி உரசிக்கொண்டு இருந்த தன் நிலைக்கண்டு கூசிப் போனாள்!

''எதுக்குத் தலைவரே
டாக்டர் பட்டத்த வேண்டான்னு
சொல்லிட்டீங்க?''
''படிக்காம பட்டம் வாங்க
எனக்கும் புடிக்கலியே''.

-ஏ.மூர்த்தி,
திருவள்ளூர்.



அவசரமாய் விலகினாள்! அவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை!

அவன் என்ன நினைப்பான்? வேண்டுமென்றே அவனை மயக்க நினைப்பதாக தப்பாக எடுத்துக்கொண்டால்? அந்த எண்ணம் உள்ளுக்குள் உதறலை வரவழைத்தது! அவமானமாய் உணர்ந்தாள்!

''ஸாரி... ஸாரி... நான் வேண்டுமென்று செய்யவில்லை. தெரியாமல்'' என்றவள் அதற்கு மேல் பேச முடியாமல் நா தழுதழுத்தது! கண்கள் கண்ணீரில் மிதந்தன!

''எனக்கு தெரியும்! நீ கிளம்பு!'' என்று அவன் இதமான புன்னகையுடன் சொல்ல அவள் காரை விட்டு இறங்கினாள்!

அவனைத்திரும்ப திரும்ப விரித்துப் பார்த்து கண்களில் சிறை செய்துகொண்டு சென்றாள்!

அந்தப்பார்வை அவனை என்னென்னவோ செய்தது!

அந்தக்கண்கள் இரண்டும் அவன் இதயத்தில் எழுதி வைத்திருந்த காதல்கவிதையை ஏடு திருப்பி காட்டியது!

அதை வாசித்தவன் மகிழ்ந்து போனாலும்... அவளின் சட்டென்று மாறும் வானிலைப்போலான மனதை நம்ப அவன் தயாராக இல்லை!

பாதகி... நீ ஓ.கே. சொல்லியிருந்தால் இந்நேரம் என்னருகில் என் மனைவியாய் இருந்திருப்பாய். என்னுள் பூத்த மோகத்திற்கு உரிமையுடன் அணைத்து இதழ் ஒற்றி சுகம் கண்டிருப்பேன்.

இப்படி தேகத்தில் தீயை மூட்டி விட்டு செல்கிறாயே! இந்த தீயை அணைக்கக்கூடியவள் நீ ஒருத்தி மட்டும் தான் என்று உணராமல்!

இது உனக்கே நன்றாக இருக்கிறதா, ஷைனிகா?

# 12

அகிலேஷ் பங்களாவிற்கு வந்தான். தாயிடம் மதிய உணவை வெளியில் உண்டு விட்டதாய் கூறி விட்டு மாடியேறிப்போய் படுக்கையில் விழுந்தான்.

கழுத்தில் இன்னும் ஷைனிகாவின் மூச்சுக்காற்றின் வெம்மை இருந்தது! அவள் முகம் பதித்து தூங்கிய தோள் பகுதியைத்தொட்டு தொட்டு சந்தோசப்பட்டுக் கொண்டான். அந்த சந்தோச உணர்வுடனே தூங்கிப்போனான்.

ஆனால், ஷைனிகாவால் தான் தூங்க முடியவில்லை!

படுக்கையும் நொந்ததடி! பாலும் கசந்ததடி! என்று சோகமாய் பாட வேண்டும் போல இருந்தது!

அகிலேஷின் அலட்சியத்தை அவளால் தாங்க முடியவில்லை! எல்லாவற்றிற்கும் தான் தானே காரணம் என்று அறிந்த போது அவளையே அவளுக்கு பிடிக்காமல் போனது!

அவருக்கு என்ன குறை? ஏன் அவரை மறுத்தேன்? அவர் காதலைச் சொன்ன போது ஏற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு தனது தாயின் வாழ்க்கை தானே காரணம்!

தனது தாயை ஏமாற்றிய கயவனின் நடத்தையை வைத்து தானே எல்லா ஆண்களும் அவனைப்போல இருப்பார்கள் என்று பயந்து தானே அகிலேஷ் கார்த்திக்கை அலட்சியப்படுத்தினேன்! அவமானப் படுத்தினேன்! காதலை ஏற்காமல் தவிர்த்தேன்! தள்ளி வைத்தேன்.

தன்னைப்பெற்றவன் மட்டும் அவள் கையில் கிடைத்தால் அவனை என்ன செய்வாள் என்று அவளுக்கே தெரியாது!

அதை விட அவள் தாயிடம் இருந்து தகப்பனைப்பிரித்த பாதகி மட்டும் கையில் கிடைத்தால் அவள் ஒழிந்தாள்.

குருவிக்கூடுபோல இருந்த குடும்பத்தை பிரிக்க இந்த மாதிரி பெண்களுக்கு எப்படி முடிகிறது?

பெண்ணுக்கு பெண்ணே எதிரியாய் மாறி... நன்கு வாழும் பெண்க

கீரையை வேக வைக்கும் போது தண்ணீரில் கொஞ்சம் உப்பைச் சேர்த்து வேக வைத்தால் நிறம் மாறாமல் இருக்கும்.

-கே. பிரபாவதி,
மேலகிருஷ்ணன் புதூர்



ளின் வாழ்க்கையைக்கெடுக்க முடிகிறது?

ஷைனிகாவிற்கு அழவேண்டும் போல இருந்தது! முழங்காலில் முகம் புதைத்து கதறி அழுதாள்.

அடுத்த நாள் காலையே புத்தகம் வந்து இறங்கி விட்டது! ஈஸ்வரி யம்மாள் மலைத்துப்போனாள்!

''அந்தக்குடும்பத்துக்கு தான் எத்தனை விசாலமான மனது! பணம் மூட்டை மூட்டையாய் இருந்தாலும் சேவை மனதுடன் உதவி செய்ய குணமும் வேண்டுமில்லையா, ரஞ்சனி? இன்றைக்கு மக்களின் மனதில் சுயநலம் தானே மிஞ்சித் தெரிகிறது! ஏதோ ஒரு சிலர் தான் இப்படி பிறர் நலம் விழைய வாழ்கிறார்கள்!

அதில் நான் பார்த்த அளவில் அகிலேஷ் கார்த்தின் குடும்பத்திற்கு இணையாய் இப்படி தானமும், தருமமும் செய்த குடும்பத்தைப் பார்த் ததில்லை!

கடையேழு வள்ளல்கள் வரிசையில் எட்டாவதாய் அகிலேஷ் தம்பியை நம்ம இலக்கணங்களும், வரலாறும் ஒரு நாள் ஏற்றுக் கொள்ளும்'' என்று ஈஸ்வரி கூறி முடிக்க

''குறுக்கு வழியில் சம்பாதிக்கும் எத்தனையோ கணவான்கள் கிள் ளிக்கொடுக்க மனமில்லாமல் இருக்க நேர்மையான... முறையில் நா ளெல்லாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை இப்படி சேவைக் காக செலவழிப்பது எவ்வளவு பாராட்ட வேண்டிய விஷயம்!'' என்று ரஞ்சனியும் கூறி வியந்தாள்.

''என்ன ஷைனிகா.. அகிலேஷைப் பற்றி நீ எதுவும் சொல்ல வில்லையே?'' என்று ஈஸ்வரி கேட்க..

''நான் நினைக்க, சொல்ல நினைச்ச அனைத்தையுமே நீங்கள் சொல்லிவிட்டீர்கள்! நிஜமாகவே அவர் அற்புதமான பிறவிதான்!'' என்று ஷைனிகா சொல்ல... ''அவர் உன்னை விரும்பறார்ங்கிறது எவ்வளவு மகத்தான விஷயம்!'' -இது ரஞ்சனி!

''அவர் உன்னைக்கைப்பிடிக்கப்போகிறார் என்பது எவ்வளவு பெரிய வரம்! நீ இதற்கு முன் எடுத்த பிறவியில் செய்த தவத்தின் பலன் தான் நீ அகிலேஷிற்கு மனைவியாகப்போறது!''

ஈஸ்வரி சொல்ல... ஷைனிகாவின் முகம் இருண்டு விட்டது! உதடுகளில் ஒரு கசப்பான புன்னகை தோன்றியதை அவர்கள் பார்க்க முடியாதபடி வேறு புறம் திரும்பி புத்தகத்தை அடுக்கி வைப்பது போல பாவனைச்செய்தாள்!

மாலை அகிலேஷ்கார்த்திக் இல்லத்திற்கு வந்தான்!

புத்தகங்கள் அடுக்கி வைத்திருந்த அறையைப்பார்த்தான்!

ஈஸ்வரியம்மாளிடமும், ரஞ்சனியிடமும் பேசினான்!

ஷைனிகா கிட்டே வந்து பேசுவாள் என்று எதிர்பார்த்தான் அவள் வரவில்லை!

அதனால் தூர நின்றிருந்த அவளை அலட்சியப்படுத்தி பெரிய பெரிய முறைப்புகளுடன் கிளம்பினான்!

''உனக்கும், அவருக்கும் சண்டையா ஷைனிகா?'' ரஞ்சனி கேட்க... விதிர்விதிர்த்துப்போய் பின் சமாளிப்புடன் பேசினாள்.

''அதெல்லாம் இல்லைக்கா! உங்க முன்னாடி என்னிடம் பேச கூச்சப்பட்டுகிட்டு கிளம்பறார்! மற்றபடி காலை, மதியம், மாலை, இரவுன்னு அடிக்கடி போன்ல பேசறார்!''

அகிலேஷ்கார்த்திக் மேல் இப்போது மலையளவு ஆசையிருந்தது! ஆனால், அவனருகே சென்று பேச தயங்கினாள்! அடுத்ததாய், அவன் நேற்றும், இன்றும், காட்டும் கடுப்புடன் கூடிய கூர்மையான பார்வை அவளுக்கு அச்சத்தைத் தந்தது!

அதற்கு பிறகு வந்த நாட்களும் இதுவே தொடர்ந்தன!

அந்த ஞாயிறு காலை பத்மாவதி ஏற்காட்டில் இருக்கும் மகள் ஆர்த்திக்கு போன் செய்தாள்.

''ஆர்த்தி...என்ன செய்யறே? எங்களையெல்லாம் பார்க்கணும்னு

உனக்கு எண்ணமே வரவில்லையா? ஊருக்கு எப்போதுடி வர்றே?''

''அவர் உடம்பு முடியாமல் படுக்கையில் இருக்க..அவரைத் தனியே விட்டுவிட்டு எப்படிம்மா வருவேன்? அப்புறம் ஆபீஸ் வேலையும் என்னை விழிபிதுங்க வைக்குது! நான் என்ன செய்ய முடியும்..?''

''உனக்கு எதுக்குடி ஆபீஸ் வேலையெல்லாம்! எல்லாவற்றையும் தம்பி பார்த்துக்க மாட்டானா..?''

''அவன் பாவம்! எவ்வளவு தான் உழைப்பான்? அவன் பாரத்தைக் குறைக்க தான் நான் இங்கிருக்கும் சொத்துக்களை நிர்வாகம் செய்வது! உடையவன் இருந்து பார்த்துக் கொள்வது போல வேலைக்காரவங்க பார்த்துக் கொள்வாங்களா...?''

''உன்னைத் திருத்தவே முடியாதுடி! அது தெரிஞ்ச கதை தானே..? நீ இங்கே வந்துவிட்டு போடி, ஆர்த்தி..!''

''எதுக்கும்மா இப்படி அவசரமா அழைக்கிறே?''

''இங்கே உன் தம்பி போக்கே சரியில்லைடி! என்ன கவலையோ தெரியலை! சரியா சாப்பிடுவதும் இல்லை! தூங்குவதும் இல்லை! இரவானால் என் மடியில் தலைவைத்து படுத்துக்கிறான்! நிம்மதியில் லை...நிம்மதியில்லைன்னு ஒரே புலம்பல்! கேட்டால் சொல்வ தில்லை! தினம் அவனைத் தட்டி, சில நாட்கள் தாலாட்டு பாடி கூட தூங்க வைக்கிறேன்டி ஆர்த்தி!''

தாய் கூற.. கவலையான ஆர்த்தி...

''நான் இப்போதே புறப்பட்டு வர்றேன்மா! மதிய உணவு வந்து விடறேன்! சரியா!''

''ஆர்த்தி...என்ன சமைக்கட்டும்?''

**''அந்த சாமியார் எதுக்கு மவுன விரதம் இருக்கார்?''**
**''இன்னைக்கு பொண்ணுங்க யாரும் ஆசிரமத்துக்கு வரலியாமே''**

**-ஏ.மூர்த்தி,**
**திருவள்ளூர்.**



''மட்டன் வறுவல்! விரால்மீன் குழம்பு! வெள்ளைசாதம்! இது போதும்! நம்ம அகிலேஷுக்கும் இந்த உணவு ரொம்ப பிடிக்குமில்லையா...?''

ஆர்த்தி சொன்னதுபோல வந்தாள்!

இல்லத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்தான் அகிலேஷ்!

ஷைனிகாவை தூர நின்று தரசித்துவிட்டு வருவதற்கு தான்! அவளோடு பேசவில்லையானாலும்..அவளின் பூ முகத்தை தரிசிக்காமல் அவனால் இருக்கவே முடியவில்லை, இப்பொழுதெல்லாம்! ஆர்த்தியின் வருகையால் அவன் பயணம் நின்று போனது!

இருவரும் சேர்ந்து உண்டனர்!

மாமாவின் உடல்நலம் விசாரித்தான்! வர்த்தகம் பேசினான்! அவன் புதிய நிறுவனத்தை ஹைதராபாத்தில் ஆரம்பிக்க முயற்சி செய்வதைத் சொன்னான்!

அகிலேஷ் பின் தன்னறைக்கு செல்ல...பின்னாடியே ஆர்த்தியும் வந்து அவனருகில் அமர்ந்தாள்!

''இன்று இங்கு நானா வரலே, அகிலேஷ்! அம்மா அழைச்சிதான் வந்தேன்! சொல்லு, அகி? உன் மனசுக்கு துன்பத்தை தந்த நிகழ்ச்சி என்ன? உடம்பு இளைச்சி...முகதேஜஸ் குறைஞ்சிதான் இருக்கே!''

''நான் நல்லாதான் இருக்கிறேன், அக்கா!''

''நல்லாயிருப்பவன் லட்சணம் தெரியும்! அம்மா கேட்டு சொல்லாதவன்..இந்த அக்கா கேட்டால் சொல்லுவேன்னு ஓடி வந்திருக்கிறேன்!''

ஆர்த்தி இப்படி தவிப்புடன் கூறவும்...அவனால் அதற்குமேல் மூடி வைக்க முடியவில்லை!

ஷைனிகாவை சந்தித்த நாள் முதல் நேற்று வரை நடந்ததை கூறி முடித்தான், ஒரு சோகத்தோடே!

''எல்லாவற்றிலும் வெற்றியே கண்ட என்னால் ஷைனிகாவிடம் கண்ட தோல்வியில் துவண்டுவிட்டேன், அக்கா!''

இப்படி கூறும்போதே கண்கள் பொங்கிவிட்டன !

''ஷைனிகாவிடம் நீயாக தோல்வி கண்டேன்னு அர்த்தம் கற்பிக்கிறது தப்பு, அகி!''

''அக்கா...''

''உன் அணுகுமுறை சரியில்லாததுபோல தோன்றுது, அகி குட்டி!''

''என்னக்கா சொல்கிறாய்...?''

அகிலேஷிக்கு கொஞ்சம் அதிர்ச்சியாய் இருந்தது!

''உன்னோட அணுகுமுறையில் ஆணவமும், கர்வமும், தலைக் கனமும் விஞ்சித் தெரிகிறது! உன் காதலை நீ அவளிடம் அழகாய், மென்மையாய் வெளிப்படுத்தவில்லை!''

''அக்கா...''

''அநாதை இல்லத்தில் வளர்ந்தவள் இல்லையா, அவள்?''

''ஆமாம்!''

''ஏதாவது பாதகம், கொடுமை, கொடூரம், வஞ்சம், ஏமாற்றம், நிராகரிப்பு போன்ற ஏதாவது ஒன்றால் அலைக்கழிக்கப்பட்டு, தாய், தகப்பனை இழந்து அவள் இங்கு வந்து சேர்ந்திருப்பாள்!

அதனால் ஏற்பட்ட காயத்தினால் அவளின் இதயம் புண்ணாகி போயிருக்கும்! அவளின் விருப்பு, வெறுப்பு, எண்ணம், ஆசை அறிந்து மயிலிறகு வருடலாய்..இதமான தென்றலின் தொடுகையாய்..மழைக் கால சாரலின் இனிமையான சுகானுபவமாய்...பனியின் குளுமை யோடு அவளை நீ அணுகியிருக்க வேண்டும்!

காதலைச் சொல்லியிருக்க வேண்டும்!''

''அக்கா....''

''கண்ட நாளே தாலியோடு வருகிறேன்! எனக்கு கழுத்தை நீட்டு கிறாயான்னு கேட்டிருக்கே! பயந்து போயிருப்பாள்! பார்த்து பழகாத ஒருவன் முதல்நாளே இப்படி பேசினால் மேல் தோற்றத்திலும், அவ ளின் மிதமிஞ்சிய அழகிலும் மயங்கி தான் இப்

**''அப்பா... என் காதலன் பிடி என் கையில இருக்கு பயப்படாதீங்க!''**

**''எப்படி சொல்ற?''**

**''அவன் வாரிசு என் வயிற்றில் இருக்கே!''**

**-எஸ்.இராதாகிருஷ்ணன், மதுக்கூர்.**



படி பேசியிருப்பாய் என்று தப்பான அர்த்தம் கற்பித்துக் கொண்டிருப் பாள்...!

அவளுக்கு வேலைக்கு போக பிடித்திருக்கிறது...! ஆனால் அவள் இன்னொருவனிடம் கைகட்டி வேலைப் பார்ப்பது உனக்கு பிடிக்க வில்லையென்ற ஒரே காரணத்திற்காக அவள் செல்லுமிடமெல்லாம் நீ புகுந்து தோல்வியைத் தழுவ வைத்து இருக்கே! அவளை பெரிதாய் அலைக்கழித்து இருக்கே!

திருமணத்துக்கு பின்புதானே உன் விருப்பு, வெறுப்புகளை அவ ளிடம் தெரிவித்திருக்கவேண்டும்! நேசிக்கும் போது அவளின் விருப்பு களுக்கு நீர்விட்டு குளுமை படுத்த வேண்டாமா..? அவள் ஆசைகளை தீயிட்டு கொளுத்தி...உன் விருப்பத்தை நிலைநாட்ட நினைப்பது தப் புன்னு நீ உணரலையா, அகி...?''

''அக்கா...''

''இவனைக்கட்டினால் காலமெல்லாம் அடிமையாய் இருக்க வண்டுமே என்று கூட பயந்திருக்கலாம்!''

ஆர்த்தி பேசப்பேச....அக்கா சொல்வது சரியென்றே தோன்றியது, அகிலேஷிக்கு!

''நீயோ முரடன்! போக்கிரி! எதையும் சாதித்தே பழகியவன்! பொ றுமையில்லாதவன்! பெண்களிடம் வளைந்து, குழைந்து பேசியறியா தவன்! அப்படிப்பட்ட நீ என்ன செய்திருக்கவேண்டும்...?'' என்று கொஞ்சம் ஆர்த்தி வேகமாய் கேட்க...

''என்ன செய்திருக்க வேண்டும், அக்கா...?''

ஷைனிகாவைப் பார்த்ததும் பிடித்துப் போனதில்லையா?

''ஆமாம்!''

''அவளிடம் காதலைச் சொல்லாமல் என்னிடமோ..அல்லது நம்ம அப்பாவிடமோ...கூறி...எங்க சம்மதத்தோடு பெண்கேட்டு போயி ருந்தால்...பெரியவர்களின் வருகையில்...அவர்களின் மேல் உள்ள நம்பிக்கையால்... மரியாதையால்..உன் குணமும் அறிந்து..வருங்கால வாழ்வின் பாதுகாப்பையும் உணர்ந்து உன்னை மணந்துக் கொள்ள சம் மதம் சொல்லியிருப்பாள்!''

அக்காவின் பேச்சு அகிலேஷ் கார்த்திக்கிற்கு புரிந்தது!

‘‘என்னது! உன் உடம்பு உறுப்ப தானம் செய்துட்டியா?’’

‘‘ஆமாம் என் மனைவி என்ன அடிச்சி சேதப்படுத்த மாட்டாளே!’’

-கச்சனம் இராதாகிருஷ்ணன்,
மதுக்கூர்.



‘‘நான்தான் தப்பு செய்துவிட்டேனா?’’

‘‘அதில் என்ன சந்தேகம்?’’

‘‘எங்களிடம் தெரிவித்து இருந்தால், அம்மா குதிப்பாள்! அவளை சமாதானப்படுத்தி...அவள் சம்மதத்தோடு..இந்நேரம் அவள் உன் மனைவியாய் ஆகியிருப்பாள்! யார்க்கண்டா இந்நேரம் உன் பிள்ளையை சுமந்து...உன்னைத் தகப்பனாக கூட ஆக்கியிருப் பாள்!’’

ஆர்த்தி லயிப்புடன் சொல்ல...அகிலேஷ் ஆர்த்தியின் சொல்லில் மலர்ந்தான்!

‘‘நான் ஷைனிகாவை இப்போதே போய் பார்த்துவிட்டு வருகிறேன்!’’

‘‘பிடிக்கவில்லை என்று சொல்பவளிடம் போய் நிற்கப் போறியாக்கா...?’’

‘‘உன்னைப் பிடிக்கலேன்னு சொன்னாளா...?’’

அவன் யோசித்தான். பின் சொன்னான்.

‘‘அப்படி ஒரு நாளும் சொன்னதில்லை தான்! திருமணத்தை தான் பிடிக்கலேன்னு சொல்வாள்!’’

‘‘அவளுள் ஏதோ கஷ்டமும், காயமும் இருக்கு, அகி குட்டி! அதை தெரிந்து கொண்டால் போதும்! நான் போய் பேசறேன்! நல்ல பதில் கிடைக்கும்! நம்பு அகி குட்டி!’’ என்று ஆர்த்தி அகிலேஷைக் கெஞ்சினாள்!

அகிலேஷ் கார்த்திக் நம்பினான்! அவனின் நம்பிக்கை ஜெயிக்குமா..?

# 13

**ஆ**ர்த்தி அங்கு முதல்முதலாய் வருகிறாள்!

இல்லத்தின் எழிலும், கம்பீரமும் அவளுக்கு ரொம்ப பிடித்துப் போனது!

ஆர்த்தி தன்னை அறிமுகப்ப டுத்தி கொண்டதும்..அங்கு நல்ல வரவேற்பு கிடைத்தது!

பின், சரகொன்றை மரத்தினடியில் போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் ஆர்த்தியும், ஷைனிகாவும் அருகருகே அமர்ந்தனர்!

ஆர்த்தியின் அழகும், கண்ணியமான தோற்றமும் ஷைனிகாவின் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டது!

இறந்துபோன தனது தாய்... மீண்டும் உயிர்த்தெழுந்து நேரில் வந் தது போல உணர்வு தோன்ற...

''அம்மா....சொல்லுங்கம்மா..என்ன பேச வேண்டும்?''

''ஷைனிகா இப்படி சொல்லவும்...'' ஆர்த்தி அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள்! நெற்றியில் பாசத்தோடு முத்தமிட்டாள்.

''பிள்ளையில்லாத எனக்கு நீ 'அம்மா'ன்னு அழைப்பது அமிர்தமா இருக்கும்மா!'' என்று கண்கள் கலங்கினாள்.

ஆர்த்தியின் தொடுகையும், முத்தமும் அவளின் புண்ணாகிப் போயி ருந்த மனதிற்கு அருமருந்தாய் இருந்தது!

''அகிலேஷ் எல்லாம் சொன்னான், ஷைனிகா!

அகிலேஷ் உன்னை உயிராய் நேசிக்கிறான்! கட்டினால் அவளைத் தான் கட்டுவேன்! இல்லேன்னால் கடைசி வரை இப்படியே தான் இருப்பேன்னு சொல்கிறான்! அவனை உனக்கு பிடிக்காமல் போக என்ன காரணம்?

திருமணத்தையும், ஆண்களையுமே பிடிக்கவில்லையாம்மா...!

என்ன காரணம் ஷைனி?''

ஷைனிகா சொல்லாமல் தலைகுனிந்தாள்!

''அந்த ரணத்தை கீறி,கிளற விரும்பவில்லையென்றால் விட்டுவிடு,

''டாக்டர் குடிக்கிறத நிறுத்துற மருந்தை குடிச்சுட்டேன் மறுபடியும் எழுதி கொடுங்க!''

''பாரவாயில்லையே! ஆர்வமா இருக்கியே!''

''ஆமாம் டாக்டர் அதைவிட உங்க மருந்து நல்லா போதையா இருக்கு''.

–கச்சனம் எஸ்.இராதாகிருஷ்ணன்,
மதுக்கூர்.



ஷைனிகா!'' என்று ஆர்த்தி இதமாய் சொல்ல...

ஷைனிகா கண்கள் கலங்கினாள்.

''அந்த ரணத்தைக் கீறி, இதயத்தைப் புண்ணாக்கிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால், எனக்கு முதலில் அவரைப் பிடிக்கவில்லை. அவர் வந்து பேசப்பேச..என் மனமும் தன் வசம் இழந்து அவர் பக்கம் சாயும்போது...நான் வேலைக்காக செல்லுமிடங்களிலெல்லாம் வேலையில்லாமல் அவதிப்பட்டது அவரால் தான் என்று தெரிய வந்தது..!

இப்போதே தன் விருப்பு, வெறுப்புகளை என்மேல் திணிக்கிறாரே! திருமணத்துக்கு பிறகு என்ன செய்வாரோன்னு பயந்தேன்! அதன் காரணமாய் வெறுப்பு வந்து...அவரைச் சந்தித்து கடுமையாய் பேசிவிட்டேடன்! பேசியப் பின் அவர் இல்லத்திற்கு வரவில்லை! பெங்களூரு போய்விட்டதாக சொன்னார்கள்!

அந்த ஒரு வார காலமும் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை! தவித்தேன்! தத்தளித்தேன்! அவர்மேல் எனக்கிருந்த காதலை உணர்ந்தேன்! பெங்களூருவிலிருந்து சேலம் வந்தவர் இல்லத்திற்கு வந்தாலும் என்னோடு பேசுவதில்லை! லைப்ரரிக்கு புத்தகம் வாங்க சென்றபோது...என் அருகில் அவர் இருந்தும் பேசவே இல்லை!

என் வெட்கத்தை விட்டு..அவருக்கு நன்றி சொன்ன என்னை கடுமையாய் பேசி அழ வைத்துவிட்டார்! அகிலேஷ் இல்லாமல் வாழ்க்கை இல்லையென்பதை உணர்ந்துவிட்டேன், அம்மா! ஐ...லவ்..அகிலேஷ் கார்த்திக்! ஐ லவ் சோ மச், அகிலேஷ் கார்த்திக்!'' என்றவள்...

''அவரின் அலட்சியத்தை...அவரின் ஒதுக்கத்தை..அவரின் நிராக

ரிப்பை...என்னால் தாங்க முடியவில்லை, அம்மா!''

ஆர்த்தியின் மடியில் தலைகவிழ்ந்து அழுதாள்!

''அகிலேஷ்...நான் பிறந்து நீண்டநாட்கள் கழித்து குறிஞ்சி மலராய் பிறந்தவன்! ரொம்ப செல்லம்! படிப்பில் படுசுட்டி! ஒவ்வொரு வகுப் பிலும் முதலாவதாய் தேறியவன்! படிப்பு முடிந்து வந்து...அப்பாவின் வர்த்தகத்தை கையில் எடுத்து பலமடங்காய் உயர்த்தியவன்!

வெற்றியையும், புகழையும் பெரிதாய் அனுபவிக்கும் மனிதர்கள் கொஞ்சம் கர்வமாய் தான் இருப்பார்கள்! அகிலேஷோ இளைஞன்! அகிலேஷ் மட்டும் எப்படி விதிவிலக்காவான்!

ஷைனிகா...அகிலேஷை நாங்கள் இப்படி பார்த்ததில்லை! அவனும் உன்னைப் போலத்தான் நிம்மதியிழந்து இருக்கிறான்! பெங்களூரு வில் இருந்த ஒரு வார காலமும் குடித்து உடம்பை கெடுத்துகிட்டு இருக்கிறான்! இங்கேயும் பல நாட்கள் இதுவே தொடருதுபோல, ஷைனிகா!''

''ஐய்யோ...'' என்று அலறினாள் ஷைனிகா.

அதற்கு மேல் தாங்க முடியாத ஷைனிகா தேம்பியழுதுக் கொண்டே சொன்னாள்!

''நான் அவரை பார்க்க வேண்டும்மா! அதுவும் உடனே என் அகி லேஷைப் பார்க்க வேண்டும்மா! அவர் காலடியில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும்மா!''

''பார்க்கலாம், நீ அழாதே, ஷைனிம்மா!'' என்று ஆர்த்தி அவள் கண்ணீரைத் துடைத்து தேற்ற...

''அதுக்கென்ன உடனே பார்த்துவிட்டால் போச்சு!'' என்று குரல் வந்த திசையை இருவரும் நோக்க...

அங்கே கம்பீரமாய்...அழகான புன்னகையுடன் நின்று கொண்டிருந் தான், அகிலேஷ்!

''நீ எப்போடா வந்தே....?''

''நீ வந்த அடுத்த ஐந்தாவது நிமிடமே!''

''அய்யோ நீ... நானும், ஷைனிகாவும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டாயா..?''

‘‘எதிர் வீட்டில் ஒண்ணுமே இல்லைங்க’’

‘‘எப்படித்தான் குடும்பம் நடத்துகிறான்னே தெரியலைங்க’’.

‘‘உனக்கு இது எப்படி தெரிந்தது?’’

‘‘ஒரு டம்ளர் பருப்பு கேட்டேன், காபிபொடி சர்க்கரை’னு எதைக் கேட்டாலும் இல்லேன்னே சொன்னாள்ங்க’’.

-எம்.ஏ.நிவேதா, அரவக்குறிச்சிப்பட்டி.



‘‘ஒரு வார்த்தை விடாமல் துல்லியமாக!’’

அகிலேஷ் அப்படி சொல்லி அருகில் வர... ஷைனிகா வெட்கத்தில் முகத்தை மூடிக் கொண்டாள்!

‘‘அக்கா,...நந்திபோல இன்னும் ஏன் நிற்கிறே...?’’

‘‘உனக்கு நான் இப்போ நந்தியாத்தான் தெரிவேன். அகிலேஷ்! என்று சிறு கூறிவிட்டு புன் னகையுடன் ....ஆர்த்தி நின்றாள்!

அகிலேஷ்சும், ஷைனிகாவும் ஆசையாசையாய் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்!

அகிலேசும் அவளை இழுத்து இறுக்கிக் கொண்டான். எலும்புகளெல்லாம் நொறுங்கும் வண்ணம்!

அகிலேஷின் அணைப்பே.. அவனின் மிதமிஞ்சிய காதலைச் சொல்லியது!

‘‘ஷைனி....ஷைனிம்மா... என் கண்ணே...’’ என்று கூறி.. அவள் முகம் பற்றி... ஆசையோடு இதழ் தேடி இதழால் அணைக்க... அவள் முதலில் திமிறினாள்! அவனின் மன்மதக்கலை.. உடலில் மோகத்தை மூட்ட.. அதற்கு மேல் தாங்க முடியாமல் தொய்த்து,, தளர்ந்து.. அவன் மார்பில் தலை சாய்த்து.. அவன் முதுகில் கை வைத்து இறுக்கி கண்மூடி கிறங்கினாள்!

நீண்ட நேரம் ஒருவரை ஒருவர் தழுவி... முத்தமிட்டு. தங்களின் மிதமிஞ்சிய காதலை வெளிப்படுத்திக் கொண்டனர்!

பின் பிணைப்பை தளர்த்தி... பிரிந்து நின்று.. ஒருவரை ஒருவர் விழி விரித்து.. ஆசையாசை யாய் நோக்கிக் கொண் டனர்.

‘‘முதன்முதலா நான் உன்னை சந்தித்தபோது... இந்த கண்கள்

வெளிப் படுத்திய கர்வமான, திமிரான பார்வையை தாண்டி என் மனதைப் பறிக் கொடுத்தேன்!

நீ நெஞ்சை நிமிர்த்தி... திமிராய் என் முன்னே நின்னே பார் அந்த நொடிதாண்டி உன்னுள் விழுந்துவிட்டேன்!''

நீங்க சுயம்வரத்திற்கு தாமதமா வந்தீங்க இல்லையா... அந்த கோபத்தில்தான் அப்படி முறைத்தேன்!

''அந்த நொடிதான் என்னை அடக்க நீதான் சரியானவள்னும்.. உன் னோடு என் வாழ்க்கை ரொம்ப இனி மையாகவும், சுவாரசிய மாகவும் இருக்கும்னு தோணினது! கெஞ்சற வளைவிட, மிஞ்சறவ ளைத்தான் ஒரு ஆணுக்கு ரொம்ப பிடிக்கும்! சண்டிக் குதிரையைவிட முரட்டுக் குதிரையை எந்த ஆணும் விரும்புவாங்க!''

'''அப்போ நான் குதி ரையா..? என்னை விலங் கோடத்தான் ஒப்பிடணு மா? என்றவள் செல்ல மாய் அவன் மார்பில் கைகளால் குத்த.... அந்தக் கையைப் பற்றி கன் னத்தில் வைத்துக் கொண் டான்.

''தாடி குத்துது! ஷேவிங் செய்யுங்க! மொழு மொழு கன்னத்தில்தான் ரொம்ப அழகாய் இருப் பீங்க!'' என்று கொஞ்ச லுடன் சொன்னாள்.

''கிட்டத்தட்ட ஒருமாத மாக என்னை இந்த கோலத்துக்கு ஆளாக்கி வள் நீதானே? இவ்வளவு ஆசைகளையும், நேசத்தையும் உள்ளே வைத்துக்கொண்டு... இத்தனை நாளும் என்னை பழிவாங்கி விட்டாயேடி ராட்சசி!

''உங்களைப் பிரிஞ்ச பின்புதான்.. என் நேசம் உணர்ந்தேன்! நீங்க மட்டும் என்னவாம் இவ்வளவு பிரியத்தை யும், காதலையும், வெறி யையும் உள்ளே வைத்துக் கொண்டு.. என்னிடம் பேசாமல் பழிவாங்க வில்லையாடா.. ராட்சசா..?''

ஷைனிகாவும் அவனைப் போலவே கூறி சிரிக்க...

''ராட்சசி! அரக்கி! அழகான கள்ளி! உன்னை என்ன செய்கிறேன் பார்!'' என்று தாவி அணைக்க வர.. அவளோ அவனுக்கு அகபடாமல் ஓடினாள்!

''அகிலேஷ் விளையாட்டு போதும்! எல்லாத்தையும் இப்போ விளையாடிவிட்டால் பின் திருமணத்துக்கு பிறகு போரடிக்கும்!''

ஆர்த்தி சொல்ல... அகிலேஷ் சிரிக்க... ஷைனிகா நாணமுற்றாள்!

பங்களாவிற்கு கிளம்பினர்!

''அப்பா நம்ம விருப்பத்துக்கு எதிரா நிற்கமாட்டார்! அம்மா தான் முரண்டுவாள்! என் திருமணத்தின்போதே உன் மாமா நம்ம ஜாதியில்லை! நம்ம ஜனமில்லை! நம்ம இனமில்லைன்னு லேசுல சம்மதிக்கவில்லை. அகிலேஷ்! அம்மாவிடம் போராடித்தான் கட்டிக்க வேண்டியதாய் போய்விட்டது.!

ஷைனிகாவோ கருணை இல்லத்தில் வளர்த்தவள்! அம்மா முதலில் மறுக்கலாம்! அதுக்காக நீ மனம் தளரக் கூடாது, அகிலேஷ்!

''அம்மாவை சம்மதிக்க வைப்பது என் பொறுப்பு புரியுதா...?''

ஆர்த்தி இவ்வாறு சொல்ல அகிலேஷ் தலையாட்டினான்!

''அம்மா.. ஷைனிகா உன் ஆபரேசனின் போது ரத்தம் கொடுத்திருக்காம்மா!. அதுவும் அளவுக்கு அதிகமாய்! உனக்கு ரத்தம் கொடுத்த பிறகு உடம்புக்கு முடியாமல் போய் ஒரு மாதம் படுக்கையில் கிடந்திருக் கிறாள்! அதெல்லாம் ஈஸ்வரியம்மாள் சொல்லி தான் எனக்கு தெரியும்! அவளோட ரத்தம் உன் ரத்தத்தே தாடு கலந்து ஓடுதும்மா அந்த நன்றிக் காவது இந்த திரு மணத்திற்கு தடையாக நிற்காதே!''

-அகிலேஷ் வாதாடினான்.

அம்மா....ஷைனிகாவை என் பொண்ணா நினைச்சிக்கம்மா! வேணும்னால், அவளை நான் ஊரறிய என் பிள்ளையா தத்தெடுத்துக் கறேன்! பிறகு அவளை என் தம்பிக்கு கட்டி வையும்மா!..'' ஆர்த்தி சொன்னாள்!

அவர்கள் ஒரு மணி நேரம் விடாமல் வாதாட

**''ஆபீஸ் பணத்தைத் திருடினது நீதான்னு தெரிஞ்சா உன் சீட்டைக் கிழிச்சிடுவாங்க''**

**''நான் அந்த சீட்டுக்குள்ளே தான் வெச்சிருக்கேன்னு அவங்களுக்கு எப்படியா தெரியும்?''**

**-எம்.ஏ.நிவேதா, அரவக்குறிச்சிப்பட்டி.**



பத்மாவதியின் இரும்பு இதயம் இளகி உருகுகிறது!

# 14

**கா**ர்த்திகேயன், பத்மாவதி, ஆர்த்தி,அகிலேஷ் அனைவரும் இல்லத்திற்கு சென்று முறைப்படி ஈஸ்வரியிடம் பெண் கேட்டனர்!

அங்கிருந்த அனைவரும் மகிழ்ந்து போயினர்!

ஷைனிகா அங்கிருந்து நழுவி பூங்காவிற்கு செல்ல... அதைக்கண்ட அகிலேசும் அவள் பின்னாடியே போய் நின்றான்.

''ஏய்... ஷைனி .. என்ன சந்தோசமா?''

''ரொம்ப..ரொம்ப... அவள் தன் செப்பு இதழ்களை அழகாய் விரித்து சொல்ல...'' அதில் கண்களைப் பதித்திருந்த அகிலேஷ் கார்த்திக்...

''அப்போ மாமனுக்கு உதட்டில் ஒன்று கொடுத்து கவனிக்கிறது...?'' என்று அகிலேஷ் சிறுபுன்னகையுடன் கண்ணடித்து கேட்க...

''மாமனா...?'' மீண்டும் அழகாய் உதட்டை சுழித்து கேட்டாள்.

''என் அக்கா உனக்கு அம்மான்னா நான் உனக்கு மாமன்தானே? மாமான்னு கூப்பிட்டு உதட்டில் ஒரு முத்தம் வை ஷைனி!''

''ம்கூம்? அதெல்லாம் கல்யாணத்திற்கு பிறகுதான்!''

''ஏய் ஒண்ணுடி! உதட்டில்கூட வேண்டாம்! கன்னத்தில் கொடுத்தால்கூட பரவாயில்லை!''

''எவ்வளவு வேண்டுமானாலும் மறுக்காமல் உங்களுக்கு கிடைக்க வேண்டியது கிடைக்கும்,


**கண்மணி சந்தா**

**கண்மணி**

**உங்கள் இல்லம் தேடி வர.**

**1 ஆண்டு சந்தா : ரு 600**

**6 மாத சந்தா : ரு 300**

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:

**நிர்வாகி**

**தேவியின் கண்மணி,**

**246, அண்ணாசாலை,**

**சென்னை - 600 006**



**அரிசி உப்புமா செய்யும் போது அரிசி நொய்யில் சிறிது நல்லெண்ணெய் விட்டுக் கலந்து பின் செய்தால் உப்புமா வாசனையாக இருக்கும்.**

**-கே. பிரபாவதி,**
**மேலகிருஷ்ணன் புதூர்**

கல்யாணத்திற்கு பிறகு!''

''இந்தப் பொண்ணுங்களே மோசம்! இந்த ஒண்ணை சொல்லி தப்பித்து விடுங்கடி!''

''யாரெல்லாம் இப்படி சொல்லி தப்பித்திருக்காங்க?'' என்று புருவம் உயர்த்தி கேட்க...

''அடிப்பாவி! வெளிநாட்டில் படித்துவிட்டு வந்திருக்கிறேன்! இப்போது நாடு,மாநிலம், மாவட்டம்னு கடந்துபோய் பிசினஸ் பார்த்தாலும்... பலாப்பழத்தில் ஈ மொய்ப்பது போல பொண்ணுங்க என்னை மொய்த்திருந்தாலும் இதுநாள்வரை அக்மார்க் குத்தின நல்ல ஆம்பளையாதான்டி இருந்திருக்கிறேன்!''

''ஆஹா... நான் நம்பமாட்டேம்ப்பா!'' என்று கூறி ஷைனிகா ஒரு மாதிரி காதலுடன் சிரிக்க... அந்த சிரிப்பில் மயங்கிய அகிலேஷ் எட்ட நின்றவளின் கையைப் பிடித்து ஒரு சொடுக்கு சொடுக்க...ஓடிவந்து மார்பில் விழுந்தாள்! விழுந்தவளை கண்ணோடு கண் வைத்து நோக்கியவன், சொன்னான்.

''அடியேய்! அப்படியே உன்னை அணு அணுவா ரசிச்சு ருசி க்கணும்போல இருக்கு'' என்றான்!

''அட ராட்சசா...! என்னை ருசிக்க உனக்கு அவ்வளவு வெறியா..?

தப்பிச்சு நான் போறேம்ப்பா!'' என்று கூறியவள் கொலுசின் மணிகள் சங்கீதமாய் ஒலிக்க ஓடிப்போனாள்!

ஆர்த்தியைப் போய் கட்டிக்கொண்டு...

''அப்பாவை ஏம்மா அழைச்சி வரலை?''

''யாரை அப்பாங்கறோ, ஷைனிம்மா?''

''உங்க புருஷனைத்தான்! நீங்க என் அம்மான்னா... அவர் எனக்கு

அப்பாதானே...?''

''ஆமாம்...ஆமாம்டா! கை, கால் விளங்காமல் படுக்கையில் கிடந்து இப்போதான் எழுந்து உட்கார்ந்தா!'' ஆனால் அது கடவுளுக்கு பொறுக் காமல் போயிடிச்சி! ஹார்ட் வால்வுல பிரச்சினை வந்து சமீ பமாத்தான் ஆபரேசன் செய்தோம்! கல்யாணத்துக்கு வருவார்! உன் கல்யாணத்துக்கு பிறகு சேலத்துக்கே வந்துவிடுவோம்! உன் அன்பு மழையில் நனைய!

ஆர்த்தி ஷைனிகாவை இழுத்து கன்னத்தில் முத்தமிட... அதை அகிலேஷ் விழி விரித்து பார்க்க.. சிரிப்போடு..

''ஷைனிம்மா. இங்கே ஒருத்தருக்கு வயிறு எரிஞ்சு புகையா வருது தெரியுமா..?''

''யாருக்கு?'' ஏன்ம்மா?

''நம்ம அகிலேஷ்க்கு தான்! நான் உன்னை முத்தமிட்டது கோபத்தை வரவழைக்குது! நம்மால் செய்ய முடியலைன் னுதான்!''

ஆர்த்தி அப்படி சொல்ல.. அங்கிருந்த அனைவரும் கலகல வென சிரித்தனர்.

நாள் குறிக்கப்பட்டது!

பத்திரிக்கை அடித்து ஊருக்கெல்லாம் கொடுக்கப்பட்டது!

ஷைனிகாவை கொண்டுபோய் பட்டும், தங்கமும், மாணிக்கமும், முத்துமாய் நகைகளையும், புடவைகளையும் வாங்கிக் கொடுத்தனர் அகிலேஷும், ஆர்த்தியும்!

வீட்டில் வேறு பெட்டி பெட்டியாய் பரம்பரை நகைகள்... அவள் வருகைக்காக காத்திருக்கிறது அவள் அழகான சந்தன மேனியை அலங்கரிக்க!

ஷைனிகா மிகமிக சந்தோசமாய் மணநாளை எதிர்பாத்து ஏங்கிக் கொண்டிருந்தாள்!

அகிலேஷும் ஷைனிகாவைப் பிரிந்து இருக்க முடியாமல் தவியாய் தவித்தான்!

மணநாளும் வந்தது!

விடியற்காலையில் குளித்துவிட்டு வந்த ஷைனிகாவை அலங்காரப் பெண்கள் வானத்து தேவதையாய் அலங்கரித்தனர்!

ஊரே திரண்டிருந்தது!

அகிலேஷ் கார்த்திக் பட்டு சட்டை, வேட்டி அணிந்து பெரிய நிலப்பரப்பை ஆளும், ராஜகுமாரனாய் மணவறையில் வீற்றிருந்தான்!

மணப் பெண்ணை அழைக்க... தேவதையாய் உருமாறி ஷைனிகா நடந்து வருவதைக் கண்ட அகிலேஷ் இமைக்க மறந்தான்! பார்த்தான்! பார்த்துக் கொண்டே இருந்தான்!

புரோகிதர் சொல்லச் சொன்ன மந்திரங்களை அகிலேஷ் சொல்லிக் கொடிருந்தான்! ஆனாலும், நொடிக்கொருதரம் ஓரவிழி வேல் பார்வையால் ஷைனிகாவை தீண்டி சிலிர்க்க வைத்தான்!

வாழ்க்கையில் கடந்த காலத்தில் இருளும் ஒளியும் மாறி மாறி வந்திருந்தாலும்

இனி இவர்கள் வாழ்க்கைஜெக ஜோதியாய் ஜொலிப்பது உறுதி என்ற நம்பிக்கை உலகத்து சந்தோசம் எல்லாம் அவளது சின்ன இதயத்தில் குடி கொண்டிருந்தது.

நாமும் வாழ்த்துவோம்!

## முற்றும்

## பட்டுச்சேலை

## பரிசு பெற்றவர்கள்

**பதில் : ஜல்லிக்கட்டு** **12- 02- 2014**

1. **பி.பிரியா, திருநெல்வேலி - 627 110.**
2. **எல். காந்திமதி, ஈரோடு - 638 002.**
3. **ஆர். பானுப்ரியா, சென்னை - 600 119.**

# என்னைப் பற்றி...



**இனிய வாசகர்களுக்கு,**

வணக்கம்!

உங்களை மீண்டும் ''வண்ணம் கொண்ட வெண்ணிலவு' நாவல் மூலம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

நாயகி ஷைனிகா, அவளின் தந்தையின் வாழ்க்கையில் நுழைந்த வேறொரு பெண்ணால் தாயையும் இழந்து, அநாதை இல்லத்தில் வளருகிறாள். இதயத்தில் இருக்கும் ரணத்தின் காரணமாக ஆண் வர்க்கத்தின் மீதே வெறுப்பால் காதலையும், கல்யாணத்தையும் உதறித் தள்ள நினைப்பவள்.

இந்த நிலையில் ஷைனிகாவை சந்திக்கும் அகிலேஷ் கார்த்திக் அவள் மேல் காதல் கொள்கிறான். அவனின் காதலை நிராகரிக்கிறாள். மனக்காயங்களுக்கு மருந்து கிடைத்ததால் அவள் மனநிலை மாறியதா?

காலம் அவளை மாற்றியதா?

விறு விறுப்பான முடிவை நோக்கி நகரும் இந்த நாவல் குறித்து உங்கள் விமர்சனத்தை எதிர்நோக்கி காத்திருக்கும்.

அன்புடன்...

**ஆர். மகேஸ்வரி**

# கோலங்கள்



ரங்கோலி:
-கிரேசி சகாயம்,
காங்கயம்.



11 புள்ளி 11 வரிசை
(நேர்புள்ளி)
**-கல்பனா சந்திரமவுலி,**
**நாக்பூர்.**



9 புள்ளி 5-ல் நிறுத்தவும்.
ஆறுபக்கமும் 2,1 புள்ளி
(இடைப்புள்ளி)
**-என்.பாப்பா,**
**பாளையங்கோட்டை.**



11 புள்ளி 1 முடிய
(நேர்புள்ளி)
**-ராஜேஸ்வரி கனகராஜ்,**
**கவற்குளம்தேரிவிளை.**



11 புள்ளி 3 வரிசை
(நேர்புள்ளி) இருபுறமும்
கோலத்தில் உள்ளவாறு
புள்ளிகள் வைத்து
போடவும்.
**-டி.சந்திரிகா,**
**சென்னை.**



13 புள்ளி 13 வரிசை
(நேர்புள்ளி)
**-பத்மாவதி சுப்பையன்,**
**பாபநாசம்.**

Deviyin KANMANI-Tamil Weekly 05-03-2014 Regd.No.TN/CH(C)/360/12-14 Registered With
Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.

